வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர் ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 01.10.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 295 | பக்கங்கள் : 20


07
ஹர்தீப் சிங் கொலையில் இந்திய உளவுத் துறை?



08
சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்


09
சட்டம் சவக்கிடங்கில்! நீதியின் விலை என்ன?


11
தாமதமாகும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள்

# திருமலை விகாரை நிர்மாணம் எதிர்த்து இன்று போராட்டம்!

திருகோணமலை, ஒக்ரோபர் 01

திருகோணமலை - இலுப்பைக்குளத்தில் தடை விதிக்கப்பட்ட நிலையில் இரகசியமாக முன்னெடுக்கப்பட்டு வரும் விகாரை கட்டுமானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இந்தப் போராட்டம் நடை 15 பெறவுள்ளது.



## ஆபாச காணொலிகளில் இலங்கையர் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 01

ஆபாச காணொலிகளில் தோன்றும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குறிப்பாக கட்டணம் செலுத்தி பார்க்கும் ஆபாச தளங்களில் தோன்றும் இலங்கையர்களின் 15

## இராணுவத்தின் எண்ணிக்கையை ஒரு இலட்சமாக குறைக்க திட்டம்?

கொழும்பு, ஒக். 01

இலங்கை இராணுவ உறுப்பினர்களின் எண்ணிக்கையை எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு இலட்சமாக குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தற்போது இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கொண்டிருக்கும் இராணுவத்தின் 15

## நீதித்துறையைச் சுதந்திரமாக இயங்க செய்வது அரசின் கடமை!

### விக்னேஸ்வரன் எம். பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 01

நீதித்துறையை சுதந்திரமாக செயல்பட வைக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கடமை. இதில் எந்த விதமான மாற்றுக்கருத்துக்கும் இடம் இருக்க முடியாது என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் எம். பியுமான க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜா விவகாரம் குறித்து நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

நீதித்துறைக்கு பங்கம் ஏற்படும் 15

## நீதிபதி சரவணராஜா பதவி விலகல் விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு!



கொழும்பு, ஒக். 01

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளை மேற்கொண்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜா பதவி விலகியமை தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு ஜனாதிபதி இது தொடர்பில் உத்தரவு விடுத்துள்ளார்.

தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக 15

## புதிய அரசியல் கூட்டணி அமைக்க மைத்திரி வீட்டில் இரகசிய சந்திப்பு

கொழும்பு, ஒக். 01

அனுர யாப்பா- நிமல் லான்சா தலைமையிலான புதிய அரசியல் கூட்டணியினர் பல்வேறு அரசியல் கட்சிகளை அடிக்கடி சந்தித்து பேச்சுகளை நடத்தி வருவதாக புதிய அரசியல் கூட்டணியின் இராஜகிரிய பணிமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்படியான விசேட பேச்சு ஒன்று 15

## பிளாஸ்ரிக்கை தடை செய்யும் சட்டம் இன்றுமுதல் அமுலுக்கு

கொழும்பு, ஒக். 01

ஒருமுறை பயன்படுத்தும் மற்றும் குறுகிய கால பிளாஸ்ரிக்கை தடை செய்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இன்று முதல் அமுலுக்கு வரும் என மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

வர்த்தமானியை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் 15

## குடிதண்ணீர் விநியோகம்; 10 இலட்சம் ரூபாய் செலவு!

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 01

யாழ்ப்பாணத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீரை வழங்குவதற்கு சுமார் 10 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த இரு 15

உத்தேச நிகழ்நிலை சட்டம்:

## நிபுணர்களின் கருத்துகளை அரசு பெறுவது அவசியமானது

### அமெரிக்க தூதுவர் ஜூலி சங்



கொழும்பு, ஒக். 01

இலங்கை அரசாங்கம் தனது உத்தேச நிகழ்நிலை (சமூக வலைத்தள) பாதுகாப்பு சட்டமூலம் குறித்து நிபுணர்களின் கருத்துகளை பெறுவது அவசியம் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். இலங்கை நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்து ஆராய்ந்து வருகையில் 15

## முல்லைத்தீவு நீதிபதிக்கு நீதி வழங்கப்படவேண்டும்

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 01

அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட நீதிபதி சரவணராஜாவிற்கான நீதியையும் நிவாரணத்தையும் வழங்குவதற்கும் நீதித்துறையில் சுயாதீனத்தன்மையினையும் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதற்குமான செயற்பாடுகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. 15

## இலங்கை அகதிகளுக்கு இந்திய குடியுரிமை!

### தமிழக முதல்வருக்கு பரிந்துரை

சென்னை, ஒக். 01

தமிழகத்தில் குடியுரிமையின்றி வாழும் இலங்கையர்கள் மற்றும் மலையக தமிழர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சருக்கு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

இந்த பரிந்துரைகள் அடங்கிய இடைக்கால அறிக்கையை அமைச்சரும் இலங்கை தமிழர்களின் நலனுக்கான ஆலோசனை குழுவின் தலைவருமான செஞ்சி கே. எஸ். மஸ்தான் தமிழக முதல்வர் மு.க 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

முல்லைத்தீவு நீதிபதி தனது பதவியை துறந்து கனடாவுக்கு புலம்பெயர்ந்த செய்திதான் இப்போது பேசுபொருளாகியிருக்கின்றது. ஒவ்வொருவரும் தத்தமக்கு புரிந்தவாறு அல்லது தத்தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

ஒரு நீதிவானே இந்த நாட்டில் வாழமுடியாத நிலை இருக்கின்றது என்று கூட சிலர் எழுதுகின்றனர்.

தியாகி திலீபனின் நினைவு தினத்தையொட்டி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்திய ஊர்தி மீது சிங்கள மக்கள் தாக்குதல் நடத்திய செய்தி நாடு முழுவதும் பேசுபொருளாகியிருந்த போது, இந்த நாட்டின் நீதி அமைச்சராக இருக்கின்ற விஜயதாஸ ராஜபக்ஷ, 'நினைவேந்தல்களை தடுக்க யாருக்கும் உரிமையில்லை. இந்த நாட்டில் யாரும் எவரையும் நினைவுகூரலாம்' என்று அறிவித்திருந்தார். ஆனால், பொலிஸாரோ திலீபனின் நினைவேந்தலுக்கு தடைவிதிக்கவேண்டும் என்று கேட்டு நீதிமன்றங்களில் மனு தாக்கல் செய்கிறார்கள். இது ஒன்றே போதும் இந்த நாட்டின் இலட்சணத்தை சொல்வதற்கு.

குருந்தூர் மலை விவகாரத்தில் தனக்கு முன்னால் வந்த வழக்கு ஒன்றில் நீதிபதி சரவணராஜா வழங்கிய தீர்ப்பை பேரினவாதிகளோ அல்லது அந்த இடத்தில் விகாரையை கட்டவேண்டும் என்று விடாப்பிடியாக இருந்த விகாரை அதிபதியான பௌத்த மதகுருவோ கண்டுகொள்ளவில்லை.

நீதிமன்ற உத்தரவை மீறி விகாரையை கட்டியவர்கள் நீதிமன்ற உத்தரவை மதிக்காத போதே இந்த நாட்டின் நீதித்துறை ஏற்கனவே அம்பலப்படுத்தப்பட்டுவிட்டது.

தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் தனது பாதுகாப்பு குறைக்கப்பட்டுவிட்டதாகவும் புலனாய்வாளர்கள் தொடர்ந்து தன்னை கண்காணித்து வந்தனர் என்றும் பதவி விலகிய நீதிபதி தெரிவித்திருக்கிறார். அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் இருந்திருக்கும் என்பதிலோ அல்லது இத்தகைய அழுத்தங்களால் அவர் மனஅழுத்தத்துக்கு ஆளாகியிருப்பார் என்பதிலோ யாருக்கும் எந்த கருத்து வேறுபாடும் இருக்காது.

ஆனால், இந்த சம்பவம்தான் இலங்கையின் நீதித்துறை எவ்வளவு ஆபத்தில் இருக்கின்றது என்பதை பறைசாற்றுகின்ற ஒன்று என்பதுதான் வேடிக்கையானது. தமிழர்கள் அவர் - நீதிபதியாக இருந்தாலும்கூட அவர் தமிழராகவே பேரினவாதிகளால் பார்க்கப்படுகிறார் என்றும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இதுபோன்ற வழக்குகளில் அரசுக்கும் அதிகம் ஏன் இராணுவத்துக்கு எதிராகவும் தீர்ப்பு சொன்ன தமிழ் நீதிபதிகளும் இன்றும் கடமையில் இருக்கிறார்கள். செம்மணி மனித புதைகுழி தொடர்பான வழக்கில் இராணுவத்துக்கு எதிராக தீர்ப்பு சொன்னவர் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன். அவர் தீர்ப்பு சொன்ன காலம் நமது மண் எத்தகைய அச்சுறுத்தல் நிலையில் இருந்தது என்பதும் நமக்கு தெரியாததல்ல.

கன்னியா வெந்நீரூற்றில் விகாரை கட்டப்படுவதற்கு எதிராக மட்டுமன்றி மேலும் பல விகாரைகள் தொடர்பான வழக்குகளிலும் இளஞ்செழியன் தீர்ப்பு சொல்லியிருக்கிறார். அவருக்கு அப்போது உயிராபத்து இருக்காமல் இருந்திருக்காது. ஆனாலும் இன்றும் ஒரு 'நீதிபதி'யாக தொடர்கின்றார். நாளை குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு வந்திருந்தாலும் அவர் ஒரு நீதிபதியாகவே தீர்ப்பு சொல்லியிருப்பார்.

அதற்காக முல்லைத்தீவு நீதிபதி தனது பதவியை இராஜிநாமா செய்த பின்னரே இலங்கையின் நீதித்துறை கறைபடிந்துவிட்டது என்று கூறுவதை கேட்கின்றபோதுதான், அவ்வாறு சொல்பவர்கள் இலங்கையின் நீதித்துறை மீது இதுவரை மதிப்பு வைத்திருந்திருக்கிறார்கள் என்பது புரிந்தது.

லண்டனில் அந்த நண்பர், அங்கு புதிதாக அகதிகளாக போய்ச் சேருபவர்களுக்கு அகதி விண்ணப்பங்கள் கையாள்வதைப் பிரதானமாக கொண்ட ஒரு சொலிசிற்றர். அவருடன் நேற்று பேசிக் கொண்டிருந்த போது அவர் குரலில் ஒருவகை சந்தோசம் தெரிந்தது.

அதனைப் புரிந்துகொள்ள இந்த ஊர்க்குருவியால் முடியாதா என்ன?

'என்ன இப்ப உங்களுக்கெல்லாம் சந்தோசம்தானே. ஒரு நீதிபதியே இந்த நாட்டில் வாழமுடியாதபோது சாதாரணர்கள் எப்படி வாழமுடியும் என்றே கேஸ் எழுதி வென்றுவிடலாமே?' என்றேன்.

சிரித்துக்கொண்டே சொன்னார், 'உண்மைதான், இனி பக்கம் பக்கமாக பொய்களை எழுதவேண்டியதில்லைத்தான்…'.

இந்த ஊர்க்குருவியின் கவலை எல்லாம், நீதிபதி பதவி விலகி இந்த அரசுக்கு பாடம் கற்பித்தது பாராட்டுக்குரியதுதான். ஆனால், அவர் பதவி விலகிவிட்டு இந்த நாட்டில் இருந்து தான் செய்ததில் - அதாவது தனது தீர்ப்பில் எந்தத் தவறும் இல்லை என்று நின்று நிரூபித்து - அதற்காக போராடியிருக்கவேண்டும் என்பதே.

அவர் மீது, அவரின் தீர்ப்பின்மீது இனி அரச தரப்பு தவறுகளை கண்டுபிடித்து அதனை தமது பக்க நியாயமாக முன்வைத்தால் அதற்கு எதிராக வாதிடுவதற்கு அவர் இல்லாமல் போய்விடுவார் என்பதுதான் இந்த ஊர்க்குருவியின் கவலை.

ஏனெனில், அவர் மீது- அவரது தீர்ப்பை கேள்விக்கு உட்படுத்தி இரண்டு வழக்குகளை மேன்முறையீட்டு நீதிமன்றில் சிங்கள பேரினவாதிகள் தாக்கல் செய்திருக்கின்றனர்.

**- ஊர்க்குருவி.**

# தேர்தல் நடத்த அரசாங்கத்துக்கு பெரமுன அழுத்தம் கொடுக்கும்!

## அமைச்சர் விஜேதாச தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 01

"ஜனநாயக சமூகத்தில் சட்டத்தின் ஆதிக்கத்தின் ஊடாக மக்கள் எதிர்பார்க்கும் நோக்கத்தை நிறைவேற்ற சட்டம் தொடர்பான அறிவு மக்களுக்கு அவசியம்" என நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது சட்ட உதவி ஆணைக்குழுவினால் குறைந்த வருமானமுடைய மக்களுக்கு இலவசமாக சட்ட சேவையை பெற்றுக்கொடுப்பதற்காக செயற்திறமையான வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்திருக்கிறோம்.

அதற்காக ஐரோப்பிய சங்கம், ஆசிய மன்றம், யுனெஸ்கோ மற்றும் யு.என்.டீ.பி நிறுவனங்களின் ஒத்துழைப்பு வழங்கி இருக்கிறது.

அதேபோன்று மத்தியஸ்த சபை முறையை பலப்படுத்துவதற்காகவும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதற்கும் சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றிருக்கின்றன. மேலும் கடந்த காலத்தில் எமது நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிக்கு சட்ட ஆதிக்கத்தின் வீழ்ச்சி காரணமாகும். பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு இவ்வாறான வேலைத்திட்டங்களை நடத்துவது மிகவும் அவசியமாகும்.

தேசிய சட்ட வாரத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள் தற்காலத்துக்கு மிகவும் உதவுகின்றன. விசேடமாக பொது மக்களுக்கு சட்டம் தொடர்பான புரிதலை பெற்றுக்கொடுப்பதற்கு சட்டத்தரணிகள் சமூகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற இந்த சேவையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக நீதி அமைச்சினதும் அரசாங்கத்தினதும் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்-என்றார். (அ)

# நாணய நிதியத்தின் நிபந்தனையை அரசாங்கம் செயற்படுத்தவில்லை!

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 01

"அரச கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும்" என்ற சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையை அரசாங்கம் செயற்படுத்தவில்லை என உதய கம்மன்பில குற்றம் சாட்டியுள்ளார்.

மஹரகம பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார பாதிப்புக்குத் தீர்வு காண்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழு உலகத்தையும் வலம் வருகிறார். ஆனால் இதுவரை தீர்வு எட்டப்படவில்லை. ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தவுடன் எரிபொருள், எரிவாயு என்பன வழமைக்கு திரும்பியுள்ளது என ஆளும் தரப்பினர் அவரை புகழ்பாடுவது நாட்டு மக்களை ஏமாற்றும் ஒரு செயற்பாடு.

2022 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெளிநாட்டு கடன்கள் செலுத்திய நிலையில் எரிபொருள்,எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. 2022 ஏப்ரல் மாதமளவில் வெளிநாட்டு கடன்களை செலுத்த முடியாது, இலங்கை வங்கு ரோத்து நிலை அடைந்து விட்டது என அரசாங்கம் அறிவித்தது.

கடந்த ஒன்றரை வருட காலமாக வெளிநாட்டு கடன்களை திருப்பி செலுத்தாமல் அந்த நிதியை கொண்டே எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. வெளிநாட்டு கடன்களை தொடர்ந்து செலுத்தாமல் இருக்க முடியாது.

கடன் பெறுவதையே பிரதான பொருளாதார கொள்கையாக அரசாங்கம் கருதுகிறது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறுவதற்கு மேற்கொண்ட முயற்சிகளும் தற்போது தோல்வியடைந்துள்ளது. கடன் மறுசீரமைப்பில் முன்னேற்றம் இல்லாத காரணத்தால் இரண்டாம் தவணை கடன் வழங்கல் தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த நிபந்தனைகளை நிறைவேற்றியுள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுவது அடிப்படையற்றது. அரசாங்கத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடக்கிய சகல தகவல்களையும் பகிரங்கப் படுத்தவேண்டும் என்ற நிபந்தனையை அரசாங்கம் செயற்படுத்தவில்லை. இந்த நிபந்தனை நிறைவேற்றப்பட்டால் அரச நிர்வாகத்தில் நிலவும் ஊழலை பகுதியளவேனும் குறைத்துக் கொள்ளலாம் - என்றார். (அ)

# பயணியின் நகைகளை திருடிய விமான நிலைய அதிகாரி கைது

கொழும்பு, ஒக். 01

வெளிநாடு செல்வதற்காக வருகை தந்த பெண்ணொருவரின் தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான சேவை பாதுகாப்புப் பிரிவில் ஸ்கானிங் இயந்திரத்தை பரிசோதனை செய்யும் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 29 வயதுடைய ஹீனடியன பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், வெளிநாடு செல்ல விமான நிலையம் வருகை தந்த பெண்ணிடமிருந்து தங்கச் சங்கிலி மற்றும் பென்ரன் என்பனவற்றை திருடியதாக செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, சந்தேக நபரிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில், திருடப்பட்டதாகக் கூறப்படும் தங்கச் சங்கிலியை நகைக் கடை ஒன்றில் விற்பனை செய்துள்ளதாக சந்தேக நபர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்தபோது சந்தேக நபர் விற்பனை செய்ததாகக் கூறப்படும் தங்கச் சங்கிலி விற்பனை செய்த பின்னர் உருக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும், குறித்த பெண்ணிடம் இருந்து திருடிய பென்ரன் மற்றும் இன்னுமொரு பெண்ணின் கைப்பையில் இருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் சிறிய அளவிலான தங்க மோதிரங்கள் என்பனவும் மற்றுமொரு நகை கடையொன்றில் அடகு வைக்கப்பட்டிருப்பதும் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நீதிபதியின் பதவி விலகல் தொடர்பில் முழுமையான விசாரணை வேண்டும்!

## ஜீவன் தொண்டமான் வலியுறுத்தல்

கொழும்பு, ஒக். 01

**முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.**

குறித்த விவகாரம் தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'குருந்தூர்' மலை விவகாரம் தொடர்பில் வழங்கப்பட்ட தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு எதிராக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள விவகாரம் நீதித்துறையின் நிலை குறித்து கேள்வியை உருவாக்கியுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதில் நீதிபதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களுக்கு எதிரான அச்சுறுத்தலானது நீதி மற்றும் ஜனநாயகத்திற்கு எதிரான அச்சுறுத்தலாகும். எனவே, நேர்மையுடன் நீதி வழங்குபவர்களைப் பாதுகாப்பதும், அவர்களுக்கு ஆதரவளிப்பதும் நமது கூட்டுப் பொறுப்பு எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் கூறியுள்ளார். (அ)

# முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை தொடர்பு கொள்ள முடியவில்லை

## சாலிய பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 01

பதவி விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவண ராஜாவை தொடர்பு கொள்ள முடியவில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் மற்றும் இவ் விடயம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து ஆராய்ந்து வருவதாகவும் அவர் கூறினார்.

உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் மிகையான அழுத்தங்கள் காரணமாகத் தனது அனைத்து பதவிகளிலிருந்தும் விலகுவதாக குறிப்பிட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவியை துறந்து நாட்டை விட்டும் வெளியேறியுள்ள நிலையில், அவரைத் தொடர்புகொள்ள முற்பட்டும், அது சாத்தியமாக வில்லை எனவும் குறிப்பிட்டார்.

ஆத்துடன், நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் கடிதம் மற்றும் அவர் கூறியதாக சமூகவலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் வெளியாகியுள்ள விடயங்கள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் சுட்டிக்காட்டினார். (அ)

# எனது உடல்நிலைக்கு எந்த பாதிப்பும் இல்லை

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 01

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தான் சிறந்த உடல் நிலையுடன் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களின் கேள்வியொன்றிற்கு பதிலளித்துள்ள அவர், நான் நல்ல உடல்நிலையுடன் உள்ளேன். சமூக ஊடகங்களில் வெளியாகும் தகவல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டாம் என அவர் தெரிவித்துள்ளார்.

நான் நோய்வாய்ப்பட்டுள்ளேனா அல்லது நல்லநிலையில் உள்ளேனா என்பதை உங்களால் பார்க்க முடியும். சமூக ஊடகங்களில் வெளியாகும் விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடாது என அவர் கூறினார்.

தொடர்ந்தும் பொதுஜன பெரமுனவின் தலைவராக இருக்கவிரும்பவில்லை. இளையவர் ஒருவருக்கு அந்த பொறுப்பை வழங்கவேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

# சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவக் கடற்படை தயார்!

கொழும்பு, ஒக். 01

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக நிவாரண குழுக்கள் விழிப்புடன் இருப்பதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இதன்படி, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் பணிப்புரையின் பேரில், தென் மாகாணத்தின் பல பகுதிகளில் அனர்த்த நிவாரணக் குழுக்களை அனுப்பவும், திடீர் வெள்ளம் ஏற்பட்டால் மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், அவர்களை மீட்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அனர்த்தத்திலிருந்து மீட்பதற்காக, காலி, அக்குரஸ்ஸ, அத்துரலிய மற்றும் தவலம ஆகிய பகுதிகளுக்கு தலா ஒரு நிவாரணக் குழுவும் கம்புருபிட்டிய பகுதிக்கு இரண்டு நிவாரணக் குழுக்களும் அனுப்பப்பட்டுள்ளன.

இதேவேளை, வெள்ள அபாயத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்குவதற்காக கடற்படையின் மேலதிக நிவாரண குழுக்கள் தயார்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (அ)

# இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் முட்டை விநியோகத்தில் பெரும் மோசடி

கொழும்பு, ஒக். 01

அரசாங்கம் தரம் குறைந்த முட்டைகளை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்துள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத் தலைவர் அசேல சம்பத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்திய முட்டைகளை இலங்கைக்கு இறக்குமதி செய்வதன் மூலம் பாரிய தரகு மோசடி நடைபெறுவதாகவும் , அதனை நிரூபிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா அகற்றும் பாவனைக்கு உதவாத முட்டைகள் கொண்டு வரப்படுவதாகவும், குறைந்த விலைக்கு முட்டைகள் கிடைத்தாலும் சந்தைக்கு வரும்போது விலை பெருமளவு அதிகரிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# வாழைப்பழத்துக்குள் ஹெரோயின் கடத்தல்!

கொழும்பு, ஒக். 01

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களுக்கு கொண்டு வரப்பட்ட வாழைப்பழ சீப்பில் ஹெரோயின் என சந்தேகிக்கப்படும் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் மாலை களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு சந்தேக நபர்களை பார்வையிட வந்த நபர் ஒருவர் சந்தேக நபர்களுக்கு வழங்குவதற்காக உணவை எடுத்து வந்துள்ளார்.

அதில் சந்தேகநபர்களுக்கு வழங்குவதற்காக கொண்டு வரப்பட்ட வாழைப்பழங்களில் 3, 4 அங்குலங்கள் கொண்ட 16 ஸ்ட்ரோ குழாய்களுக்குள் இந்த ஹெரோயின் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் போதைப் பொருட்களை கொண்டு வந்த நபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக களுத்துறை வடக்கு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் களுத்துறை சிறைச்சாலையால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

# வவுனியாவில் 60 ஆயிரம் ஏக்கரில் இம்முறை பெரும்போக நெற்செய்கை

வவுனியா, ஒக். 01

வவுனியாவில் இம்முறை 59 ஆயிரத்து 564.35 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.வவுனியா மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக நிலவிய வறட்சியுடனான வானிலை காரணமாக குளங்களில் நீர் வற்றியுள்ளது.

தற்போதைய நிலையில் வவுனியாவில் பெரும்போக விவசாய நடவடிக்கையை விவசாயிகள் ஆரம்பிக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் இனிவரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால், பெரும்போக விவசாய நடவடிக்கையினை மேற்கொள்ள முடியுமென விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அதற்கிணங்க இம்முறை வவுனியாவில் 59 ஆயிரத்து 564.35 ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# சரத் என் சில்வா வீட்டில் திருட்டு!

கொழும்பு, ஒக். 01

கட்டான பிரதேசத்தில் உள்ள முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் வீட்டில் கடந்த 27ஆம் திகதி இரவு பித்தளை யானையொன்றும் மினி தாஜ்மஹால் பிரதியொன்றும் திருடப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொச்சிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கொழும்பில் வசிப்பதாகவும், கிழக்கு கட்டான பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டின் பின்கதவை உடைத்து இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். வீடு மற்றும் நிலத்தை கவனிக்க பகலில் மட்டும் காவலாளி இருப்பார் என பொலிஸார் கூறினர்.

கடந்த 28ஆம் திகதி காலை முன்னாள் பிரதம நீதியரசரின் வீட்டுக்கு வந்த காவலாளி, வீட்டைச் சுற்றிச் சோதனையிட்டபோது, வீட்டின் பின் பக்க கதவு உடைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்தார்.

பின்னர் கொச்சிக்கடை பொலிஸார் அந்த வீட்டில் சோதனை நடத்தினர். சோதனையில், வீட்டில் இருந்த பித்தளையால் செய்யப்பட்ட யானை மற்றும் தாஜ்மஹாலின் சிறிய பிரதி ஆகியவை திருடப்பட்டமை தெரியவந்தது.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் கொச்சிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஸ்ரீநாக ஜெயக்கொடி மற்றும் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பெரிய வெங்காயத்துக்கு நியாய விலை இல்லை!

கொழும்பு, ஒக். 01

பொலனறுவை பகுதியில் பெரிய வெங்காய அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் அதற்கு உரிய விலை கிடைக்க வில்லை என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறித்த பகுதிகளில் 30 ஏக்கர் அளவான நிலப்பரப்பில் பெரிய வெங்காயச் செய்கை இடம் பெற்றிருந்தது.

இந்தநிலையில், உள்நாட்டு விவசாயிகளை பாதுகாப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்துக்கான வரியினை அரசாங்கம் மேலும் அதிகரிக்க வேண்டும் என குறித்த பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை, அநுராதபுரம் பகுதியிலும் தற்போது நிலக் கடலை அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய விலையில் நிலக் கடலை விற்பனை செய்யப்படாமையினால் பயிர்ச்செய்கைக்காக செலவிடப்பட்ட தொகையைக் கூட பெற்றுக் கொள்ள முடியாதநிலை உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# புதிய கூட்டணி அலுவலகத்தை ராஜகிரியவில் திறந்தார் லான்சா

## தீவிர பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பித்தார்

கொழும்பு, ஒக். 01

**பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தலைமையில் உருவாக்கப்பட்டுவரும் புதிய அரசியல் கூட்டணியின் அலுவலகம் கொழும்பு ராஜகிரிய பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ளது.**

இந்த அலுவலகத்தில் இருந்து அடுத்தகட்ட பணிகளை முன்னெடுக்க உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

அலுவலகம் திறக்கப்பட்டது முதல் இதுவரை 20இற்கும் அதிகமான தொழிற்சங்கங்களின் தலைவர்களும் ஒருசில கட்சியின் தலைவர்களும் இங்கு பேச்சுவார்த்தைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஜனாதபதித் தேர்தலை இலக்குவைத்து புதிய கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சியில் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா ஈடுபட்டு வருகிறார்.

இந்தக் கூட்டணியில் பல்வேறு கட்சிகளை இணைத்துக் கொள்ள அவர் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதுடன், கூட்டணியின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷ யாப்பாவை நியமிக்கும் முன்மொழிவுகளும் இடம்பெற்றன.

இவ்வாறான பின்புலத்திலேயே புதிய அலுவலகத்தின் பணிகளையும் நிமால் லான்சா ஆரம்பித்துள்ளார். (அ)

# நீதிபதியின் பதவி விலகலுக்கு அரசு பொறுப்பு கூறவேண்டும்

## கூறுகின்றார் சிறிகாந்தா

யாழ்ப்பாணம், ஒக். 01

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பான வழக்கினை முன்னெடுத்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி, தனது பதவியை இராஜினாமா செய்து நாட்டை விட்டு வெளியேறியதற்கான முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சார்ந்தது என தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

பாராளுமன்றத்துற்குள்ளே எழுப்பப்பட்ட இனவெறிக் கூச்சல்களுக்கு அப்பால், அதிகாரத் தரப்பினால், நேரடியாகவும் மறைமுகமாகவும் நீதிபதி மீது பிரயோகிக்கப்பட்ட உளவியல் ரீதியான அழுத்தங்களே, அவரை இந்த முடிவுக்கு இட்டு சென்றது.

அத்துடன், தமது கடமையை நேர்மையுடன் செய்ய விரும்பும் சகல நீதிபதிகளுக்கும் இது ஓர் சிவப்பு எச்சரிக்கை என்பதை, அனைத்து மக்களும் புரிந்து கொள்ள வேண்டிய நிலைமைக்குள் முழு நாடும் தள்ளப்பட்டுள்ளது.

குருந்தூர் மலை விவகாரம் என்பது நீதித் துறையின் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்டிருக்கும் பாரிய சவாலாகும். எமது ஒன்றுபட்ட எதிர்ப்பை நாம் வெளிப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

# அமெ. குடியுரிமையை கைவிட போவதில்லை

## பசில் ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 01

அமெரிக்க குடியுரிமையை கைவிடபோவதில்லை என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் தான் இதே நிலைப்பாட்டில் இருந்து வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் சார்பில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

மழை பெய்தால், குளம் நிரம்பும் போன்ற நிலைமையே தற்போது காணப்படுகிறது.

எவ்வாறாயினும் கட்சி என்ற வகையில் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும் என்ற பலமான யோசனை முன்வைக்கப்பட்டு வருகிறது. எனினும் ஜனாதிபதி தேர்தலில் நிறுத்தப்பட போகும் வேட்பாளர் யார் என்பதை இதுவரை தீர்மானிக்கவில்லை எனவும் பசில் ராஜபக்ஷ மேலும் கூறினார்.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தனது அமெரிக்க குடியுரிமையை கைவிட்டு, இலங்கையின் அரசியலில் நேரடியாக பங்குப்பற்றுவார் என அந்த கட்சியினர் மத்தியில் பேசப்பட்டு வந்தது.

இலங்கையின் சட்டத்திற்கு அமைய இரட்டைக் குடியுரிமையை கொண்டுள்ள பசில் ராஜபக்ஷ இலங்கையில் அரசியல் ரீதியான அதிகார பதவிகளையோ, அரச உயர் பதவிகளையோ வகிக்க முடியாது.

இந்த நிலையிலேயே அமெரிக்க குடியுரிமையை கைவிடப் போவதில்லை என பசில் மீண்டும் கூறியுள்ளார். (அ)

# 2024 இல் ஜனாதிபதியாகும் தகைமை ரணிலுக்கே உண்டு!

## இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் கருத்து

கொழும்பு, ஒக். 01

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகும் தகைமை ரணில் விக்கிரமசிங்கவுக்கே காணப்படுவதாக நலன்புரி சேவைகள் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியாக பிறிதொருவர் தெரிவு செய்யப்பட்டால் நிலையான பொருளாதார மீட்சிக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள சகல திட்டங்களும் பலவீமடையும். 2024 ஆம் ஆண்டு நிச்சயம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும். தேர்தலை பிற்போடவேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தல் நடத்தப்படும். எந்த அரசியல் கட்சியும் இதுவரை ஜனாதிபதி வேட்பாளரை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை.

அரசாங்கத்தை ஏற்க தயார் என்று தற்போது குரல் எழுப்பும் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட எதிரணியினர் கடந்த ஆண்டு நாடு பாரிய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை எதிர்கொண்ட போது அரசாங்கத்தை பொறுப்பேற்கவில்லை. நாடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நிபந்தனை விதித்து கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்.

நெருக்கடியான சூழ்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே எவ்வித நிபந்தனைகளுமில்லாமல் அரசாங்கத்தை பொறுப்பேற்றார். ஜனாதிபதியின் சிறந்த முகாமைத்துவ திட்டங்களினால் நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளது. நிலையான பொருளாதார மீட்சிக்கான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகும் தகைமை ரணில் விக்கிரமசிங்கவுக்கே உண்டு. நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளது. ஜனாதிபதியாக பிறிதொருவர் தெரிவு செய்யப்பட்டால் நிலையான பொருளாதார மீட்சிக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள சகல திட்டங்களும் பலவீமடையும். ஜனாதிபதி தேர்தலுக்கான உத்தியோகப்பூர்வ அறிவிப்பு வெளியானதும் புதிய அரசியல் கூட்டணி உதயமாகும். பலர் அரசியல் கூட்டணியில் ஒன்றிணைவார்கள்-என்றார். (அ)

# மின்சாரக் கட்டண அதிகரிப்பினால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படும்!

கொழும்பு, ஒக். 01

மின்சார கட்டண அதிகரிக்கப்படுகின்றமையின் ஊடாக தொழிற்சாலைகள் பாதிக்கப்படும் என மின்சார பாவனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் உற்பத்திப் பொருட்களின் விலையும் அதிகரிக்கக் கூடிய சாத்தியம் நிலவுவதாக அதன் தேசிய அமைப்பாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்தார்.

இன்று முதலாம் திகதியிலிருந்து மின்கட்டணத்தை திருத்துவதற்கு இலங்கை மின்சார சபை, பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மின்கட்டண திருத்தம் இடம்பெறவுள்ள முறைமை தொடர்பில் இரண்டு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜூலை மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடையேயான திட்டமிடப்பட்ட செலவீனங்கள் அதிகரித்துள்ளதாக மின்சார சபை, பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.

நீர் மின்னுற்பத்தியின் வீழ்ச்சி மற்றும் நிலக்கரி ஊடான மின்னுற்பத்தியின் வீழ்ச்சி என்பன காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கை மின்சார சபையின் மின்சார கட்டண திருத்த யோசனையை அவசரமாக பரிசீலிக்குமாறு அமைச்சரவை சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளது.

மேலும், அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் திட்டமிடப்பட்டுள்ள மின் கட்டண திருத்தத்தை இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.

உத்தேச புதிய மின்சார கட்டண திருத்தத்தின் யோசனைக்கு அமைய, தற்போதைய மாதாந்த மின்சார கட்டணத்துடன் 22 சதவீதத்தை இணைப்பதற்கு இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ளது.

அவ்வாறு இல்லாவிட்டால் 0 முதல் 30 வரையான அலகுகளுக்கு அறவிடப்படும் 10 ரூபாய் என்ற அலகொன்றுக்கான கட்டணத்தை 18 ரூபாவாகவும், 31 முதல் 60 அலகுகளுக்கான கட்டணத்தை 25 ரூபாவிலிருந்து 33 ரூபாவாகவும் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறாயினும் இது தொழிற்துறையினரை வெகுவாக பாதிக்கும் என மின்சார பாவனையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்துள்ளார். (அ)

## மருந்துக் கொள்வனவு முறைகேடு:

# ஆராய நியமிக்கப்பட்ட குழுவில் சிக்கல் நிலை

கொழும்பு, ஒக். 01

மருந்துக் கொள்வனவில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு தொடர்பில் திருப்தி அடைய முடியாது என முன்னிலை சோஷலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

அதன்படி, மருந்துக் கொள்வனவு தொடர்பான டெண்டர் நடைமுறையில் ஈடுபட்ட அதிகாரிகளே உரிய குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக குறித்த கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

மருந்துகளை மிகக் குறைந்த விலைக்கு வாங்கக்கூடிய போதும் அதிக விலை கொடுப்பதன் மூலம் இந்த மோசடியை செய்துள்ளதாக அவர் கூறினார்.

இதன் மூலம் பொதுமக்களின் பணம் 10 கோடியே 85 இலட்சத்து 55 ஆயிரத்து 948 ரூபாய் 63 சதங்கள் மேலதிகமாக செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஜெயகொட-

“அண்மையில் யாதென் நிறுவனத்திடம் இருந்து அதிக விலைக்கு மருந்துகளை கொள்வனவு செய்ததால் இழந்த தொகை 10 கோடி டொலர்களை விட அதிகம். சுமார் 30 பில்லியன் ரூபாய்.

இந்த பிரச்னை இருந்த போதிலும் கூட ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளில் 12 வகையான மருந்துகளுக்கு அந்த நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனம் தரமற்ற மருந்துகளை அதிக விலைக்கு விற்பனை செய்கிறது. - என்றார்.

(அ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
01.10.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சர்வதேசம் என்ன செய்யும்?

முல்லைத்தீவு நீதிபதியின் பணி விலகல் இலங்கையின் அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. நேற்றுவரையில் சனல் - 4 விவகாரத்தை முன்வைத்து விவாதித்துக் கொண்டிருந்தவர்கள் அனைவரும் தற்போது - இலங்கையின் நீதித்துறை தொடர்பான விவாதங்களுக்கு மாறியிருக்கின்றார்கள்.

இலங்கையின் நீதித்துறையிலுள்ள அரசியல் அதிகார குறுக்கீடுகள் எவையும் புதியவையல்ல - இதேவேளை, ஆச்சரியமானவையுமல்ல. ஆனால், அதனை காரணம் காண்பித்து ஒரு தமிழ் நீதிபதி பதவி விலகுவதாக அறிவித்திருப்பதும் நாட்டைவிட்டு வெளியேறியிருப்பதும் சாதாரணமாகக் கடந்து செல்லக்கூடிய விடயமில்லைதான். இது தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களின் வழமையான எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளனர்.

குருந்தூர்மலை விவகாரத்தில் சரத் வீரசேகர மற்றும் தென்னிலங்கையின் அடிப்படைவாத சக்திகள் தொடர்ந்தும் சத்தமிட்டவாறே இருந்தன. பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி நீதிபதியை எச்சரிக்கும் வகையிலான கருத்துகளையும் சரத் வீரசேகர வெளியிட்டிருந்தார். சரத் வீரசேகர போன்றவர்களுக்கு தென்னிலங்கையில் எவ்வாறான செல்வாக்கு இருக்கின்றது என்பதற்கு அப்பால், அவ்வாறான சிறிய குழுவினரே பெரும்பான்மையினரின் அரசியல் நகர்வுகளை தீர்மானிப்பவர்களாக மாறிவிடுகின்றனர். இதுதான் இலங்கை சிங்கள அரசியலின் சாபக்கேடு. தென்பகுதியிலுள்ளவர்கள் என்னதான் அரசியல் விவாதங்களை செய்தாலும்கூட, இறுதியில் அனைவரும் சரத் வீரசேகர போன்றவர்களின் கூக்குரல்களுக்கு தலையசைப்பவர்களாகவே இருக்கின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் அழுத்தங்களை எதிர்கொண்டதாகக்கூறி நீதிபதி ஒருவர் நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றார். அழுத்தங்களை எதிர்கொள்பவர்கள் பதவியிலிருந்து விலகி செல்வதன் மூலம் பிரச்னைகளை எதிர்கொள்ள முடியாது - மாறாக, பிரச்னைகளை அம்பலப்படுத்துவதற்கான ஒரு கருவியாக அதனை கைக்கொள்ளலாம் - ஆனால், அதனையும்கூட நாம் ஊக்குவிக்க முடியாது - ஏனெனில், இதனை ஒரு வாய்ப்பாகக் கருதி ஏனையவர்களும் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முயற்சிக்கலாம். தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறினால் அதனால், சரத் வீரசேகர போன்றவர்களுக்கு என்ன தீங்கு ஏற்படப் போகின்றது? தென்னிலங்கையை பொறுத்தவரையில் மகிழ்ச்சியான விடயம்தான் - ஏனெனில், ஏற்கனவே வடக்கு - கிழக்கிலிருந்து 13 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வெளியேறிவிட்டனர்.

இவ்வாறான பிரச்னைகள் வெளிவருகின்ற போது எங்களுக்கு முன்னால் இருக்கின்ற ஒரேயொரு பதில் - சர்வதேசம் இதில் தலையீடு செய்ய வேண்டும். நீதிபதி விடயத்தில் சர்வதேச விசாரணை இடம்பெற வேண்டுமென்று சம்பந்தன் கூறுகின்றார். இலங்கையில் இடம்பெறும் விடயங்கள் அனைத்தையும் சர்வதேச சமூகமென்று நாங்கள் நம்பிக் கொண்டிருப்பவர்கள் எங்களை விடவும் அறிவர். கொழும்பிலுள்ள தூதரகங்கள் அனைத்தையும் அவதானித்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனாலும் நாங்கள் எதிர்பார்த்தவாறு விடயங்களில் முன்னேற்றங்கள் இடம்பெறவில்லை. அவ்வாறாயின் சர்வதேசத்தை நோக்கி தமிழர் செயல்பாடுகளும் புத்தாக்கம்மிக்கதாக மாற வேண்டும். தமிழ்த் தேசிய கட்சிகள் மத்தியில் சர்வதேசத்தை நோக்கிய செயல்பாடுகள் ஒருங்கிணைந்ததாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் மாற வேண்டும்.

# ராஜபக்ஷவினருக்கு சேறு பூச மேற்கொண்ட முயற்சி தோல்வி

### எஸ்.எம்.சந்திரசேன கூறுகிறார்




*கொழும்பு, ஒக். 01*

ராஜபக்ஷவினருக்கு எதிராக சேறுபூச மேற் கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய புலனாய்வுச் சேவையின் பிரதானி சுரேஷ் சாலே மற்றும் சஹ்ரான் இடையில் தொடர்பு இருந்தது என்ற செய்தி அனைத்து ஊடகங்களிலும் பிரதான தலைப்புச் செய்தியாக காணப்பட்டது.

அதனை பெரிதுப்படுத்தி கோஷம் போடுகின்றனர். குற்றச்சாட்டை எதிர்நோக்கும் தரப்பினர் பிரச்னையை எங்கள் பக்கம் திசை திருப்ப பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

இறுதியில் கோட்டாபய ஜனாதிபதியாக பதவிக்கு கொண்டு வரவும் மொட்டுக் கட்சியின் அரசாங்கத்தை அமைக்கவும் ராஜபக்ஷவினர் செய்த வேலை என சித்திரிக்க பலர் முயற்சித்தனர்.

ராஜபக்ஷவினர் மீது சேறுபூச வேண்டும் என்பதே இவர்களது எதிர்பார்ப்பு. இதேபோலவே அனைத்தையும் ராஜபக்ஷவினர் பக்கம் திசைத்திருப்பி ராஜபக்ச வினரை தாக்க முயற்சிக்கின்றனர்.

ராஜபக்ஷவினர் காரணமாக நாம் தற்போது மூச்சு விடுகின்றோம். அவர்கள் காரணமாகவே நாட்டில் சமாதானம் ஏற்பட்டது.

மகிந்த ராஜபக்ச இருக்கவில்லை என்றால், சனல் 4 தொலைக்காட்சி தனக்கு தேவையானவற்றை செய்து கொண்டிருக்கும்.

சனல் 4 தொலைக்காட்சி அந்த காலத்தில் எப்படி நடந்துகொண்டது என்பதை நாம் அறிவோம்.

பல்வேறு விதமாக தவறான தகவல்களை முன் வைத்து ராஜபக்ஷவினர் மீது சுமத்தும் தேவை அந்த தொலைக்காட்சிக்கு இருந்தது.

அதேபோல் சமூக ஊடகங்கள் தொடர்பான சட்டமூலத்திற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது. இந்த சட்டமூலம் தொடர்பில் பூச்சாண்டிகளை உருவாக்க நிலையத்தாலும் அப்படியான பயங்கரமான விடயங்கள் எதுவும் அதில் இல்லை-என்றார். (அ)

# சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றத்தை புறக்கணிக்கவேண்டும்

### ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரிக்கை

*யாழ்ப்பாணம், ஒக். 01*

பாராளுமன்றத்தை ஒட்டு மொத்த தமிழ் எம்பிகளும் புறக்கணிக்க வேண்டும் என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரிக்கை முன் வைத்துள்ளது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்-

மிக உன்னதமான நீதித் துறையில் தலைசிறந்த அஞ்சா நெஞ்சுரத்துடன் குருந்தூர் மலை சட்டவிரோத பௌத்த கட்டுமானம், உள்ளிட்ட விவகாரங்களில் யாருக்கும் அடிபணியாமல் தீர்ப்புக் களை வழங்கிய முல்லைத்தீவு நீதிபதி மாண்புமிகு சரவண ராஜா அவர்கள் அழுத்தங்களால் பதவி விலக நிர்ப் பந்திக்கபட்டு உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை வெளியேறி உள்ளமை தமிழர்களை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

இது இந்த நாட்டின் நீதிப் பொறிமுறையையே கேள்விக்குறி ஆக்கியுள்ளது.

இந்நிலையில் தமிழ் நீதிபதிகள் தீர்ப்பு வழங்க முடியாத நாட்டின் சட்டவாக்க சபையான குருந்தூர் சட்டவிரோத பௌத்த கட்டுமானம் தொடர்பாக நீதியான தீர்ப்பு வழங்கியமைக்காக தொடர் அழுத்தம் உயிர் அச்சுறுத்தலுக்கு ஆளாகி முல்லைத்தீவு நீதிபதி பதவியை துறக்க நிர்ப்பந்திக்கப்பட்ட மாண்புமிகு சரவண ராஜா அவர்களின் நேர்மையை போற்றும் வகையில் தமிழ்ச்சமூகமாக ஆதரவை வெளிப்படுத்துவதுடன் அவரின் இந்த முடிவுக்கு காரணமான அழுத்தங்களை பிரயோகித்த சகல தரப்பினர் மீதும் நடவடிக்கை எடுக்கும் வரை தமிழர் சார்ந்த அனைத்து கட்டமைப்புக்களும் குறிப்பாக சட்டவாளர்கள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பிக்கவும் வேண்டுகின்றோம்.

இலங்கையின் சகல முற்போக்கு சக்திகளும் சர்வதேசமும் ஐ.நா அமைப்புக்களும் நீதியை வழங்கும் நீதிபதிக்கே ஏற்பட்டுள்ள இந்த பாரதூர நிலையை சீர்செய்ய நீதி பரிபாலனம் சுயாதீனமாக இயங்க உச்சபட்ச நடவடிக்கைகளை இந்த தீர்க்கமான தருணத்தில் எடுக்க வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -97

# வாடகைப் பயணங்கள்...

**கணபதி சர்வானந்தா**

தற்போது எம்மிடையே சர்ச்சைக்குரியதென்றாகவும், அதிக பேசு பொருளாக இருக்கும் முச் சக்கரவண்டிக் கட்டணம் தொடர்பாகவே எனது அனுபவப் பகிர்வு அமைகிறது.

தற்பொழுது வாடகை வண்டி தொடர்பான ஒரு நிறுவனம் யாழ்.குடநாட்டுக்குள் நுழைந்தது தொட்டு எழுந்திருக்கிறது இச் சர்ச்சை. உள்ளூர் முச்சக்கர வண்டித் தொழிலாளர் சங்கம் இது தொடர்பானதொரு விளம்பரத்தையும் வெளியிட்டு நியாயம் கேட்டிருக்கிறது.

இந்தப் புது வரவால் பணத்தை மிச்சம் பிடிக்கலாமா? என்பதை அறிய ஊடகவியலாளர் என்ற முறையில் ஒரு அலசலை மேற்கொண்டேன். அதற்காக அச்செயலியினூடாகச் செயற்படும் ஒரு வண்டியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டேன். அவரிடம் பேச்சுக் கொடுத்தபோது அவர் ஒன்றை ஒத்துக்கொண்டார். தம்மால் செயற்படுத்தப்படும் இந்தச் செயலி நகர எல்லைக்குள் இலாபகரமாகத் தென்பட்டாலும் தொலை தூரப் பயணத்துக்கு இலாபகரமானதாக இல்லை. சற்று அதிக கட்டணத்தையே அறவிடுகிறோம். இச்செயலி அதற்கேற்றவாறு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. முன் திட்டமிடப்பட்டிருக்கிறது.

உதாரணமாக உள்ளூர் முச்சக்கர வண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு பயணத்தை ஆரம்பிக்கு முன்னர் அதன் சாரதியோடு கட்டணதைப் பேசித் தீர்த்துக் கொள்கிறோம். போவதற்கு ஆகும் செலவில் ஒரு பகுதியே வருவதற்கு அறவிடப்படும். நிறுத்தி வைப்பதற்குக் கட்டணம் அறவிடப்படுவ தில்லை. இவ்வாறு அனைத்தையும் உள்ளடக்கியே அவர்கள் அக் கட்டணத்தை அறவிடுகிறார்கள்.

ஆனால் இது போன்ற செயலியில் அது வேறு விதமாகக் கையாளப்படும். அனைத்தையும் அச்செயலியே தீர்மானிக்கிறது. அது தொடர்பாக அனைத்தும் அந்நிறுவனத்தால் கண்காணிக்கப்படுகிறது. போக ஒரு கட்டணம். வர ஒரு கட்டணம். இடையில் ஓடாது நிறுத்தி வைத்தாலோ அதற்கும் கட்டணம் அறவிடப்படும். மொத்தத்தில் பார்த்தால் தொலை தூரப் பயண முடிவொன்றில் ஒரு பெருந்தொகைப் பணத்தை நாம் கட்டணமாகச் செலுத்தி இருப்போம்.

அது தொடர்பான எனது முகநுல் அன்பர் தனது முகநூல் கணக்கில் ஒரு விளக்கத்தைத் தந்திருக்கிறார். இக்காலத்துக்குப் பயனுள்ளதென்றபடியால் பகிர்கிறேன்.

வாடகைக் கார்ப் பயணத்தில் கல்லா கட்டும் பெருவணிக (Cooperate) நிறுவனங்கள்: எனது மலேசிய அனுபவம் இது.

இது போன்ற நிறுவனங்கள் இப்போதுதான் யாழ்ப்பாணத்திற்கு அறிமுகம். இத்தகைய நிறுவனங்களின் வியாபாரத் தந்திரங்களை அறியாத சிலர் பயணச் செலவு பாதியாகக் குறைந்துவிட்டது என ஆர்ப்பரிக்கின்றனர். அறிமுக காலத்துக்குப் பின்னர் இந்த நிறுவனங்கள் எப்படி செயல்படும் என்பதை மலேசிய அனுபவத்திலிருந்து விவரிக்கிறேன்.

நான் கல்விகற்கும் மலாயப் பல்கலைக்கழக விரிவுரை மண்டபத்திற்கும் ரயில்வே ஸ்டேஷனுக்கும் இடையிலான தூரத்துக்கு வழமையாகக் கார் சாரதிகள் அறவிடும் கட்டணம் 5 வெள்ளிகள் மட்டுமே. ஆனால் கார்ப்பரேட் நிறுவனத்தின் ஆரம்பக் கட்டணமே 7 இல் தான் ஆரம்பிக்கிறது. Peak Hours என்றால் 9 வெள்ளிகள் மழை பெய்தால் 11 வெள்ளிகள் லீவு நாட்களில் சாரதிகள் குறைவு என்றால் 15 வெள்ளிகள் இரவுநேரம் ஆகிவிட்டது என்றால் 18 வெள்ளிகள் முன்னிரவில் மழையும் பெய்தால் 21 வெள்ளிகள். ஒரே கார் - ஒரே பயண தூரம் - ஒரே பெட்ரோல் செலவு ஆனால் அறவிடும் கட்டணம் ஒரே நாளில் 7 முதல் 21 வெள்ளிகள் வரை மாறுபடுகிறது. தரகுக் கூலியில் கொள்ளை இலாபம் பார்ப்பதற்காக நிகழ்த்தும் நாடகம் இது. இதைவிட, பெற்றோல் காரிலேயே Zero Carbon Travel சாத்தியம் என்றெல்லாம் போக்கு காட்டி கொஞ்சம் மேலதிக பணத்தை அறவிடவும் முயற்சிக்கின்றார்கள்.

ஒரு நாள் பல்கலைக்கழகத்தில் மாலை நேரவகுப்புகள் முடிந்து ஒன்பது மணி. விரிவுரை மண்டபத்திற்கு வெளியே வந்து பார்க்கிறேன் நல்ல மழையும் பெய்கிறது. வழமையாக ரயில்வே ஸ்டேஷனுக்கு நடந்தோ அல்லது கார்ப்பரேட் அல்லாத வாடகை கார்களை 5 வெள்ளிக்கு வாடகைக்கு அமர்த்தியோ செல்வது வழமை. அத்தகைய வாடகைக் கார்கள் அன்று இல்லை. மழையும் பெய்வதால் வேறு வழி இல்லாமல் கார்ப்பரேட் ஆப்பை திறந்து கட்டணத்தைப் பார்த்தேன், 21 வெள்ளிகளை சாதாரண கார் வண்டிக்கு கேட்டு நின்றது. சிறப்பான கார் வண்டிக்கு இன்னும் கட்டணம் அதிகம் என்று சொல்லிற்று.

சிந்தித்துப் பார்த்தேன். மழையை நம்மால் நிறுத்த முடியாது, ஆனால் குடையை விரித்து நினையாமல் போகலாம். அதுபோல இந்த கார்ப்பரேட் கொள்ளையை நம்மால் நிறுத்த முடியாது. அதற்காக அதனை அப்படியே அனுசரித்து போய்விடவும் வேண்டியது இல்லை என்று எண்ணி குடையை விரித்து நடக்க ஆரம்பித்தேன். அரை மணி நேரத்தில் ஸ்டேஷனை வந்தடைந்தேன். தொலைபேசியை எடுத்து இன்று எத்தனை காலடிகள் நடந்திருக்கிறேன் என பார்க்க அன்றைய நாளில் 12,000 காலடிகள் நடந்திருப்பதை Google Fit அறியத்தந்தது. தரகு கூலியை தராத மகிழ்ச்சியும் உடல்நலம் மேம்பட எடுத்த முயற்சியின் நிறைவையும் கொண்டாட வீதி ஓரத்தில் குரக்கன் கூழ் விற்பனை செய்யும் அய்யாவிடம் மூன்று வெள்ளிக்கு அருமையான கூழ் வாங்கி அருந்திய பின் ரயில் ஏறினேன்.

சீனியைக் கரைத்து மென்பானங்கள், பழரசங்கள் என என விற்பனை செய்யும் கம்பெனிகளிடமும், அவற்றை உற்பத்தி செய்யும் விவசாயியை ஏமாற்றி அடிமாட்டு விலைக்குக் கொள்வனவு செய்து காய்கறி விற்பனையில் பன் மடங்கு லாபம் பார்க்கும் கார்ப்பரேட் ஃபுட் செயின் (Food Chain) கடைகளிடமும் இது போன்ற அணுகுமுறை தேவைப்படுகிறது.

அவர்களை நிறுத்த நம்மால் முடியாவிடினும் நம்மளவில் அதனைத் தவிர்ப்பது சாத்தியம் அல்லவா. - அவர் பதிவு முற்றுப்பெற்றது.

அது மட்டுமல்ல யாழ்.குடநாட்டுக்குள் குவிந்து கிடக்கும் நிதி நிறுவனங்கள் மக்கள் முன்னேற்றமே தமது முன்னேற்றம் என அழுது புலம்புகின்றனர்.அதைவிட பன்னாட்டு நிறுவனங்கள் கொழும்புக்கு அடுத்தபடியாகத் தமது கிளை ஒன்றை யாழ்.மண்ணிலே திறக்கத் துடியாய் துடிக்கின்றனர். யாழ்.குடநாட்டுக்குள் ஊடுருவி கிராமம் கிராமமாகச் சென்று கறையான் அரித்த வேலிகளைக் கொண்ட குடியிருப்பாளர்களைக் கூடத் தமது வலையில் வீழ்த்தச் செய்யும் விளம்பரச் சதிகள் பல. அவற்றில் இருந்து தப்ப, சமூகத்தைப் பாதுகாக்கவும் நாம் போராட வேண்டி இருப்பதுதான் உண்மை. ●

# இந்தவார ராசிபலன் 01.10.2023 -07.10.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாதி 14

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவிதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

வரவேண்டிய பணவரவுகள் தள்ளிப்போகும். செலவுகளைச் சமாளிக்க நண்பர்களை நாட வேண்டியதிருக்கும். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு, சகப் பணியாளர்களின் வேலையையும் சேர்த்துச் செய்யும் நிலை ஏற்படலாம். அலுவலகம் பற்றிய வீண் பேச்சுகள் தொல்லைகளைத் தரும். சிலருக்கு குறிப்பிட்ட காலத்தில் பணிகளை செய்து கொடுப்பதில் சிரமம் இருக்கலாம். கூட்டுத்தொழில் வியாபாரம், வழக்கமான லாபம் உண்டு. மூலப்பொருட்களை வாங்கிச் சேர்ப்பீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

கூடுமானவரை எதிலும் திட்டமிட்டு செயல்படுவது அவசியம். தேவையில்லாத விஷயங்களை தவிர்க்கவும். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு அலுவலகத்தில் செல்வாக்குடன் கூடிய பொறுப்புகள் வந்து சேரலாம். சக ஊழியர்களின் ஒத்துழைப்புடன் அவசர வேலை ஒன்றை செய்து பாராட்டுப் பெறுவீர்கள். சொந்தத்தொழிலில் முன்னேற்றமான போக்கு காணப்படும். புதிய நபர் மூலம் பணவரவுகளும், புகழ் தரும் வேலைகளும் கிடைக்கும். கூட்டுத்தொழில் வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்தபடி இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

எதிர்பாராத செலவுகள் முன்னே நிற்கும். எதையும் நிதானித்து செய்வது நல்லது. உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு, பதவி உயர்வும், சம்பள உயர்வும் எதிர்பாராத வகையில் கிடைக்கும். உயரதிகாரிகளின் பாராட்டு மழையில் நனைவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்புப் பயன்தரும். சொந்தத் தொழிலில் அதிக வாய்ப்புகளைப் பெறுவீர்கள். கூட்டுத்தொழில் அதிக லாபம் தருவதாக இருக்கும். குடும்பத்தில் மகன் அல்லது மகளால் பொருளாதார நிலை உயரும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் மூலம் பணப் பற்றாக்குறை நீங்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பணவரவுகள் இருந்தாலும் செலவுகள் சிந்திக்க வைக்கும். எதையும் நிதானித்து செய்தால், சில பிரச்சினைகள் அகலும். உத்தியோகத்தில் உயர்வான போக்கு காணப்படும். ஒதுக்கி வைத்த செயல் ஒன்றை உற்சாகத்துடன் செய்து முடிப்பீர்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள், அதிக வேலைப்பளுவால் ஓய்வின்றி பணியாற்றுவார்கள். கூட்டுத் தொழிலில் லாபத்தைக் குவிக்க பங்குதாரர்களிடம் ஆலோசனை செய்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

உத்தியோகஸ்தர்கள் புதிய முயற்சிகளை சிறிது காலம் தள்ளிவைப்பதே உகந்தது. சிறிய தவறும், பெரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கலாம். பேச்சுகளால் பிரியமான நண்பர்களின் மனதைப் புண்படுத்தும்படி ஆகலாம். சொந்தத் தொழில் செய்பவர்கள், பெயரைப் பெருமைப் படுத்தும்படி முக்கிய வேலை ஒன்றை செய்து கொடுப்பீர்கள். கூட்டுத் தொழில் வியாபாரத்தில், முக்கிய திருப்பங்களால் லாபம் அதிகமாகும். சங்கடங்கள் நீங்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

நண்பர்களின் உதவியால் எடுத்த காரியங்களில் வெற்றியடைவீர்கள். வரவேண்டிய தொகை கைக்கு வந்தாலும், செலவுகள் காத்துக் கொண்டிருக்கும். உத்தியோகத்தில் உயர்வுகளை சந்திக்க, உயரதிகாரிகளின் ஆதரவைப் பெற முயற்சிப்பீர்கள். எதிர்பார்க்கும் கடன் தொகை கைக்கு வந்து, நின்று போன பணிகளைத் தொடங்குவீர்கள். புதிய முறைகளைக் கையாளுவர். கூட்டுத்தொழில் வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். பங்குதாரர்களின் ஆலோசனையின் பேரில் முதலீடுகளை அதிகமாக்கி, புதிய தொழில் தொடங்க முன்வருவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

சிறந்த முயற்சியும், அதிக உழைப்பும் கொண்டு காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். பயனுள்ள செலவுகளுக்கு, பண வரவுகள் உதவியாக இருக்கும். உத்தியோகத்தில் சிலருக்குப் பதவி உயர்வுடன் கூடிய பொறுப்புகள் கிடைக்கும். சகப் பணியாளர்களின் ஆதரவுடன் பணிகளில் ஈடுபட்டு பாராட்டுப் பெறுவீர்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள், புதிய வாடிக்கையாளர்கள் கிடைத்து மகிழ்வார்கள். அதிக வருமானத்தை ஈட்டுவீர்கள்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

நண்பர்கள் ஒத்துழைப்புடன் முன்னேற்றமான பலன்களைப் பெற முற்படுவீர்கள். செலவுகளைச் சந்தித்த பின்னரே வரவுகள் கிடைக்கக் கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயரதிகாரிகளின் கெடுபிடி இருக்கும். தவறுகளைச் செய்துவிட்டு அதிகாரியின் கோபப்பார்வைக்கு இலக்காக நேரிடும். சகப் பணியாளர்களிடம் சுமுகமாகப் பழகுவது நல்லது. கூட்டுத் தொழில் செய்பவர்கள், போட்டிகளைத் தவிர்க்க புதிய யுக்தியைக் கையாள்வீர்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

எடுத்த காரியங்கள் இடையூறு இன்றி நடைபெற, அதிக முயற்சி தேவைப்படும். தகுந்த நபர் இல்லாத காரணத்தால், சில காரியங்களில் தாமதம் ஏற்படலாம். உத்தியோகத்தில் எதிர்பார்க்கும் நன்மைகள் நடைபெற சிறிது பொறுமையோடு இருப்பது நல்லது. நிறுத்தி வைத்த வேலைகளை முடிக்க உயரதிகாரிகள் நிர்ப்பந்திக்கக் கூடும். சொந்தத் தொழிலில் ஈடுபடுபவர்கள், பழைய வாடிக்கையாளருக்கு புதிய வேலைகளை விரைவாகச் செய்து கொடுக்க நேரிடும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

ஏற்றமான பலன்களைப் பெற, இடைவிடாது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். சில செயல்களில் வெற்றிபெற நண்பர்கள் ஆதரவு அளிப்பார்கள். வீடு, வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைத்து, பதவி உயர்வும், எதிர்பார்த்த இடமாற்றமும் ஏற்படலாம். சிலருக்கு அலுவலகத்திலேயே பொறுப்பான பணிகள் தேடி வரக்கூடும். சொந்தத் தொழில் செய்பவர்கள் நண்பர்கள் மூலம் புதிய வாடிக்கையாளர்களைப் பெறுவார்கள். ருக்கும். புதிய தொழில் தொடங்கத் திட்டமிடுவீர்கள்.


### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

தடைகளை உடைத்து ஏற்றமான பலன்களைப் பெற முயற்சி மேற்கொள்வீர்கள். சுறுசுறுப்புடன் செயல்பட்டால் புதிய பொறுப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகமாகும். உயரதிகாரியின் விருப்பப்படி முக்கிய வேலையை செய்து பாராட்டுப் பெறுவீர்கள். வீண் பேச்சுக்களால் சகப் பணியாளர்களுடன் மன வருத்தம் உண்டாகலாம். சொந்தத் தொழில் செய்பவர்கள், புதிய வாடிக்கையாளரின் அவசர வேலையை ஓய்வின்றிச் செய்து முடிப்பார்கள். கூட்டுத்தொழில் செய்பவர்கள், வியாபாரத்தில் அதிக லாபம் பெறுவர்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

எடுத்த காரியங்களை சிறப்பாக முடிக்க, கடும் முயற்சி செய்வீர்கள். பிரச்சினைகளை நிதானமாக அணுகுவது நன்மை தரும். உத்தியோகஸ்தர்களுக்கு செய்யும் பணிகளில் சிறுசிறு தவறுகள் ஏற்படும். வரவேண்டிய கடன் தொகை, சிறிது தள்ளிப் போகலாம். ஜாமீன் கையெழுத்திடுவதை தவிர்க்கவும். உயர் அதிகாரிகளுடன் பேசும் பொழுது கவனம் தேவை. சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு, வேலைப்பளு அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளரின் பணியை விரைவாக செய்து கொடுத்து பாராட்டு பெறுவீர்கள். கூட்டுத்தொழில் செய்பவர்கள், தொழில் போட்டிகளைச் சமாளிக்க பங்குதாரர்களுடன் கலந்து ஆலோசிப்பீர்கள்.

# ஹர்தீப் சிங் கொலையில் இந்திய உளவுத் துறை?



சென்னை மடல்

-பகவான் சிங்-

தங்கள் கொல்லைப்புறத்தில் மட்டுமின்றி, உலகெங்கிலும் நிலவிவரும் கொந்தளிப்பான சூழல் குறித்து என் அன்பான 'ஈழநாடு' வாசகர்கள் கூர்ந்து கவனித்துவருகிறீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் கொல்லைப்புறம் கொந்தளிப்பில் இருக்கிறது என்று குறிப்பிடுவதற்குக் காரணங்கள் யாவரும் அறிந்ததே. பல தலைமுறைகளாக தெய்வங்களனைவராலும் ஆசீர்வதிக்கப்பட்ட மேன்மக்களாக நீங்கள் இருந்தாலும், சிங்கள அடக்குமுறையால் பல்லாண்டுகளாகப் பாதிக்கப்பட்டு வருவதால் நான் அவ்வாறு குறிப்பிட்டேன். துன்பத்திற்கான காரணம் இது மட்டுமன்று. இலங்கையில் வலிமையான, மகிழ்ச்சியான ஒரு தமிழ்ச் சமூகத்தைக் கட்டமைப்பதைக் காட்டிலும், தங்கள் தனிப்பட்ட லாபங்களையே அதிகம் பேணிவந்த பெரும்பாலான உங்கள் அரசியல் தலைவர்களின் அலட்சியம், திறமையின்மை, நேர்மையின்மை, ஊழல் மற்றும் சுய நலம் ஆகியவையும் காரணங்கள்தாம்.

சென்ற ஞாயிறன்று, இந்திய - கனடா இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டிருக்கும் மோதல் குறித்துப் பகிர்ந்திருந்தேன். சீக்கியப் பிரிவினைவாதியான ஹர்தீப் சிங் நிஜ்ஜரின் கொலையில் (ஜூன் 18 அன்று பிரிட்டிஷ் கொலம்பியா, சர்ரேவில் உள்ள குருத்வாராவுக்கு வெளியில்) இந்திய உளவு அமைப்புகளின் கை இருப்பதாக நம்பகத்தன்மைவாய்ந்த குற்றச்சாட்டுகள் ('குற்றச்சாட்டு' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருப்பது கவனத்துக்குரியது) இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியதையடுத்து இந்த மோதல் போக்கு ஏற்பட்டது. இந்தக் குற்றச்சாட்டுக்கு, இந்தியாவின் அரசியல் தலைமைகளிடமிருந்து வலுவான எதிர்ப்புக் குரலும் கனடாவின் நட்பு நாடுகளிடமிருந்து மிகச் சொற்பமான ஆதரவும் கிடைத்தது. இந்தியாவிற்கு எதிரான தனது குற்றச்சாட்டு குறித்து இப்போது புதிதாக ஒரு தகவல் வெளியாகியுள்ளதாக, ஊடகங்களிலிருந்து செய்திகள் கசிகின்றன

வியாழக்கிழமை இரவு கனடியன் ஒலிபரப்பு கார்ப்பரேஷன(CBC), அரசு வட்டாரங்களை மேற்கோள் காட்டி, நிஜ்ஜர் கொலையில் இந்திய உளவுத் துறை அதிகாரிகளின் கை இருப்பதற்கு 'மனித மற்றும் தொழில்நுட்ப' Human and signals intelligence உளவுத் தகவல் இருந்ததாகச் செய்தி வெளியிட்டிருக்கிறது. மனித உளவு என்பது, கனடாவில் இருக்கும் இந்திய தூதரக அதிகாரிகளைப் பின்தொடர்ந்து தகவல் அளிப்பது. தொழில்நுட்ப உளவு என்பது, தொலைபேசி உரையாடல் ஒட்டுக்கேட்பு, சிசிரிவி

## நாடுகடந்த அடக்குமுறையில் அமெரிக்கா இனி ஈடுபடாது?

காட்சிகள், செயற்கைக் கோள் புகைப் படங்கள் போன்ற தொழில் நுட்ப ரீதியிலான உளவுத் தகவல்கள், ஜேம்ஸ் பொண்ட் மற்றும் ஜேசன் போர்ண் திரைப்படங்களைப் போல. திரட்டப்பட்ட உளவுத் தகவலானது, கனடாவில் பணியாற்றும் இந்திய தூதரக அதிகாரிகளையும் உட்படுத்தியதாக, அரசு வட்டாரக் கசிவுகளின் அடிப்படையில் வெளிவந்த கனடிய ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தகவல்கள் கனடா அரசிடமிருந்து மட்டுமல்லாமல், ஐந்து கண்கள் உளவுக் கூட்டணியின் Five Eyes Intelligence Alliance - கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும்



நியூசிலாந்து) பெயர் குறிப்பிடாத ஒரு கூட்டாளியிடமிருந்தும் வந்ததாக அச்செய்திகள் கூறுகின்றன. உலகைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்பும் அமெரிக்காவின் திறமையைக் கருத்தில் கொண்டு பார்த்தால், ட்ரூடோவுக்கு உளவுத் தகவல் இந்த நட்பான அண்டை எசமானிடமிருந்துதான் கிடைத்திருக்க வேண்டும் என்பது எனது ஊகம்.

கனடாவில் இருக்கும் இந்திய தூதரக அதிகாரிகள் உளவு பார்க்கப்படலாம் என்ற 'கவலைக்குரிய சாத்தியக்கூறு' குறித்து, டில்லியில் உயரதிகாரிகள் தீவிரமாக விவாதித்ததாகத் தெரிகிறது. ஆனால், இந்தக் 'கவலைக்குரிய' விஷயத்தை நான் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. காரணம், தத்தம் நாடுகளின் உளவு அமைப்புகளுடன் தொடர்பில் இருப்பதாகத் தாங்கள் சந்தேகிக்கும் சில தூதரக அதிகாரிகளை உளவு பார்ப்பது என்பது அனைத்து அரசாங்கங்களும் மேற்கொள்ளும் ஓர் உத்திதான். வெளிநாடுகளில் இருக்கும் தனது பயிற்சி பெற்ற அதிகாரிகளிடமிருந்து நம்பத் தகுந்த உளவுத் தகவல்களைத் தொடர்ந்து பெறுவதை உறுதிசெய்யும் ஒரு முக்கியமான வழி இது. முக்கியமான மற்றும் பெரும் முக்கியத்துவம் இல்லாத அனைத்து நாடுகளிலும் செயல்படும் அனைத்து அயல்நாட்டு அமைப்புகளுடனும் எப்போதும் இப்படித்தான் நடக்கிறது என்பதுதான் உண்மை.

ஆனால், இது குறித்து இதுவரை நான் எழுதிய இந்த விவரங்களிலிருந்து ஒரு விஷயம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அவரது வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்ஷங்கருக்கு மட்டுமல்ல, உள்நாட்டு அரசியல் அழுத்தங்களுக்கு, இந்திய தேசிய நலன்கள்தான் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று உணர்ந்த அனைவருக்கும் இது கவலையளிக்கக் கூடியது என்பதுதான் அது. அமெரிக்க அதிபர் ஜோ பைடன்,'பாதிக்கப்பட்ட' தனது அண்டை நாட்டுக்கு ஆதரவளிக்கும் வகையில் விடுக்கும் மறைமுக அச்சுறுத்தல்கள் மட்டுமன்றி, அமெரிக்க அரசின் மூத்த அதிகாரிகளின் கருத்துகளையும் பற்றித்தான் நான் குறிப்பிடுகிறேன்.

நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்திற்கிடையில் நடந்த ஒரு செய்தியாளர் சந்திப்பின் போது ட்ரூடோ, மோடியுடன் தான் நடத்திய 'நேரடியான, வெளிப்படையான உரையாடல்' பற்றிக் குறிப்பிட்டிருந்ததாகச் சென்ற ஞாயிறன்று நான் எழுதியிருந்தேன். விதிகள் அடிப்படையிலான ஒழுங்குமுறைப்படியே கனடா செயல்படுவதாக ட்ரூடோ கூறியிருந்தார். இது, அமெரிக்காவின் போலி கர்ஜனையை நினைவு படுத்துகிறது. முன்னதாக, கனடாவுக்கான அமெரிக்கத் தூதர் டேவிட் கோஹென், 'பைவ் ஐஸ் கூட்டாளிகளின் பகிரப்பட்ட உளவுத் தகவலை'யடுத்தே ட்ரூடோவின் குற்றச்சாட்டு எழுந்தது என்று வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார்.

இந்த விவகாரம் குறித்து கனடா - அமெரிக்கா இடையில் தொடர்பு, ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்பு

## இந்தியாவுக்கு எதிரான அமெரிக்க - கனடிய கூட்டு நிலைப்பாடு!

இருந்ததாகவும் கோஹென் ஒப்புக் கொண்டார். "கனடாவின் விசாரணை தொடர்வது மிக முக்கியம். இந்த விசாரணையில் கனடாவுடன் இந்தியா கூட்டாக உழைப்பதும் மிகவும் முக்கியம். பொறுப்பேற்பு இருப்பதை நாங்கள் காண வேண்டும்." என்றும் கூறியிருந்தார் அவர்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்ரனி ப்ளிங்கன் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் ஆகியோரும் கோஹெனின் கருத்தை வலியுறுத்தியிருந்தனர். "எந்த நாடு என்ற பாகுபாடின்றி, எங்கள் அடிப்படைக் கொள்கைகளைக் காக்க நாங்கள் முன்வருவோம்" என்றார் சல்லிவன். மேலும் அவர், "கனடா போன்ற நட்பு நாடுகள் தங்கள் சட்ட அமலாக்க மற்றும் தூதரக நடைமுறைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பது குறித்தும் நாங்கள் ஆலோசிப்போம்" என்றார். நிஜ்ஜர் கொலை, ஒரு 'நாடு கடந்த அடக்குமுறை' என்றும், அமெரிக்கா இதை மிகத் தீவிரமாக எடுத்துக்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்ட ப்ளிங்கன், கனடாவுடன் அமெரிக்கா இது குறித்துத் தொடர்பில் இருப்பதாகவும், பொறுப்புக் கூறலைத் தாங்கள் விரும்புவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். நியூயோர்க்கில், இந்திய அயலுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கர் பங்குபற்றிய க்வாட் கூட்டத்திற்குப் பிறகு அவர் இவ்வாறு பேசினார்.

அமெரிக்கர்கள் உதிர்த்த, 'பொறுப்புக் கூறல் தேவை', 'நாடுகடந்த அடக்குமுறையை நாங்கள் மிகவும் தீவிரமாகக் கருதுகிறோம்' என்ற முத்துக்களைப் பார்ப்போம். அமெரிக்க அமைப்புகள் இத்தனை ஆண்டுகளாக எந்த விதமான 'பொறுப்புக்கூறலும்' இல்லாமல், செய்து வந்த 'நாடுகடந்த அடக்குமுறை' குறித்த வரலாற்றின் பக்கங்களை யாரும் நினைவு கூர்ந்து, முகத்துக்கு நேரே எடுத்துரைக்க மாட்டார்கள் என்று அமெரிக்கா எதிர்பார்க்கிறது. அல்லது, எதிர்காலத்தில் இந்த மாபெரும் வல்லரசு, எந்த விதமான 'நாடுகடந்த அடக்குமுறை'யிலும் ஈடுபடாமல், சர்வதேச நன்னடத்தையுடன் செயல்படப் போகிறது என்றும், ஜனநாயக விழுமியங்களை நேர்மையாகக் கடைபிடிக்கும் வகையில் இதுவரை செய்தவற்றுக்கான பொறுப்பை ஏற்கப்போகிறது என்றும் நாம் மகிழ்ச்சியுடன் நம்பவேண்டும்.

இந்தியாவிற்கு எதிரான அமெரிக்க - கனடா கூட்டு நிலைப்பாடு குறித்த எனது கடும் கருத்தைச் சற்றே தீவிரமாக வெளிப்படுத்திவிட்டேனோ? நான் கண்ணாடியில் என் முகத்தைப் பார்க்கப் போகிறேன். மிக நீண்ட காலமாகவே, அந்த இரு நாடுகளையும் அவ்விரு நாட்டு மக்களையும் நான் நேசித்து வரும் நிதர்சனத்தில், அத் தலைவர்கள்மீது மட்டும் ஏன் இத்தனை கோபமும் வருத்தமும் என்று கண்ணாடி என்னைத் திகைப்புடன் கேட்கிறது. எனது நெருங்கிய சொந்தங்கள் அமெரிக்காவிலும் கனடாவிலும் வசிக்கின்றனர் இரு நாடுகளிலும் எனக்கு எண்ணற்ற நண்பர்கள் இருக்கிறார்கள். அங்கு பயணம் செய்து, அவற்றின் இயற்கை எழிலையும் மனிதனால் உருவாக்கப்பட்ட முன்னேற்றத்தையும், மக்களின் கடமை உணர்வையும், சட்டத்தை மதிக்கும் பண்பையும் எல்லாவற்றுக்கும் மேலாக, அவர்களின் அப்பழுக்கற்ற தேசப்பற்றையும் நான் வியந்திருக்கிறேன். அவர்களின் தலையில் இப்படிப்பட்ட மோசமான அரசியல் தலைமை என்ற இடி இறங்கியது குறித்து எனக்கு மிகுந்த அனுதாபமும் உண்டு.

'வாழ், வாழ விடு' என்ற கொள்கையின் முக்கியத்துவத்தையும், 'மற்றவர்களுக்கு நீ விதிக்கும் விதிமுறைகள் (அவர்கள் உங்கள் முன் மண்டியிட்டிருப்பதாக நீங்கள் நினைப்பதால் மட்டுமே) உனக்கும் பொருந்தும்' என்ற புனிதமான தத்துவத்தையும் இந்தத் தலைவர்களுக்கு எடுத்துக்கூற, தகுதிவாய்ந்த ஆலோசகர்கள் நிச்சயம் இருக்கக்கூடும். நான் முன்னர் குறிப்பிட்ட, ப்ளிங்கன் மற்றும் சல்லிவனின் கருத்துகளை இங்கு நினைவு கூர விரும்புகிறேன். இந்த இனிமையான ஞாயிறு காலையில் உங்கள் அன்பான குடும்பத்துடன் சுவையான பிட்டு மற்றும் சொதியை ரசித்து ருசிக்கும் தருணம் இது. இன்றும் யாழ் பகுதியிலிருந்து வந்திறங்கும் தமிழ் அகதிகள் குறித்து, இராமேஸ்வரத்தைச் சேர்ந்த எனது நல்ல நண்பரும் மூத்த பத்திரிகையாளருமான லோகநாதனுடனான எனது நீண்ட உரையாடல் குறித்துப் பிறகு பேசுகிறேன். சில நாட்களுக்கு முன்னர்தான் சோர்ந்து போன ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுடன் ஒரு படகு வந்திறங்கியிருக்கிறது. இம்முறை அவர்கள், தம் நாட்டின் பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து தப்பி, தாய் நாடான தமிழகத்தையும் தொப்புள் கொடி உறவுகளையும் நம்பி வந்திருக்கின்றனர்.

வணக்கம்.

# மீண்டும் சர்ச்சையை தோற்றுவித்திருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்

## கூடவே வந்திருக்கும் இணையவெளி பாதுகாப்பு சட்டமூலமும் கடுமையான கண்டனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது



**வீரகத்தி தனபாலசிங்கம்**

பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கு அரசாங்கம் கொண்டுவந்திருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் மீண்டும் சர்ச்சை தோன்றியிருக்கிறது. அதனுடன் கூடவே இணையவெளி பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பிலும் பிரச்சினை கிளம்பியிருக்கிறது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தையும் (Anti - Terrorism Bill) இணையவெளி பாதுகாப்பு சட்டமூலத்தையும் (Online Safety Bill) அரசாங்கம் முறையே செப்டெம்பர் 15 ஆம் திதியும் 18 ஆம் திகதியும் வர்த்தமானியில் பிரசுரித்திருந்தது.

கடந்த மார்ச் மாதம் வர்த்தமானியில் பிரசுரமான பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு உள்நாட்டு அரசியல் கட்சிகள், சட்டத்துறை மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்கள், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் உட்பட பரந்தளவிலான தரப்புகளிடம் இருந்து கிளம்பிய கடுமையான எதிர்ப்புக்களை அடுத்து அதை வாபஸ் பெற்றுக் கொண்ட அரசாங்கம் இப்போது வெளியிட்டிருப்பது அதன் மீளாய்வு செய்யப்பட்ட வடிவமேயாகும்.

புதிய சட்டமூலத்தை ஆய்வுசெய்த சட்டத்துறை நிபுணர்களும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் முன்னைய வரைவில் சிறிய மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் புதிய வரைவு முன்னென்றும் இல்லாத வகையில் மக்கள் மீது அடக்குமுறையைப் பிரயோகிக்கக்கூடியதாக நிறைவேற்று அதிகாரத்தை விரிவாக்கும் ஏற்பாடுகளைக் கொண்டதாகவே இருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் நீதித்துறைக்கு இருக்கும் அதிகாரங்களை அபகரிக்கக்கூடியதாக சட்டமூலம் அமைந்திருக்கிறது என்று கூறும் அவர்கள் இது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் தங்களை ஆட்சி செய்பவர்களுடன் இலங்கை மக்கள் கொண்டிருக்கும் சமூக உடன்பாட்டில் (Social Contract) உள்ள அதிகாரச் சமநிலை கணிசமானளவுக்கு மாற்றமடையும் என்பதுடன் பயமுறுத்தி ஆட்சி செய்வதற்கும் எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கு மக்களுக்கு இருக்கும் உரிமையை நசுக்கி எதிரணி அரசியல் சக்திகளை ஒடுக்குவதற்கும் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு வசதியை ஏற்படுத்திக்கொடுக்கும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

குறிப்பாக, நவீன இலங்கையின் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையில் தோன்றியிருக்கும் அரசியல் - பொருளாதார நெருக்கடிகள் அரசுக்கும் மக்களுக்கும் இடையில் ஆழமான அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கும் ஒரு நேரத்தில் இத்தகைய சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அது பெரும் ஆபத்தாக அமையும் என்பதே அவர்களின் உறுதியான கருத்தாக இருக்கிறது.

மார்ச் மாதம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சடடமூலத்துக்கு கிளம்பிய விமர்சனங்களை அடுத்து அதை மீளாய்வு செய்வதாக உறுதியளித்த அரசாங்கம் சம்பந்தப்பட்ட தரப்புகள் தங்களின் அக்கறைகளை பகிர்ந்துகொள்ளவும் அழைப்பு விடுத்தது. ஆனால், தற்போது வெளியிடப்பட்டிருக்கும் சட்டமூலமும் முன்னையதைப் போன்றே வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் கடப்பாடு மற்றும் ஜனநாயக விழுமியங்களை பாதுகாப்பதற்கான உறுதிப்பாடுகள்





இல்லாததாகவே இருக்கிறது.

இத்தகைய ஒரு சட்டமூலத்துக்கான தேவையின் பின்புலம் மற்றும் நியாயப்பாடு குறித்து விளக்கத்தைத் தரக்கூடிய அறிக்கை எதையும் அரசாங்கம் வெளியிடவில்லை. வர்த்தமானியில் சட்டமூலத்தை பிரசுரிப்பதற்கு முன்னதாக பரந்தளவிலான கலந்துரையாடலுக்கு வாய்ப்பு வழங்கப்படாத முன்னய தவறு மீண்டும் செய்யப்பட்டிருக்கிறது என்பதே பரவலான விமர்சனமாக காணப்படுகிறது.

முன்னைய சட்டமூலத்தில் பயங்கரவாதத்துக்கு கொடுக்கப்பட்டிருந்த விசாலமான வரைவிலக்கணம் குறித்து கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் வகுப்பது என்பது ஒரு சர்வதேசப் பிரச்சினை. பயங்கரவாதம் என்றால் என்ன என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் கூட உலகளாவிய கருத்தொருமிப்பை எட்டமுடியவில்லை.

மார்ச் சட்டமூலத்தில் இருந்ததைப் போன்றே தற்போதைய சட்டமூலத்திலும் பயங்கரவாதத்துக்கான வரைவிலக்கணமும் அதனுடன் தொடர்புடைய குற்றச்செயல்களும் மிகவும் பரந்தளவிலானலானவையாகவும் தெளிவற்றவையாகவும் இருக்கின்றன. அரசாங்கம் அதற்கு எதிரான ஜனநாயக ரீதியான போராட்டங்களையும் தொழிற்சங்கப் போராட்டங்களையும் கூட பயங்கரவாதச் செயல்கள் என்று அர்த்தம் கற்பிப்பதற்கு வசதியாகவே இந்த வரைவிலக்கணம் அமைகிறது. முன்னர் இது குறித்து சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அராங்கம் அதில் மாற்றத்தைச் செய்யவில்லை.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் புதிய வடிவம் மக்களின் குடியியல் மற்றும் மனித உரிமைகளுக்கும் ஜனநாயக ஆட்சிமுறைக்கும் நேரடியான ஒரு அச்சுறுத்தலாகவே அமைகிறது. அது ஏற்கனவே பல தசாப்தங்களாக அமுலில் இருக்கும் பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் ஆபத்தானதாகவும் குறைபாடுகள் நிறைந்ததாகவும் இருக்கிறது என்பதே பொதுவில் உள்நாட்டு, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களின் விமர்சனமாக இருக்கிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதை தாமதிக்க முடியாது என்கிற அதேவேளை அதற்கு பதிலாக தற்போ



தைய வடிவில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவது அதற்கு தீர்வாக இருக்கமுடியாது என்பதுவும் அவற்றின் நிலைப்பாடாக இருக்கிறது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைப் போன்றே இணையவெளி பாதுகாப்பு சட்டமூலமும் பொதுவெளியில் விவாதத்தை மூளவைத்திருக்கிறது.

சமூக ஊடகங்களை ஒழுங்கமைப்பதை நோக்கமாகக் கொண்டே இந்த சட்ட மூலத்தை கொண்டுவருவதாக அரசாங்கம் கூறுகிறது.

ஆனால், இது அரசியல் தொடர்பாடல் நோக்கங்களுக்காக இணையத்தை பயன்படுத்துவதை கட்டுப்படுத்தும் ஆபத்தைக் கொண்டிருப்பதாக மனித உரிமைகள் அமைப்புக்களும் சிவில் சமூக அமைப்புகளும் சுட்டிக் காட்டுகின்றன.

இணையவெளி பாதுகாப்பு சட்டமூலம் இணையத்தள பொருளடக்கங்களின் உண்மைத்தன்மையை ஆராய்ந்து உறுதிப்படுத்தும் பணிக்காக ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆணைக்குழுவை நியமிக்கும் ஏற்பாட்டைக் கொண்டிருக்கிறது. இந்த உறுப்பினர்களை ஜனாதிபதியே நியமிப்பார். எந்தவொரு சமூக ஊடகக் கணக்கையும் இணையப் பிரசுரங்களையும் தடைசெய்வதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஆணைக்குழு, குற்றச்செயல்களுக்கு சிறைத்தண்டனையை சிபாரிசு செய்யவும் முடியும்.

இந்த சட்டமூலத்துக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பெயர் இணையவெளி ஆபத்துக்களில் இருந்து சிறுவர்களை பாதுகாக்கும் நோக்கமுடையது என்று பெற்றோர்கள் தவறாக நம்புவதற்கு வழிவகுக்கிறது என்று கூறியிருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் சட்டமூலம் உண்மையில் சமூக ஊடகங்களினால் கேலி செய்யப்படுபவர்களை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"பல்வேறு விமர்சனங்களில் இருந்து அரசிய்வாதிகளையும் அதிகாரிகளையும் பாதுகாப்பதே இணையவெளி பாதுகாப்பு சட்டமூலத்தின் நோக்கமாகும். சமூக ஊடகங்களை ஒழுங்கமைப்பதற்காகவே சட்டமூலம் கொண்டுவரப்படுகிறது என்று அரசாங்கம் கூறுகிறது. ஆனால் அதற்கு புதிய ஒரு சட்டம் தேவையில்லை. இணையவெளிக் குற்றச்செயல்களை கையாளுவதற்கு தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டங்களே போதுமானவை.

"இத்தகைய ஒரு சட்டத்தைக் கொண்டுவருமாறு எவரும் கேட்க வில்லை. இணையவெளியில் கேலி செய்யப்படுபவர்களே இதை நடை முறைப்படுத்துமாறு கேட்கிறார்கள். கம்பியூட்டர் குற்றச் சட்டம் போன்று தற்போது நடைமுறையில் உள்ள சட்டங் கள் போதுமானவை. இந்த சட்டங்களில் தவறுகள் அல்லது குறைபாடுகள் இருந் தால் அவற்றைச் சீர்செய்வதற்கு திருத்தங்களைக் கொண்டுவரமுடியும். புதிய சட்டத்துக்கு எந்த தேவையும் கிடையாது" என்று பீரிஸ் கூறுகிறார்.

தற்போதைய வடிவில் இணையவெளி பாதுகாப்பு சட்டமூலம் குறிப்பாக அதில் கூறப்பட்டுள்ள ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படக்கூடியவர்களின் சுயாதீனம் குறித்து வலுவான சந்தேகத்தைக் கிளப்புகிறது என்று அவதானிகள் கூறுகிறார்கள்.

இந்த சட்டமூலத்தைக் கொண்டுவரும் விடயத்திலும் அரசாங்கம் ஒரு பொது விவாதத்துக்கு அல்லது பரந்தளவிலான கலந்தாலோசனைக்கு வாய்ப்பைத் தரவில்லை. பொதுவில் இலங்கை அரசாங்கங்களினால் சட்டங்கள் கொண்டு வரப்படும்போது பரந்தளவிலான கருத்தாடலுக்கு வாய்ப்புக்களை வழங்காமல் இருப்பது வழமையாகி விட்டது.

சட்டவாக்கச் செயன்முறைகள் அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கம் அல்லது ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அன்றி நாட்டினது மக்களினதும் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். அந்த செயன்முறைகளை அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செய்ய வேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டங்கள் நேர்மையான வையாகவும் பயனுறுதியுடையவையாகவும் அமைவதை உறுதிப்படுத்துவதற்கு அவை வரையப்படுவதற்கு முன்னதாக சமூக நலனில் அக்கறைகொண்ட சட்ட நிபுணர்கள், கல்விமான்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் விரிவான கலந்தாலோசனையை

(14ஆம் பக்கம் பார்க்க)

பனங்காட்டான்

# சட்டம் சவக்கிடங்கில்! நீதியின் விலை என்ன?



தமிழர்களின் இனப்பிரச்சனைத் தீர்வு என்பது மாகாண சபை நிர்வாகம், அதற்கான தேர்தல், 13ம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல், இந்திய பிரதமரைச் சந்திக்க பயணம் மேற்கொள்ளுதல் என்றவாறு இழுபட்டு இறுதியாக குருந்தூர் மலை ஆலய விவகாரத்தில் நின்றது.

இப்போது இதன் அடுத்த கட்டமாக முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா வின் பதவி விலகலுக்கான காரணங்களை முன்னிறுத்தி செயற்பாடுகள் ஆரம்ப மாகியுள்ளது. அநேகமாக தமிழ்த் தேசிய பரப்பின் சகல அரசியலாளர்களும் அவர்களின் கட்சிப் பிரமுகர்களும் இது விடயமாக தங்களின் கண்டனங்களை யும் கருத்துகளையும் வெளிப்படுத்தியுள் ளனர். அடுத்த சில நாட்களுக்கு இது தொடரும் வாய்ப்புண்டு.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவை யின் அமர்வு இந்த மாதம் (ஒக்ரோபர்) 13ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளதால் அதன் பக்க அமர்வுகளிலும் இவ்விவகா ரம் முன்வைக்கப்படலாம்.

நீதிபதி சரவணராஜா உயிர் அச்சுறுத்தல், அவமதிப்பு, அழுத்தங்கள் காரணமாக தமது பதவியைத் துறந்து விட்டு நாட்டைவிட்டு வெளியேற நேர்ந்த நிலைமைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் புதன் கிழமை மனித சங்கிலிப் போராட்டத்தை நடத்த கூட்டாக முடிவெடுத்துள்ளனர். இதன் பின்னர் முல்லைத்தீவை முடக்கும் போராட்டத்தை நடத்தவும் முடிவெடுக் கப்பட்டுள்ளது.

இப்போராட்டங்கள் தமிழர் தாயகத் தின் பல பகுதிகளிலும் தொடரக்கூடிய சூழ்நிலை உண்டு. சனல்-4 வெளிப்படுத் திய ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் பிரச்சனை தென்னிலங்கையில் சில காலத்துக்கு மறந்துபோக முல்லைத்தீவு நீதிபதியின் பதவி விலகல் விவகாரம் உதவலாம்.

குருந்தூர்மலை ஆலயப் பகுதியை தொல்பொருள் திணைக்களம் கைப்பற்றி யதும், இங்கு புதிய பௌத்த விகாரை யொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்ததும், குருந்தூர்மலை பொங்கல் வழிபாட்டை காவற்துறையினரின் பலத்துடன் பௌத்த பிக்குகள் குழப்பி யடித்ததும் என தொடர்ச்சியான பல சம்பவங்களின் பின்னணியில் பாதிக் கப்பட்டவர்கள் நீதிமன்றத்தை நாடினர்.

நீதிமன்றமாவது நீதி வழங்கலாம் என்ற நம்பிக்கை வீண்போகவில்லை. மறுஅறிவித்தல்வரை விகாரை அமைக்க நீதிமன்றம் தடை விதித்தது. ஆனால் அந் தத் தடையை மீறி பொலிஸ் - ராணுவ பாதுகாப்புடன் விகாரை நிர்மாணம் இடம்பெற்றது.

இது தொடர்பான புகாரின் அடிப் படையில் முல்லைத்தீவு நீதிபதி சரவண ராஜா கடந்த யூலை நடுப்பகுதியில் அந்த இடத்தை நேரடியாகப் பார்வையிட அங்கு சென்றிருந்தார். இதிலிருந்துதான் மறுதரப்பு பிரச்சனைகளை ஆரம்பித்தது. சிங்கள இனவாதியாக தம்மை அடை யாளப்படுத்தி வரும் கடற்படை முன் னாள் அதிகாரியான சரத் வீரசேகர எம். பி. (கோதபாய நிர்வாகத்தில் அமைச்ச ராக இருந்தவர்) நீதிபதிக்கு தமது பக்கக் கருத்துகளை எடுத்துரைக்க முயன்றார்.

அதற்கு நீதிபதி இடமளிக்கவில்லை. நீதிமன்ற உத்தரவு மீறப்பட்டதா என் பதை பார்வையிடவே அந்த இடத்துக்கு தாம் வந்ததாக தெரிவித்த நீதிபதி, விசா ரணை நடத்துவதற்காக அல்லவென்று பவ்வியமாக எடுத்துக் கூறிய போதிலும், தம்மை சிங்கள மக்களின் பிரதிநிதி என்ற தோரணையில் சரத் வீரசேகர தொடர்ந் தும் கருத்துக் கூற முனைந்தபோது, "உங் களுக்கு இடமளித்தால் மற்றையோருக் கும் இடமளிக்க வேண்டிவரும். விசார ணைகள் நீதிமன்றத்தில் மட்டுமே இடம் பெற வேண்டும்" என்று தமது முடிவைத் தெரிவித்த நீதிபதி சரவணராஜா அங்கிருந்து போய்விட்டார்.

இதன் பின்னரே விவகாரம் இனவாத மாக மாற்றப்பட்டது. நீதிபதியின் விசாரணைத் தீர்ப்பைக் கண்டித்த சரத் வீரசேகர மோசமான வார்த்தைப் பிர யோகங்களைப் பயன்படுத்தி நீதிபதிக்கு எச்சரிக்கைப் பாணியில் அச்சத்தை ஏற்படுத்தினார். மற்றொரு எம்.பி.யான உதய கம்மன்பில தமது பங்குக்கு இன வாதத்தைக் கக்கினார்.

நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி சரத் வீரசேகர நீதிபதிக்கு அச்சமூட்டும் வகையில் உரையாற்றி யதை சபாநாயகர், பிரதமர், நீதியமைச்சர்



எவருமே தடுக்கவில்லை. அவரின் உரை களை நாடாளுமன்ற பதிவேடான ஹன் சாட்டில் நீக்குமாறும் உத்தரவிட வில்லை.

நீதிபதி சரவணராஜா கடந்த மாதம் 23ம் திகதியிட்ட தமது பதவி விலகல் கடிதத்தை நீதிச் சேவை ஆணைக்குழு வின் செயலாளருக்கு அனுப்பிவிட்டு, பாதுகாப்புக் காரணமாக நாட்டை விட் டுச் சென்றுவிட்டார் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தில் சட்டமா அதிபரை (அட்டர்னி ஜெனரல்) தாம் சந்தித்தது பற்றி நீதிபதி குறிப்பிடவில்லையாயினும் அதனை வெளிப்படையாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் நீதிபதி சரவணராஜாவின் பதவி விலக லும், அதற்கான காரணங்களும், அதற்கு முன்னும் பின்னுமான செயற்பாடுகளும் முக்கிய அவதா னத்துக் குரியவை.

**சட்டமா அதிபரின் அழைப்பின் பேரில் நீதிபதி சரவணராஜா அவரைச் சந்தித்தாரா? அல்லது தாமாகவே சென்று சட்டமா அதிபரை நீதிபதி சந்தித்தாரா என்பதல்ல இன்றுள்ள கேள்வி. இந்தச் சந்திப்பின்போது முன்னைய நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்குமாறு நீதிபதியிடம் சட்டமா அதிபர் கோரினாரா இல்லையா என்பதற்கான உண்மையான பதிலே இன்று உண்மையாக வேண்டப்படுகிறது.**

குருந்தூர் மலைப் பிரதேசத் தில் பௌத்த விகாரை அமைப் பது தொடர்பாக நீதிமன் றம் விடுத்த உத்தரவு மீறப்பட்டுள்ளது. சட்டம் மட்டுமன்றி நீதியும் இங்கு உதா சீனம் செய்யப் பட்டுள் ளது. (தமிழரான நீதிபதியின் தீர்ப்பை ஏற்க வேண்டியதில்லை என்ற சிங்கள பௌத்த மேலாண்மை இங்கு முன்னிலை பெற்றுள்ளது.)

ஜனநாயக ரீதியான ஒரு நாட்டுக்குத் தேவையான சட்டங்களை நிறை வேற் றும் நாடாளுமன்றத்தின் ஓர் உறுப்பின ரான சரத் வீரசேகர தம்மை இன்னமும் படை வீரராகவே காட்சிப் படுத்தி சிங் கள பௌத்த தலைவர் போன்று நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன் படுத்தி நீதிபதிக்கு உயிர் எச்ச ரிக்கை விடுத்துள்ளார்.

பதவி விலகுவதற்கு முன்னர் சட்டமா அதிபரை செப்டம்பர் 21ம் திகதி தாம் சந்தித்தபோது, குருந்தூர்மலை வழக் கின் கட்டளைகளை மாற்றியமைக்கு மாறு அவர் தம்மிடம் அழுத்தம் பிரயோ கித்ததாக நீதிபதி சரவணராஜா தெரிவித் துள்ளார். (இந்தக் கூற்று உண்மையான தாயின் இது மிகப் பாரதூரமான ஒரு செயற்பாடு.)

சட்டமா அதிபர் என்னும் பதவி நீதிமுறைச் சார்புடைய, அரசியல் சார் பற்ற (Quasi Judicial and non political position) பதவியாகும். நாட்டு நிர்வாகத் தின் பிரதம சட்ட அதிகாரி (Chief Legal Officer) இவரே. வழமையாக உயர்ந்த மதிப்புக்குரிய வழக்கறிஞர் ஒருவர் - அதி லும் முக்கியமாக சொலிசிற்றர் ஜெனரலாக இருப்பவரே இப்பதவிக்கு நியமிக் கப்படுவதுண்டு. இப்பதவி வகித்த சிலர் பின்னர் நீதியரசர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இவ்வாறு இப்பதவிக்கான தகுதி, தாரதரங்கள் என்பவற்றுக்கு மாறாக நீதிமன்றம் ஒன்று வழங்கும் தீர்ப்பினை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளில் சட்டமா அதிபர்கள் ஈடுபடுவதில்லை - ஈடுபடவும் கூடாது.

தற்போதைய சட்டமா அதிபர் இப் பதவியை பெற்ற 48வது அதிகாரி. இவ ருக்கு முன்னர் செ.நாகலிங்கம் (அடங் காத் தமிழர் முன்னணித் தலைவர் சி. சுந்தரலிங்கத்தின் மூத்த சகோதரர்), சிவா பசுபதி, க. கமலசபேசன் ஆகிய தமிழர் கள் சட்டமா அதிபர்களாக பதவி வகித்துள்ளனர். 1975 தொடக்கம் 1988 வரை சட்டமா அதிபராக இருந்த சிவா பசுபதி அவர்களே ஆகக்கூடிய காலம் இப்பதவியை வகித்த ஒருவர்.

தற்போதைய சட்டமா அதிபர் சாதார ணமான ஒருவரல்ல. இவரது தந்தையார் சிவகுமார் ராஜரட்ணம் புகழ் பெற்ற அட்வகேட். கொழும்பு வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகவும் இருந்தவர். பாட்டனார் துரையப்பா ராஜரட்ணம் முடிக்குரிய புறொக்டராக கடமையாற்றி யவர். பின்னர் திருகோணமலையின் முதலாவது பட்டினசபையின் தலைவ ராகவும் இருந்தவர்.

இந்தக் குடும்ப பின்னணியில் வந்த சஞ்ஜேய் ராஜரட்ணம் பதில் சொலிசிற்ற ராக இருந்தபோது, 2021 மே மாதம் ஜனாதிபதி கோதபாயவினால் சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டவர்.

நீதிமன்றத் தீர்ப்பு தூக்கி வீசப்பட் டது, நீதி மறுக்கப்பட்டது, சட்டம் ஒழுங்கு பேணப்படவில்லை என்பவற் றுக்கும் மேலாக, நீதிமன்ற கட்டளையை மாற்றியமைக்குமாறு அத்தீர்ப்பை வழங் கிய நீதிபதியிடம் சட்டமா அதிபர் கோரினார் என்பதே இன்றைய பேசு பொருள். இது தொடர்பாக நீதியமைச் சர் விஜேதாச ராஜபக்ச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், நீதிபதி சரவணராஜா தாமாகவே சென்று சட்டமா அதிபரைச் சந்தித்தாரென்று தெரிவித்துள்ளார்.

அவர் அழைத்துப் போனாரா, இவர் தாமாகப் போனாரா என்பதல்ல இன்றைய கேள்வி. முன்னைய நீதிமன்ற கட்டளைகளை மாற்றியமைக்குமாறு நீதிபதியிடம் சடடமா அதிபர் கோரினாரா என்பதுவே முனைப்புப் பெற்றுள்ள கேள்வி. நீதிபதி சரவண ராஜா தமது வாகனத்தை கொழும்பில் விற்பனை செய்துள்ளாரென்றும், இரண்டு வெளிநாட்டு ராஜதந்திரிகளை அவர் சந்தித்தாரென்றும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ள விடயங்கள் இங்கு சம்பந்தப்படாதவை.

23ம் திகதி தமது பதவி விலகலை எழுத்து மூலம் அறிவித்த பின்னர் நீதிபதி சரவணராஜா வாகனத்தை விற்கலாம், தமது வீட்டை விற்கலாம், எவரையும் சந்திக்கலாம். அவரது தனிப்பட்ட நட வடிக்கைகள் பற்றி நீதியமைச்சர் கவலை கொள்ளத் தேவையில்லை. வெளி நாடொன்றில் நீதிபதி அகதித் தஞ்சம் பெற முயன்றார் என்ற கருத்தை விதைத்து மற்றைய விடயங்களை மூடி மறைக்க விஜேதாச ராஜபக்ச முனைகின் றார்.

நீதிமன்ற கட்டளையை மாற்றிய மைக்குமாறு சட்டமா அதிபர் நீதிபதி யிடம் கோரினாரா இல்லையா என்பதற் கான உண்மையான பதில் வெளிவர வேண்டும். சட்டமே சவக்கிடங்குக்குள் போயுள்ள நிலையில், நீதியின் விலை என்ன என்பது சந்திக்கு வந்துள்ளது.

# 'அரங்கவியலாளருக்கு ஒரு பொக்கிஷம்' பிரான்ஸ் நூல் அறிமுக விழாவில் உரை

ஐம்பது வருடங்களுக்கு மேலாக ஈழத்தமிழ் நாடக உலகில் ஆழமான தடம் பதித்த, தமிழ் அவைக் காற்றுக் கலைக்கழக இயக்குநர் க.பாலேந்திராவின் "பாலேந்திரா நேர்காணல்கள்" - "பாலேந்திராவின் அரங்கக் கட்டுரை கள்" ஆகிய இரண்டு நூல்கள் செப்டம்பர் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாரிஸ் புறநகர் பொண்டி மண்டபத் தில், பிரான்ஸ் நாட்டில் 25வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் யாழ். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ் கிளையின் ஏற்பாட்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ், திருமதி. யோகினி கருணைவேல் தலைமையில் இந்த நூல் அறிமுக விழா நடைபெற்றது. அவரது உரையில் "இலங்கைத் தமிழ் நாடக வரலாற்றில் மிகப் பெரும் சாதனையாளர்களில் ஒருவரான திரு. பாலேந்திரா 70 நாடகங்களை இயக்கி 400 மேடைகளில் இலங்கை, இந்தியா, ஐரோப்பா, கனடா , அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் மேடையேற்றி நாடக அரங்கியலில் அவர் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் அரங்கியல் கட்டுரைகள், நேர்காணல்கள் என்ற இரு நூல்களில் வெளிப்படுகின்றன இவை எதிர் கால அரங்கவியலாளருக்கும்,அரங்க ஆய்வாளர்களுக்கும் ஒரு பொக்கிஷம்" என்று கூறினார்.

இந்த நிகழ்வில் திரு பாலேந்திரா அவர்கள், பிரான்ஸ் நாட்டில் வாழும் மூத்த நாடகக் கலைஞர் பெஞ்சமின்





இம்மானுவேல் அவர்களால் பொன்னாடைபோர்த்தி கௌரவிக்கப் பட்டார். எழுத்தாளரும் நாடக செயற்பாடாளருமான சின்னத்துரை மனோகரன் அவர்கள் நினைவு சின்னம் வழங்கினார். திரு. பாலேந்திரா அவர்களது கௌரவிப்பினை தொடர்ந்து. இலங்கை பழையமாணவர் ஒன்றியத் தலைவர் திரு. சிறிபாஸ்கரன் அவர்கள் நூலை வெளியீடு செய்து உரையாற்றினார்.

நூல் பற்றிய பேச்சுக்களை மூன்று வெவ்வேறு வயதினர் (தலைமுறையினர்) நிகழ்த்த, பேச்சுக்களுக்கு இடையிடையே லண்டனில் இருந்து பாரிஸ் வந்திருந்த பாலேந்திராவும் ஆனந்தராணியும் நிகழ்த்திய "அரங்க நினைவலைகள்" நாடக காட்சிகள் பாடல்கள் வந்திருந்த பார்வையாளர்களுக்கு பெரு விருந்தாக அமைந்தன. பாலேந்திரா கடந்த ஐம்பது ஆண்டுகளில் நெறிப்படுத்திய பிரபலமான நாடகங்களான மழை, கண்ணாடி வார்ப்புகள், யுகதர்மம், முகமில்லாத மனிதர்கள், சம்பந்தம், மரணத்துள் வாழ்வு போன்ற நாடகங்களில் தேர்வு செய்து சில பகுதிகள் அங்கு நிகழ்த்தப்பட்டன. முழு நாடகங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தை பலருக்கு இந்த நிகழ்வு தூண்டியது.

மிகவும் வித்தியாசமான முறையில் நிகழ்ந்த நூல்களின் அறிமுக விழா இது என்று நிகழ்வுக்கு வந்திருந்த பலரும் மற்றும் எஸ் கே ராஜென் அவர்களது "எம் தமிழ் "இணைய நேரலையில் பார்த்தவர்களும் கருதுகின்ற னர்.

நாடகத்துறை சார்ந்து சாதனை படைக்க வேண்டும் என்ற துடிப்போடு பிரான்ஸில் மிக ஆர்வத்தோடு இயங்கிக்கொண்டிருக்கும் நாடகர் திரு. கெங்கேஸ் "அரங்கக் கட்டுரைகள்" நூல் பற்றி கூறும் போது "அரங்கு பற்றிய பல்வேறு அம்சங்களை கூறும் இந்த நூல் பிரான்ஸ் நாட்டில் வெளிவருவது, பல நாடகம் சார்ந்த வர்கள் வாழும் பிரான்ஸ் நாட்டில் இனி நல்ல நாடகங் கள் இங்கு மேடையேற வழி சமைக்கும் " என்றார்.

வளர் இளம் பேச்சாளர் செல்வி நதி இராதாகிருஷ் ணன், 30 வருடங்களுக்கு மேலாக லண்டனில் இளம் வயதினருடன் பணியாற்றும் திரு. பாலேந்திரா அவர் களுடைய நாடகங்களில் பிரான்ஸில் நடித்த அனுபவங்களையும் தனது பாடசாலை பிரஞ்சு நாடக அனுபவங்களையும் அழகாக பகிர்ந்து கொண்டார்.

எழுத்தாளரும் சமூக அக்கறையாளருமாகிய சலனம் முகுந்தன் அவர்கள் "பாலேந்திராவின் நேர்காணல்கள்" நூல் மூலமாக பாலேந்திராவின் ஐம்பது வருட நாடகப் பயணத்தையும், தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் 45 வருட பயணத்தையும், பாலேந்திரா ஆனந்தராணி தம்பதியினரின் 40 வருடங்களுக்கு மேலான இணைந்த நாடகப் பயணத்தையும் தான் தரிசிக்க முடிந்ததாகவும் அதன் முக்கியத்துவத்தையும் கூறி மிகச் சிறப்பாக நூல்களை அறிமுகம் செய்து வைத்தார்.

திரு. திருமதி பாலேந்திரா அவர்கள் அரங்க நினை வலைகளை மூன்று கட்டங்களாக இடை இடையே தங்களுடைய நடிப்பினூடாக வெளிப் படுத்தியதோடு நாடகங்களில் வரும் சில பாடல் களையும் பிரான்ஸ் நாட்டில் வாழும் இளையவர் களையும் இணைத்து பிரபல வயலின் கலைஞர் தேவராஜா தலைமையில் பாடியது பார்வையாளர்களை மிகவும் உற்சாகப்படுத்தி யது. சர்மிளா சத்தியநாதன், அமலியா சத்தியநாதன் அவர்கள் பாடல்களைப் சிறப்பாக பாட பிரான்சுவா தப்லா வாசித்தார்.

பாலேந்திராவின் நாடகப் பயணத்தில் அவ்வப் போது இணைந்து பயணித்தவர்களும் பிரான்ஸ் நாட் டில் தற்போது வாழ்பவர்களுமான கானகலாதரன், எழுத்தாளர் லட்சுமி, வயலின் தேவராஜா ஆகியோரின் அனுபவ உரைகளும் இடம்பெற்றன.

பாலேந்திரா அவர்கள் தனது ஏற்புரையில் வெவ் வேறு நாடுகளில் இப்படியான நிகழ்வுகளை நிகழ்த்தும் போது அங்கு வாழ்பவர்களின் உதவியும் ஆதரவும்



பங்களிப்பும் எவ்வளவு முக்கியம் என்றும் அந்தவகையில் பிரான்ஸ் மகாஜன கல்லூரி சங்கத்துக்கும், உரையாற்றியவர்களுக்கும் மற்றும் சிறிபாஸ்கரன் ஓவியர் வாசகன் போன்றவர்களது ஆதரவுக்கு நன்றி கூறினார். மகாஜனா கல்லூரியுடன் தனது நீண்ட கால தொடர்பையும் விளக்கினார்.அவரது உரைக்கிடையில் பாலேந்திராவின் அழைப்பில் ஒரு சிறு உரையாற்றிய திருமதி ஈஸ்வரி என்ற தாயின் உரை எல்லோரையும் கவர்ந்தது. லண்டனில் தனது மூன்று பிள்ளைகளை பாலேந்திரா அவர்களது நாடகப் பள்ளியில் பயிற்ச்சிக்கு அனுப்பியதால் அவர்கள் அடைந்த ஆளுமை வளர்ச்சி பற்றி அவர் குறிப்பிடடார்.

மூன்று மணி நேரம் போனதே தெரியாமல், பாரிஸில் வாழும் முக்கியமான தமிழ் கலை இலக்கிய ஆர்வலர்களும் செயற்பாட்டாளர்களும் இந்த நிகழ்வுக்கு வருகை தந்து ஆர்வத்துடன் சிரித்து வியந்து அரங்க அனுபவத்தினை அடைந்த திருப்தியுடன் வீடு சென்றனர்.

இறுதியாக சங்கச்செயலாளர் வரதராஜன் அவர்களுடைய நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

# போராட்ட வரலாறு சொல்லும் 'ஜனாவின் வாக்குமூலம்!'




**குருசுவாமி சுரேந்திரன்**
(பேச்சாளர்- ரெலோ- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

இன்று அக்டோபர் மாதம் முதலாம் தேதி தனது அகவை அறுபதை எட்டும் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) பா.உ தனது அனுபவத் தொகுப்பான ஜனாவின் வாக்குமூலம் என்ற நூலை வெளியிடுகிறார்.

இந்நூல் மட்டக்களப்பு மாவட்டத்தில் அவரது பிறந்த நாளிலே பல அரசியல் மற்றும் சமூகப் பிரமுகர்கள் மத்தியில் வெளியிடப்படுகிறது.

தனது பதின்ம வயதிலே, இனத்தின் விடுதலைக்காக சகலவற்றையும் துறந்து உயிரைத் துச்சமாக எண்ணி ஆயுதப் போராட்டத்தை வரித்துக் கொண்டு ஒரு இளைஞன் புறப்படுகிறான். களத்திலே விழுப் புண்களை சுமக்கிறான். தனது கனவிலும் கொள்கையிலும் மாறாத நம்பிக்கையோடு போராட்டத்தில் ஈடுபடுகிறான்.

வீரமும் தீரமும் அர்ப்பணிப்பும் ஆயுத பலமும் இருந்தால் விடுதலையை காணலாம் என்ற கனவு நனவாகியதா? தன் வாழ்நாளில் சந்தித்த மாற்றங்கள் என்ன? பயணித்த பாதை சரியானதா? இலக்கை எட்ட முடிந்ததா? எதிர்கொண்ட சிக்கல்கள் முகம் கொடுத்த பிரச்சினைகள் என்ன?

மாற்றங்களை ஏற்றுக் கொண்டாரா? அடைந்த பயன்கள் பெற்றெடுத்த வெற்றிகள் என்ன?

தேசம், தேசியம், போராட்டம், அதன் வடிவம், மாற்றம், தொடர்ச்சி என்ன பல விடயங்களை தொகுத்து இந்த நூலின் வடிவத்தில் ஜனா தந்திருக்கிறார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஆரம்பகால போராளியாக பின்னர் பாராளு மன்ற உறுப்பினராக இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதியாக ஓர் அரசியல் தலைவனாக அரசியல் வாழ்க்கையிலே இவ்வளவு காலமும் அவர் கடந்து வந்த பாதைகள் என்பவற்றின் அனுபவப் பகிர்வை வடித்துத் தந்துள்ளார்.

விடுதலைப் போராட்டத்தில் பயணித்த பலருக்கு எழுதுவதற்கு ஆக்கபூர்வமான வரலாறுகள் இல்லை. விடுதலைப் போராட்டத்தில் பயணிக்காத பலர் இன்று விடுதலை பற்றி பேசுகிறார்கள். இவர்களுக்கு மத்தியில் ஒரு சிறுவனாக தேசிய பயணத்தில் போராளியாக ஆரம்பித்து இன்று ஒரு அரசியல் தலைவனாக அகவை 60 தொடுகின்ற ஒருவரின் அனுபவப் பதிவில் அனைத்து தற்கால மற்றும் எதிர்கால தமிழ் இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டிய பல விடயங்கள் புதைந்துள்ளன.

ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டத்தைப் பற்றி அதில் பங்கு பற்றிய ஒருவருடைய நேரடி வாக்குமூலம் தரப்பட்டுள்ளது. செவி வழி கதைகளை கேட்டு போராளிகளையும் போராட்டத்தையும் விமர்சிக்கின்ற பலருக்கு இந்த வாக்குமூலம் தக்க பதிலாக அமையும் என்று கருதப்படுகிறது.

ஒரு போராட்டத்தின் இலக்கு, அதை அடைவதற்கு படுகின்ற துன்பங்கள், அதில் செல்வாக்குச் செலுத்துகின்ற உள்ளக வெளியக காரணிகள், அவற்றை கையாளும் திறமை, அத்திறமை இல்லாவிட்டால் இனம் படுகின்ற துன்பம் என்ற பல விடயங்களை இந்த வாக்கு மூலம் புட்டுக்காட்டி உள்ளது. வாழும் போராளியாக துணிச்சலோடு இந்த வாக்கு மூலத்தை ஜனா பதிவு செய்துள்ளது தன்னுடைய சொந்த வாழ்க்கையை மாத்திரமல்ல தமிழ் இளைஞர் களின் குறிப்பாகப் போராளிகளின் வாழ்க்கையை படம் போல எடுத்துக் காட்டியுள்ளது.

இதை தனிப்பட்ட ஒரு ஜனாவின் வாக்குமூலமாக கருதாமல் ஒட்டுமொத்த தமிழ் இளைஞர்களும் அறிந்து கொள்ள வேண்டிய வரலாற்று ஆவணமாக படித்துப் பார்க்க வேண்டிய ஒரு முக்கிய புத்தகமாக பயன்படுத்தப்பட வேண்டும்.

# தாமதமாகும் சர்வதேச நாணய நிதியத்தின் கடனும் இலங்கை எதிர்நோக்கும் சவால்களும்

கந்தையா அருந்தவபாலன்

சென்ற ஆண்டின் இறுதியில் முற்று முழுதாகக் கையறு நிலைக்குள் அமிழ்ந்துவிட்ட இலங்கையைக் கரைசேர்க்கும் நோக்கில் இவ்வாண்டின் தொடக்கத்தில் 48 மாதங்கள் நீடிக்கும் கடன் வசதியின்கீழ் 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்க முன்வந்ததுடன் மார்ச் மாதம் 20 ஆம் திகதி அதிலிருந்தான முதல் கட்டக் கொடுப்பனவாக 330 மில்லியனை இலங்கைக்கு வழங்கியிருந்தது. இக்கடனுக்காக இலங்கையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் அடுத்தடுத்த தவணைகளுக்கான கடன் விடுவிப்பு மேற்கொள்ளப்படும் என்ற உடன்பாடும் காணப்பட்டிருந்தது. அதற்கமைய இரண்டாவது தவணைக்கடனை வழங்குவதற்குத் தேவையான முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காகச் சர்வதேச நாணயநிதியத்தின் ஆசிய-பசுபிக் திணைக்களத்தின் இலங்கைக்கான குழுவருகை தந்திருந்ததுடன் அதுதொடர்பாக ஊடகச் சந்திப்பொன்றையும் நடத்தியிருந்து. அதில் அக்குழுவின் தலைவர் பீற்றர் புரூவர் எதிர்பார்த்த இலக்குகளை இலங்கை இன்னும் எட்டாத காரணத்தால் இரண்டாம் தவணைக்கடன் தாதமாகக் கூடும் என்பதைத் தெரிவித்திருந்தார். அதில் அவர் எட்டாத இலக்குகளாக முக்கியமாக இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார். ஒன்று அரச வருமானத்துக்கும் செலவுக்குமிடையேயான இடைவெளியைக் குறைப்பது. இரண்டாவது கடன் மறுசீரமைப்பு. இவ்விரண்டு விடயங்களிலும் முன்னேற்றம் காண்பதற்காக இலங்கை பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்ற போதும் அவை இன்னும் முழுமையாகக் கைகூடவில்லை. அதேவேளை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் ஏலவே பல்வேறு பிரச்சினைகளுக்கு அரசாங்கம் முகம் கொடுத்து வரும் சூழ்நிலையில் அடுத்து எடுக்கப்போகும் நடவடிக்கை களால் மக்களுக்கும் நாட்டுக்கும் இன்னும் மோசமான பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக் காணப்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. அதனால் அரசாங்கத்தின் இருப்புக்கு ஆபத்தென்றாலும் கூட அதனைவிட வேறு வழியேதும் அதற்கு இருப்பதாகத் தெரியவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய எதிர்பார்ப்புகளில் ஒன்று அரச வருமானத்துக்கும் அதன்செலவுகளுக்கும் இடையிலான வெளியைக் குறைக்க வேண்டுமென்பது. இவ்விடைவெளியின் அல்லது பற்றாக்குறையின் அளவு வெறுமனே நாணய அலகில் மதிப்பிடுவதற்குப் பதிலாக நாட்டின் உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்கப்படுகிறது. அவ்வகையில் அண்மிய ஆண்டுகளில் இலங்கை அரச வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 9 வீதமாக இருந்த போது செலவு 19 வீதம் ஆக இருந்தது. இவ்வடிப்படையில் அரசின் வருமான செலவு இடைவெளி அல்லது பற்றாக்குறை 10 வீதம் ஆக இருந்து வருகிறது. இது அரசின் செலவு அதன் வருமானத்தினைவிட இருமடங்கிலும் உயர்வானது என்பதை எடுத்துக் காட்டுகிறது. இலங்கையின் படுகடன் அதிகரிப்பு உட்பட பல்வேறு பொருளாதாரப் பாதிப்புகளுக்கும் இதுவே அடிப்படையாக இருந்து வந்துள்ளது. இவ்விடைவெளியை 10 வீதத்தில் இலிருந்து 6-7 வீதத்திற்கு மட்டுப்படுத்த வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பும் நாணய நிதியத்தின் நிபந்தனையுமாக உள்ளது. இது இரண்டு செயற்பாடுகளில் தங்கியுள்ளது. ஒன்று அரச வருமானத்தைக்கூட்டுவது. மற்றது அரச செலவினங்களைக் குறைப்பது. அரச வரவு செலவுத் திட்டம் தொடர்பாக இந்த அணுகுமுறை இறைக் கொள்கையுடன் தொடர்பு பட்ட ஒன்றாகும்.

அரசாங்கம் தனது வருமானத்தை அதிகரிக்க வேண்டுமெனில் அதன் பிரதான வருவாய் மூலமான வரிகளையும் விலைகளையும் கட்டணங்களையும் உயர்த்த வேண்டும். நாட்டின் உற்பத்தி இயலளவு குறைவடைந்து பொருளாதார வளர்ச்சி மறைப் பெறுமானத்தில் இருக்கும் இன்றைய சூழ்நிலையில் இவற்றைத் தவிர அரசாங்கத்துக்கு வேறு தெரிவுகள் இல்லை. விதிக்கப்படும் வரிகள் வருமான வரிகள்போன்ற நேர் வரிகளாகவும் பொருட்களின் விலைகளுள் உள்ளடக்கப்படும் மறைமுக வரிகளாகவும் உள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெறுவதற்காகவும் கடனைப் பெற்ற பின்னரும் இவ்விரு வரிகளும் முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகளவில் உயர்த்தப்பட்டுள்ளன. பொருட்கள் மீதான உயர்ந்த வரிகள் மட்டுமன்றி வருமான வரிக்கான கீழ்மட்ட எல்லையும் வரிவீதங்களும் இன்றையபொருளாதார நிலையில் மக்களால் தாங்க முடியாத வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இன்று ஒருஇலட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறும் தனிநபர்கள் அனைவரும் வருமான வரி செலுத்தவேண்டியவர்களாக மாற்றப்பட்டு உள்ளனர். ஒருவர் மீதான வரிச் சுமை என்பது தனியே



வருமானத்தின்அளவில் தங்கியிருப்பதில்லை. அது வாழ்க்கைச் செலவுடனும் பணவீக்கத்துடனும் பின்னிப் பிணைந்தது. சம்பளங்கள் கூலிகள் அதிகரிக்கப்படாத ஒரு நிலையிலும் தொடர்ச்சியாக விலைகள் உயர்வடைந்து 60 வீதத்திற்கு மேல் பணவீக்கம் காணப்பட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு உச்சம் தொட்டுள்ள நிலையிலும் வருமான வரிக்கான குறைந்தமட்ட எல்லை ஒரு இலட்சமாக நிரணயிக்கப்பட்டமை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. நான்கு பேர் கொண்டஒரு குடும்பத்துக்கான அடிப்படை உணவுக்கான செலவுக்கு 60,000 ரூபாவுக்கு மேல் தேவையென உத்தியோக பூர்வத் தரவுகளே எடுத்துக் கூறும்போது ஒரு இலட்சத்துக்கு மேல் வருமானம் பெறும் ஒருவர் வரி செலுத்த வேண்டும் எனக்கூறுவது எவ்வளவு தூரம் நியாயமானதாகக் கொள்ள முடியும். மறுபுறத்தில் நாட்டின் உற்பதி மட்டம் வீழ்ச்சியடைந்தமை காரணமாக

> **ஒருபுறத்தில் கடன் வழங்கிய நாடுகள் அதனைத் தூண்டிலாகப் பாவித்து இலங்கையின் வளங்களைச் சுரண்டுவதற்கான வாய்ப்புகளைத் தேடுகின்றன. மறுபுறத்தில் இந்தியாவும் மேற்குலகும் இணைந்து சீனாவின் ஆதிக்கப் பரவலுக்கு அணைபோட முயற்சிக்க சீனாவோ தான் வழங்கிய கடனை ஆயுதமாகப் பயன்படுத்தி அந்த அணையை உடைக்க எத்தனிக்கிறது.**

பொருட்களின் வழங்கல் குறைவடைந்து விலைகள் உயர்வடைந்துள்ள ஒரு சூழ்நிலையில் அப்பொருட்கள் மீது மென்மேலும் வரிகளை விதிப்பதுடன் மின்சாரம், எரிபொருட்கள் போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலைகளை பன்மடங்கு உயர்த்துவது போன்ற செயற்பாடுகளும் மக்கள் மீது என்று மில்லதவாறு சுமைகளை ஏற்றியுள்ளது. இதனால் நாட்டில் இன்று படித்த கூட்டம் நாட்டைவிட்டு வெளியேறும் நிலையும், சாதாரண மக்கள் உணவுத்தட்டுப்பாடு மற்றும் குறையூட்டப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் நிலையும், தொழிற் சங்கங்களின் அரசுக்கெதிரான கொதிநிலையும், அரசின் மீதான மக்களின் நம்பிக்கை இழப்பும் அதிகரித்திக் கொண்டு செல்வதை அவதானிக்க முடியும்.

மறுபுறத்தில் அரச செலவுகளைக் குறைப்பதற்காக சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த ஆலோசனைகளின் அடிப்படையில் அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. பொதுப்பணிகளுக்கான கொடுப்பனவைக் குறைத்தமை, அடிக்கட்டுமானங்களுக்கான முதலீட்டைக்குறைத்தமை, அரச முயற்சிகளுக்கான மானியக் கொடுப்பனவுகளை மட்டுப்படுத்தியமை, அரசபணிகளுக்கான புதிய ஆளணிகள் மீதான மட்டுப்பாடு, பதவியில் இருக்கும் பணியாளர்களை குறைக்கும் உத்திகள், பணியாளர்க்கான மேலதிகக் கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் மீதான வெட்டுகள், கடன்மீள் கொடுப்பனவுகளின் மட்டுப்பாடு, அரச முயற்சிகளை தனியார் மயமாக்கல் என பலநடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது. இதன்காரணமாக அரச நலன்புரிச் சேவைகளின் தரம் பெரிதும் பாதிப்படைந்து செல்வதைக் காண முடிகிறது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக சுகாதாரசேவையைக் குறிப்பிடலாம். அரச முயற்சிகளுக்கான மானியங்கள் குறைக்கப்பட்டதால் அவற்றின் சேவைகள் பாதிக்கப்பட்டதுடன் கட்டணங்களும் பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளன. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக பேருந்து, தொடருந்து போன்ற பொதுப் போக்குவரத்துச் சேவையைக் குறிப்பிடமுடியும். வீதிகள் உட்பட பொதுத்துறைக் கட்டுமானங்கள் பெரிதும் முடக்கப்பட்டுள்ளன. இவற்றின்மூலமான பாதிப்புகளை எதிர்காலத்தில்தான் அதிகம் உணரமுடியும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் நாட்டுமக்கள் கவனம் மட்டுமன்றி நாணய நிதியத்தின் கவனமும் அடுத்தமாதம் அரசாங்கத்தினால் முன்மொழியப்படவுள்ள 2024ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் மீதே நிலை கொண்டுள்ளன. குறிப்பாக அரச, தனியார் ஊழியர்கள் தமக்கான ஊதிய உயர்வை எதிர்பார்த்தும், பொதுமக்கள் தமக்கான நிவாரணங்களை எதிர்பார்த்தும் இருக்கையில் இதற்கு எதிர்மாறான எதிர்பார்ப்புடன் நாணய நிதியம் இருக்கிறது. அதாவது அரச வருமானத்தைக் கூட்டுவதற்கும் செலவைக் குறிப்பதற்குமான அரசாங்கத்தின் முன்மொழிவுகளை எதிர்பார்த்து இருக்கிறது. அதன் பின்னர்தான் நாணய நிதியம் தனது இரண்டாவது தவணைக்கொடுப்பனவு தொடர்பான தீர்மானத்தை எடுப்பதற்கான வாய்ப்பு உள்ளது. சுருக்கமாகச் சொன்னால் ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் என்ற நிலையை அரசாங்கம் எதிர் நோக்கியுள்ளது. இந்நிலையில் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் மூலம் மீண்டும் ஜனாதிபதியாகும் கனவிலும் ரணில் உள்ளார். மக்கள் மீது சுமைகளை ஏற்றினால் வாக்குகள் கிடைக்காது. மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கினால் கடன் கிடைக்காது. ரணில் என்னசெய்யப் போகிறார்?

தான் பெற்ற கடன்களை மறுசீரமைப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்து எடுத்து வருகின்ற போதிலும் அம்முயற்சி தொடர்ந்து இழுபட்டுக் கொண்டு செல்வதுடன் அது தொடர்பாக ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எதிர்க் கட்சிகளினதும் தொழிற் சங்கங்களதும் கண்டனங்களுக்கு உள்ளாகியுள்ளன. குறிப்பாக உள்நாட்டுக் கடன் சீரமைப்பதற்காக ஊழியர் சேமநல நிதியத்தில் கைவைத்தமை பெரும் கண்டனத்துக்கு உள்ளானதுடன் அதற்கெதிராக உச்ச நீதிமன்றில் வழக்குகளும் தொடுக்கப்படுள்ளன. அதுமட்டுமன்றி இவ்விடயம் தொடர்பாக சட்டவாக்கத்துறை நீதித்துறை மீதுஅழுத்தம் பிரயோகிக்க முனைவதாக குற்றமும் சுமத்தப்படுகிறது. உள்நாட்டுக் கடன்சீரமைப்பு இவ்வாறிருக்க அதைவிட முக்கியமான வெளிநாட்டுக் கடன் சீரமைப்பு விரைவில் சாத்தியப்படுவதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை. சீனா தவிர்ந்த ஏனைய கடன் வழங்குநர்கள் ஓரளவு உடன்பாட்டுக்கு வந்துள்ள போதும் முதன்மைக் கடன் வழங்குநரான சீனா முரண்டு பிடித்துக் கொண்டே இருந்து வருகிறது. இதனால் சீனாவைத் தவிர்த்து ஏனைய நாடுகள் இணைந்து ஒரு தீர்மானத்துக்குவருவதற்கான ஒரு யோசனையும் முன் வைக்கப்படுகிறது. ஆனால் கூடுதலான கடன் வழங்குநரான சீனாவை விட்டு உருவாக்கப்படும் எந்த உடன்பாடும் வெற்றியளிக்கப் போவதில்லை மட்டுமன்றி அவ்வாறான ஒரு நிலையில் சீனாவும் அமைதியாக இருக்காது. உண்மையில் இக்கடன் மறுசீரமைப்பு அக்கடன்களுடன் மட்டும் தொடர்பு பட்டிருக்கவில்லை. அது கடன் வழங்கிய நாடுகளின் பொருளாதார நலன்களுடனும் பூகோள அரசியலுடனும் தொடர்பு பட்டிருப்பதாலேயே அதை மறுசீரமைப்பதில் இழுபறிகள் தொடர்கின்றன. ஒருபுறத்தில் கடன் வழங்கிய நாடுகள் அதனைத் தூண்டிலாகப் பாவித்து இலங்கையின் வளங்களைச் சுரண்டுவதற்கான வாய்ப்புகளைத் தேடுகின்றன. மறுபுறத்தில் இந்தியாவும் மேற்குலகும் இணைந்து சீனாவின் ஆதிக்கப் பரவலுக்கு அணைபோட முயற்சிக்க சீனாவோ தான் வழங்கிய கடனை ஆயுதமாகப் பயன்படுத்தி அந்த அணையை உடைக்க எத்தனிக்கிறது. இவற்றிற்குஇடையே விலாங்கு மீன் போல இலங்கை நெழிகிறது. இதனைக் கருத்திற் கொண்டே சீனாவைக் குளிர்விப்பதற்காக அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையுட்பட உலக அரங்கில் சீனாவுக்கு ஆதரவான சில கருத்துகளை ரணில் முன்வைத்து வருகிறார். ரணிலின் இவ்வாறான கருத்துக்களே நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக்கடன் தாமதமாகுவதற்கான காரணம் எனக் குறைகூறுவோரும் உள்ளனர்.

இவ்வாறு வெவ்வேறான நோக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் கொண்ட தரப்புகளாக அரசாங்கம், சர்வதேச நாணய நிதியம், கடன் வழங்குநர்கள், நாட்டு மக்கள் காணப்படுவதால் இத்தரப்புகள்யாவற்றையும் திருப்திப் படுத்துவதற்கான ஒரு சமநிலைப் புள்ளியைக் கண்டறிவது இலகுவான ஒருவிடயமன்று. அதுவும் உறுதியற்ற ஒரு ஆட்சி நிலவும் போது இன்னும் சிக்கலானதொன்றகும். சமநிலையொன்று தோற்றுவிக்கப்படாதபோது மீண்டும் நாட்டில் அரசியல், பொருளாதாரநெருக்கடியொன்று தோன்றுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கக் கூடும்.

# கனடா மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முத்தமிழ் விழா - 2023





**குரு அரவிந்தன்**

35ஆவது வருட நிறைவைக் கொண்டாடும் கனடா மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முத்தமிழ் விழா சென்ற ஞாயிற்றுக் கிழமை 24-9-2023 ரொறன்ரோ சீனக்கலாச்சார மண்டபத்தில் குறிப்பிட்ட நேரப்படி மாலை 5:05 மணிக்கு ஆரம்ப மாகிச் சிறப்பாக நடந்தேறியது.

திரு. பஞ்சன் பழனிநாதனின் ஆரம்ப உரையைத் தொடர்ந்து, மங்கள விளக்கேற்றும் நிகழ்வு இடம் பெற்றது. சிறப்பு விருந்தினர்களில் ஒருவராக இலங்கை யில் இருந்து வருகை தந்திருந்த பழையமாணவர் திரு. மகாதேவன் வேலுப்பிள்ளையும் இதில் கலந்து கொண் டார். அதைத்தொடர்ந்து கனடா தேசியகீதம், தமிழ்த் தாய் வாழ்த்து, கல்லூரிக்கீதம் ஆகியன இடம் பெற்றன. சமீபத்தில் எம்மைவிட்டுப் பிரிந்த பாலஸ்கந்தன், சாந்தி நாதன், சசிதரன் மற்றும் மகாஜனன்கள் நினைவுகூரப் பட்டனர். ஆசிரியர் எழுத்தாளர் மயிலங்கூடல் நட ராஜன், சங்கீத ஆசிரியை திருமதி நாகம்மா, நாடக





ஆசிரியர் கதிரேசம்பிள்ளை ஆகியோரது நினைவாக அரங்கம் இயல், இசை, நாடகம் என்று மூன்று பிரிவா கப் பிரிக்கப்பட்டு நிகழ்வுகள் நடந்தன.

பல்லியம், ராகசங்கமம் இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து திரு. விஜயசீலன் தியாகராஜாவின் வரவேற் புரை இடம் பெற்றது. அடுத்து 'வானவில்' திரையிசை நடனத்தைத் தொடர்ந்து சங்கத் தலைவர் திரு. விஜய குமார் தியாகராஜா அவர்களின் தலைமையுரை இடம் பெற்றது. தலைமையுரையைத் தொடர்ந்து 'காலிங்க நர்த்தனம்' நடன நிகழ்ச்சி இடம் பெற் றது. நடன நிகழ்ச்சிக்கு அடுத்ததாக விஜயசீலன் தியாகராஜாவின் நெறியாள் கையில் 'ஒரு நாய்க்கதை' என்ற நாடகம் இடம் பெற்றது.

நாடகத்தைத் தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நடன ஆசிரியை திருமதி செந்தில்செல்வி சுரேஸ்வரன் அவர்களின் உரை இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து 'நவீன பரதம்' என்ற நடன நிகழ்ச்சி இடம் பெற்றது. நடன நிகழ்ச்சியைத் தொடர்ந்து 'பொன்னரும் சங்கரும்' என்ற வில்லுப்பாட்டு இடம் பெற்றது. இதில் பல இளையதலைமுறையினர் கலந்து சிறப்பித்தனர்.

அடுத்துக் கவிச்சரம் என்ற 'கவியரங்க நிகழ்வு' சத்திய மூர்த்தி மாணிக்கத்தின் தலைமையில் இடம் பெற்றது. அகணி சுரேஸ், பவானி தர்மகுலசிங்கம், இராஜ்மீரா கனி இராசையா, சயந்தன் பசுபதி ஆகியோர் இந்த நிகழ்வில் பங்குபற்றினர். இதைத் தொடர்ந்து 'காற்றினிலே வரும் கீதம்' என்ற இசைக்கச்சேரி நிகழ்வு இடம் பெற்றது. ஈழத்து மெல்லிசை நிகழ்வில் சத்தியமூர்த்தி மாணிக்கம் 'ஓ..வண்டிக்காரா' என்ற நீலாவணனின் பாடலைப்பாடி ரசிகர்களை மகிழ்வித்தார். அடுத்து ஆரணி மகேஸ்வர னின் நடன அமைப்பில் 'மாங்கல்யம் தந்து' என்ற நடன நிகழ்ச்சி இடம் பெற்றது.

இதைத் தொடர்ந்து விஜயசீலன் தியாக ராஜாவின் நெறியாள்கையில் 'அஞ்சலி' என்ற மேடை நாடகம் இடம் பெற்றது. நாடகத்தின் முதற்பகுதி காணொலி வடிவத்திலும், மிகுதிப்பகுதி மேடை நாடகமாகவும் இடம் பெற்றிருந்தது. மல்வேன் பூங்காவில் உள்ள அதிபர் பொ. கனகசபாதி நினைவுப்பூங்காவில் அவரை நினைவுகூரும் வகையில் முற்பகுதி அங்கு படமாக்கப் பட்டிருந்தது. சாந்திநாதனுடன் இணைந்து இது போன்ற பல நிகழ்வுகளில் பணியாற்றியதால், நெறியாளர் விஜயசீலன் மற்றும் குழுவினரின் கடின உழைப்பை இந்த மேடையில் காணமுடிந்தது, பங்குபற்றிச் சிறப் பாக இந்த விழா நிகழ்வைத் தந்த எல்லோருக்கும் எமது பாராட்டுக்கள். இறுதியாக உபசெயலாளர் ரதி சாம்ப வலிங்கத்தின் நன்றியுரையுடன் முத்தமிழ் விழா இனிதே நிறைவு பெற்றது.

---




**ஆர். புஸ்பகாந்த், 2ஆவது ஒழுங்கை, தெகிவளை.**

**கேள்வி:** திருகோணமலை இலுப்பைக்குளத்தில் பொரலுகந்த ரஜமகா விகாரை எனும் பெயர் பலகை நடப்பட்டுள்ள பகுதியில் இரகசியமாக இரவிரவாக விகாரை கட்டுமானப் பணி தொடர்கிறது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனராமே?.

**வியுக்தியார்:** நானும் அந்தச் செய்தியைப் பார்த்தேன். ஈழநாடும் அதனை செய்தியாக்கியிருந்தது. ஆசிரியர் என்ன நினைக்கிறாரோ தெரியவில்லை. பெயர்பலகை யையும் வைத்துவிட்டு அவர்கள் கட்டுகிறார்கள் அதில் என்ன இரகசியம் என்பது தெரியவில்லை. இரவிரவாக கட்டுகிறார்கள் என்றால் சில வேளைகளில், நாம் குறிப் பிட்ட காலத்திற்குள் கட்டி முடிக்கவேண்டும் என்றால் இரவு பகலாக கட்டுவதுபோல அவர்களும் கட்டுகிறார் களோ தெரியவில்லை. அது வேறு ஒன்றும் இல்லை, இனியும் திருகோணமலையில் விகாரைகள் கட்டப்பட் டால் பொறுத்துக்கொள்ள மாட்டோம் என்று சில நாட்களுக்கு முன்னர் சம்பந்தன் ஐயா அறிக்கைவிட்டி ருந்தார் அல்லவா. எங்கே மனுசன் வந்து கட்ட விடா மல் தடுத்துவிட்டாலும் என்று அவசரம் அவசரமாக கட்டுகிறார்களோ தெரியவில்லையே.

---

**கே. ராம்குமார்,
பிள்ளையார் கோவிலடி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** இலங்கை பொருளாதாரத்தின் ஸ்திரதன் மைக்கான ஆரம்ப அறிகுறிகள் இருந்தபோதிலும் முழுமையான பொருளாதார மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லையென சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) பணிக்குழு தெரிவித்துள்ளதே. ஆனால் அரசாங்கத்தில் உள்ள சிலரோ நாடு பொருளாதார ரீதி யாக மீண்டு எழுந்துவிட்டது என்றல்லவா கூறிக்கொண் டிருக்கிறார்கள்?

**வியுக்தியார்:** அண்மையில் எமது ஊர்க்குருவியர் ஒரு செய்தி சொல்லியிருந்தாரே படிக்கவில்லையா? ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார ஆலோசக ரான கலாநிதி சமரதுங்கவுக்கு நெருக்கமான வட்டாரங் களை மேற்கோள்காட்டி ஊர்க்குருவியர் எழுதியிருந்த அந்தப் பத்தியில், இந்த அக்டோபரிலேயே பொருளா தாரம் மீண்டுவிடும் என்ற போதிலும் அதனை வெளியே சொல்லாமல் அடுத்த ஆண்டுவரை மீட்சி பெறாதது போல காலத்தை கடத்த அரசு விரும்புவதாக தெரிவித்தி ருந்தாரே. அதாவது தேர்தல் நெருங்கும்வரை மக்களை அச்சத்தில் வைத்திருந்துவிட்டு கடைசி நேரத்தில் நாடு மீண்டுவிட்டது என்று பிரச்சாரம் செய்ய திட்டமிடுவ தாக தெரிவித்திருந்தது ஞாபகம் வருகின்றது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகத்தான் ஐஎம்எவ்வும் பிரச் சாரம் செய்கிறார்கள் என்றுதான் நினைக்கவேண்டியி ருக்கின்றது.

---

**சிவபாலன் செந்துஜன், கதிரேசு வீதி, வவுனியா.**

**கேள்வி:** குருந்தூர்மலையில் ரஜமகா விகாரைக்கு என்று சுவீகரிக்கப்பட்ட 229 ஏக்கர் நிலத்தில் 3 ஏக்கர் காணியை சிவன் ஆலயம் அமைக்கவும் - அதன் தேவை களுக்காகவும் ஒதுக்கவுள்ளதாக புத்தசாசன அமைச்சு தெரிவித்துள்ளதே. சிவனுக்கு ஆலயம் அமைப்பதில் இருந்த சிக்கல் தீர்ந்துவிட்டதால் ஆலயம் இனி கட்டப்படும் அல்லவா?

**வியுக்தியார்:** ஆலயம் கட்டப்படும் என்பது அல்ல இங்கே நாம் பார்க்கவேண்டியது. அது என்ன புத்தருக்கு 226 ஏக்கர், சிவனுக்கு 3 ஏக்கர்? ஜனாதிபதிக்கும் வடக்கு எம்.பி.க்களுக்குமிடையே நடந்த ஒரு சந்திப்பில் கலந்து கொண்ட தொல்லியல் திணைக்களப் பணிப்பாளரிடம், விகாரைக்கு எதற்கு 229 ஏக்கர் காணி? மகா விகாரைக்கு கூட அத்தனை பெரிய காணி இல்லையே என்று ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க கேள்வி கேட்டதும் அதனைய டுத்து அவர் பதவி விலகியதும் பழைய செய்திகள். ஆனால் ஜனாதிபதி அல்ல, யார் ஆணையிட்டாலும் தொல்லியல் திணைக்களம் தான் நினைத்ததைத்தான் செய்யும் என்பதா? அல்லது அரசாங்கமே பிள்ளையை யும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடுகிறதா என்பது தான் புரியவில்லை.

---

**ப. அபிஷேக்குமார், எல்லை வீதி,
மட்டக்களப்பு.**

**கேள்வி:** இலங்கையின் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவரான மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேக்கும் ஏப்ரல் 21 தாக்குதலின் சூத்திரதாரியாக கருதப்படும் சஹ்ரான் ஹாஷிமுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது என்ப தற்கான ஆதாரம் எதுவும் தங்களிடம் இல்லை என பிரித் தானியாவின் சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பா கிய ஏப்ரல் 21தாக்குதல் தொடர்பான ஆவணப்படத்தின் இயக்குநரும், தயாரிப்பாளரும் தெரிவித்துள்ளனராமே. ஆதாரம் இல்லாமலா இப்படியொரு ஆவணப்படத்தை வெளியிட்டனர்.?

**வியுக்தியார்:** பிள்ளையான் என்று அறியப்பட்ட சிவ நேசதுரை சந்திரகாந்தனின் உதவியாளராக இருந்த அசாத் மௌலானா என்பவரின் சாட்சியத்தை வைத்தே அந்தப் படம் தயாரிக்கப்பட்டிருந்தது. இப்போது தான் அவர்களுக்கு அந்த மௌலானாவின் உண்மை முகம் தெரிந்ததோ அல்லது அவர் ஆதாரம் இல்லாதவர் என்பது தெரிந்ததோ தெரியவில்லை. நமது கவலை யெல்லாம், அந்த மௌலானாவை ஆதாரமாக வைத்துக் கொண்டு பாராளுமன்றத்தில் கர்ஜித்த நமது பிரதிநிதிக ளின் திறமை மீதுதான். என்ன, இந்த ஆவணப்படத்தை ஆதரித்ததால், இதுபோலத்தான் சனல் 4 வெளியிட்ட இதற்கு முந்தைய ஆவணப்படங்களும் என்று தெற்கில் சிங்கள கடும்கோட்பாளர்களை பேசவைத்திருக்கிறோம் அவ்வளவுதான்.

# அஜர்பைஜான் கைப்பற்றிய கராபாக் பிராந்தியம்: இனச்சுத்திகரிப்பு அச்சத்தில் ஆர்மேனிய மக்கள்!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

அஜர்பைஜான் படைகளிடம் சரணடைந்த பின்னர், பிரிந்து சென்ற நாகோர்னோ-கராபாக் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு புகலிடமளிக்க ஆர்மேனியா தயாராக உள்ளது என்று ஆர்மேனியா பிரதமர் நிகோல் பஷினியன் தெரிவித்துள்ளார். ஆயினும் கராபக்கில் ஆர்மேனியர்களுக்கு நேரடியாக அச்சுறுத்தலும், பொது மக்கள் இன அழிப்புக்கு முகங்கொடுக்க நேரிடும் என ஆர்மேனிய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

**இன அழிப்பின் அச்சம்**

பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தங்குமிடம் தயார் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார். ஆனால் அஜர்பைஜான் அரசு, இப் பிராந்தியத்தில் அமைதியான மறு ஒருங்கிணைப்பை விரும்புவதாகக் கூறியுள்ளது. கராபாக்கில் உள்ள ஆர்மேனிய படைகள் 24 மணிநேர கடுமையான சண்டைக்குப் பிறகு புதன்கிழமை அஜர்பைஜானுடன் போர்நிறுத்தத்தை ஒப்புக்கொண்டன.

ரஷ்யா அமுல்படுத்திய போர்நிறுத்தத்தின் விதிமுறைகளின் கீழ், உள்ளூர் கராபாக் படைகள் முற்றிலும் கலைக்கப்படுவதோடு நிராயுதபாணியாக்கப் படுவதற்கும் உறுதியளித்தன.




கராபாக்கின் மனித உரிமைகளின் தகவலின்படி, ஆர்மேனியர்களால் ஸ்டெபனகெர்ட் என்று அழைக்கப்படும் தலைநகர் காங்கெண்டியின் தெருக்கள் எல்லாம் இடம்பெயர்ந்த மக்களால் நிரம்பியுள்ளன. பசி, பயம் மற்றும் நிச்சயமற்ற நிலையில் மக்கள் உள்ளனர்.

ஆர்மேனிய பிரதமரின் தகவற்படி, இப்பிராந்தியத்தின் மதிப்பிடப்பட்ட 120,000 இன ஆர்மேனியர்கள் கண்ணியமான மற்றும் பாதுகாப்பான நிலையில் தங்கள் வீடுகளில் தங்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றார்.

**அஜர்பைஜான் கட்டுப்பாட்டில்**

அஜர்பைஜான் சர்ச்சைக்குரிய நகோர்னோ-கராபக் பிராந்தியத்தின் கட்டுப்பாட்டை எடுத்துக்கொள்கிறது என பிபிசி தகவலும் உறுதிப்படுத்தி உள்ளது. கடந்த வாரம் ஆர்மேனியா ஆதரவுப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள நகோர்னோ-கராபக் பிராந்தியத்தில்



பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாக அஜர்பைஜான் அறிவித்தது.

ஆர்மேனியாப் பழங்குடியினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட நகோர்னோ கராபக் பிராந்தியம், அஜர்பைஜானின் ஓர் அங்கமாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் 1994-ஆம் ஆண்டு போருக்குப் பிறகு அந்தப் பகுதி ஆர்மேனியா ஆதரவு பெற்ற பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

**கராபாக்கில் அஜர்பைஜான் தாக்குதல்**

கராபாக்கில் அஜர்பைஜான் தாக்குதலில் 200 பேர் பலியானதுடன் 400 பேர் படுகாயம் அடைந்தனர். இறந்த வர்களில் 10 பேர் பொது மக்கள் ஆவர் என்றும் அவர்களில் ஐந்து குழந்தைகள் என்றும் கூறப்பட்டது.

அஜர்பைஜானில் உள்ள நாகோர்னோ-கராபாக் என்பது தென் காக்கசஸில் உள்ள கராபாக் மலைத் தொடர்களுக்குள் நிலத்தால் சூழப்பட்ட பகுதி. அஜர் பைஜான் அரசு நடத்திய ஒரு நாள் ராணுவ நடவடிக் கைக்குப் பிறகு ஏற்பட்ட தாக்குதலில் நூற்றுக்கணக் கான உயிர்கள் கொல்லப்பட்டதாக ஆர்மேனிய அதிகாரி ஒருவர் கூறினார்.



**அஜர்பைஜான் முற்றுகையில்**

கடந்த டிசம்பர் 2022 இல் ஆர்மேனியாவுடன் இணைக்கும் ஒரே வழியை அஜர்பைஜான் முற்றுகையிட்டதிலிருந்து நாகோர்னோ - கராபாக் தனிமைப் பட்டது. தற்போது இந்த தாக்குதல் தொடங்கியதில் இருந்து ரஷ்யா அதன் அமைதி காக்கும் படையினர் 5,000 பேரை ஆபத்தான பகுதிகளில் இருந்து வெளியேற்றிய தாக ரஷ்ய இன்டர்வக்ஷ் செய்தி நிறுவனம் தெரிவித் துள்ளது.

தெற்கு காகசஸில் உள்ள பிரிந்த பகுதி அஜர்பைஜா னின் ஒரு பகுதியாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப் பட்டுள்ளதுடன், பாக்குவில் (Baku) உள்ள அரசாங்கம் அதன் முழு கட்டுப்பாட்டையும் எடுக்க விரும்புவதாக தெளிவுபடுத்தியுள்ளது.

அஜர்பைஜானின் ஜனாதிபதி இல்ஹாம் அலியேவ், போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஒரு பெரிய வெற்றியாகப் பாராட்டினார். பல தசாப்தங்களுக்குப் பிறகு முதன் முறையாக தனது நாடு இந்த பிரதேசத்தின் மீது அதன் இறையாண்மையை மீட்டெடுத்ததாக அறிவித்தார்.

ஆனால் அஜர்பைஜான் கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்வது இனச் சுத்திகரிப்புக்கு வழிவகுக்கும் என்றும் கராபக் ஆர்மேனியர்கள் வெளியேற நிர்பந்திக்கப்படுவார்கள் என்றும் ஆர்மேனிய இனத்தவர்கள் அஞ்சுகின்றனர்.பல மாதங்கள் நீடித்த முற்றுகை மற்றும் குறிப்பிடத் ஸ்ரீதக்க சர்வதேச ஆதரவு இல்லாமல் பலவீனமடைந்த கரா பக்கின் ஆர்மேனிய படைகள் பின்வாங்கின. கடந்த செவ்வாயன்று அதன் இராணுவ நடவடிக்கையை தொடங்கிய பின்னர் அஜர்பைஜான் விரைவான பிராந் திய கைப்பற்றுதலில் வெற்றி கண்டது.

> **அஜர்பைஜான் கராபாக் பிராந்தியத்தை கைப்பற்றியுள்ளதால் ஆர்மேனியர்க்கு நேரடியாக அச்சுறுத்தலும், பொது மக்கள் இன அழிப்புக்கு முகங்கொடுக்கவும் நேரிடும் என ஆர்மேனிய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்**

அஜர்பைஜான் தாக்குதலின் போது ஐந்து ரஷ்ய அமைதி காக்கும் படையினர் தவறுதலாக கொல்லப்பட்டதாக பாக்குவில் இருந்து தகவல்கள் கூறுகின்றன.

**சர்ச்சைக்குரிய பிராந்திய வரலாறு**

மத்திய ஆசிய காவ்கஸ் மலைப்பகுதியில் ஆர்மேனியாவிற்கும் அஜர்பைஜானுக்கும் இடையில் சர்ச்சைக்குரிய நாகோர்னோ-கராபாக்கில் அடிக்கடி இராணுவ மோதல்கள் வெடித்துள்ளன.

ஆர்மேனிய தலைநகர் யெரெவனும், அஜர்பைஜான் தலைநகர் பாக்குவும் ஒன்றுக்கொன்று படைகளுக்கு இடையே 30 ஆண்டுகளுக்கு மேலாகச் சர்ச்சை மிகுந்த “நாகோர்னா -காராபாக்” பிராந்தியத்தை ஆட்சி செய்ய முயன்றன.

1991 இல் சோவியத் யூனியன் உடைந்தபோது தனிக் குடியரசு நாடுகளான ஆர்மேனியாவும், அஜர்பைஜானும் எல்லையில் 4400 சதுர கிமீ பரப்பளவு கொண்ட நார்கோனா காராபாக் மலை பகுதி தான் இரு நாடுகளுக்குமான எல்லையாக உள்ளது. இந்த பகுதி யாருக்கு சொந்தம் என மோதல் நிலவுகிறது.

1988ம் ஆண்டு முதல் நடந்த எல்லை போரில் 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். 1994ம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தபோது, நார்கோனா காராபாக் மலை பகுதி அஜர்பைஜான் நாட்டின் பகுதியாக அங்கீகரிக்கப்பட்டது.

அஜர்பைஜான் ஆர்மேனியா எல்லை மோதல்

கடந்த வருட இறுதியில் அஜர்பைஜான் கட்டுப்பாட்டில் இருக்கும் லச்சின் வழித்தடத்தில் சாலைப் போக்குவரத்தை அந்த நாடு முடக்கியதாக ஐ.நா.வில் ஆர்மேனியா குற்றஞ்சாட்டியது.

இதன் காரணமாக அந்தப் பிராந்தியத்துக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல முடியாததால்




அங்கு வசிக்கும் சுமார் 1.2 லட்சம் பேர் பட்டினியால் இறக்கும் அபாயம் உள்ளதாகவும், இந்த நடவடிக்கை மூலம் அஜர்பைஜான் இன அழிப்பில் ஈடுபடுவதாகவும் ஆர்மேனியா கூறியது.

ஆனால் இதனை அஜர்பைசான் மறுத்தது. இந்நிலையில், நகேர்னோ-கராபக் பிராந்தியத்தில் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாக அஜர்பைஜான் அறிவித்து தற்போது இப்பிராத்திய கட்டுப்பாட்டை கைப்பற்றி உள்ளது.

**சோவியத் கால நீண்ட பகை**

நாகோர்னோ - கராபக் பெரும்பாலும் மலை மற்றும் காடுகள் நிறைந்ததாகும். ஆனால் அப்பகுதியில் ஆர்மேனியா நாட்டு மக்களே அதிகம் உள்ளனர்.

2016ம் ஆண்டு முதல் மீண்டும் இரு நாடுகளுக்கும் இடையே எல்லை விவகாரம் தொடர்பாக சண்டை மூண்டது. 2020ம் ஆண்டு அது பெரும் போராக மாறியது. அப்போது ரஷ்யா தலையிட்டு அமைதிக்கு வழி வகுத்தது.அந்த போரில் 6600 பேர் வரை பலியாகினர்.

**போர் அபாய பின்னணி என்ன?**

இந்த மலைப்பகுதிக்கான முதல் போர் 1988இல் நடந்தது. இந்த போர் ஆறு ஆண்டுகள் நீடித்தது. போரின் முடிவில் நாகோர்னா- காராபாக் மலைப் பகுதி அஜர்பைஜானுக்கு சொந்தமானது என அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் அந்த அங்கீகரிக்கப்பட்ட பகுதியில், ஆர்மேனியா பழங்குடிகள் அதிகம் வாழ்கிறார்கள் என்பதால் அந்த பகுதியை அஜர்பைஜான் அரசால் சொந்தம் கொண்டாட முடியவில்லை.

2020 போர் - தொடர்ச்சியான கலவரங்களைத் தொடர்ந்து 2020ல் போர் உண்டானது. இந்த போரை ரஷ்யா தலையீட்டு செய்து சமரசம் பேசி ஒன்றரை மாதத்தில் முடிவுக்குக் கொண்டு வந்தது. இந்த போரில் ஆர்மேனியா மக்கள் அதிகம் வாழும் மலைப் பகுதியை அஜர்பைஜான் கைப்பற்றியது.



ஆர்மேனியாவில் கிறிஸ்தவர்கள் அதிக அளவிலும், அஜர்பைஜானில் இஸ்லாமியர்கள் அதிகமாகவும் வாழ்கி றார்கள். எண்ணெய் வளம் அஜர்பைஜானில் உள்ளது. இதனால் ரஷ்யா அஸர்பைஜானுடன் நட்பு பாராட்டி வருகிறது. ஆனால் ஆர்மேனியாவில் ரஷ்யாவின் ராணுவ தளம் இருக்கிறது. இதனால் இரு நாடுகளும் ரஷ்யாவிற்கு முக்கியமான நாடுகள் ஆகும்.

ஆயினும் தற்போது அஜர்பைஜான் நகோர்னோ-கராபக் பிராந்தியத்தை கைப்பற்றி உள்ளதால், இன்னு மோர் ஆர்மேனிய இன அழிப்பு ஏற்படக் கூடிய சாத்தி யங்கள் உள்ளதாக மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

ஈழநாடு



# சிறிலங்கன் விமான சேவை ரத்து; நாளை முக்கிய கலந்துரையாடல்

கொழும்பு, ஒக். 01

சிறிலங்கன் விமான சேவையின் பயணங்கள் இரத்து செய்யப்படுகின்றமை, தாமதமாகின்றமை தொடர்பில் நாளை திங்கட்கிழமை கலந்துரையாடப்படவுள்ளது.

சிறிலங்கன் விமான நிலைய தொழிற்சங்க உறுப்பினர்கள் இதில் பங்கேற்கவுள்ளதாக துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறினார்.

கடந்த சில நாட்களாக சிறிலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானங்களின் பல விமானப் பயணங்கள் தாமதமடைந்ததுடன், சில விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

நேற்று முன் தினமும் இரண்டு விமான பயணங்கள் இரத்து செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக விமானங்களில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பல விமானங்கள் இரத்து செய்யப்பட்டதாக சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் அறிக்கையொன்றினூடாக தெரிவித்துள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் சாதாரணமானவை என விமான சேவை நிறுவனம் கூறியுள்ளது.

விமான பராமரிப்பு ஒரு நுணுக்கமான செயற்பாடு எனவும் சிறிலங்கன் விமான நிறுவனத்தால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்தம் தெரிவிப்பதாக கூறியுள்ள சிறிலங்கன் விமான நிறுவனம், இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் கூறியுள்ளது.

இதேவேளை, சிறிலங்கன் விமான நிறுவனத்தின் உரிமம் பெற்ற விமானப் பொறியியலாளர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு விமானத்தின் தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்களை உரிமம் பெற்ற விமான பொறியியலாளர்களே சரிபார்க்கின்றனர்.

விமானமொன்று வானில் பறப்பதற்கு உரிமம் பெற்ற விமான பொறியியலாளர்களின் சான்றிதழ் அத்தியாவசியமாகும்.

அத்துடன், உரிமம் பெற்ற விமான பொறியியலாளர்கள் விமானத்திற்கான தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதோடு, அவற்றின் தரத்தையும் பராமரிக்கின்றனர்.

சிறிலங்கன் விமான நிறுவனத்தில் 160 உரிமம் பெற்ற விமான பொறியியலாளர்கள் கடமையாற்றுகின்றனர்.

நாட்டின் பொருளாதார நிலைமைக்கு மத்தியில், அதில் உரிமம் பெற்ற 35 விமான பொறியியலாளர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

மேலும் உரிமம் பெற்ற 25 விமான பொறியியலாளர்கள் வெளிநாடுகளுக்கு செல்லும் எதிர்ப்பார்ப்பில் உள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத உரிமம் பெற்ற விமான பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

# வெளிநாட்டு கப்பல்கள், விமானங்கள் வருகை; அனுமதியளிக்க விரைவில் புதிய நடைமுறை

கொழும்பு, ஒக். 01

இலங்கைக்கு அடிக்கடிவரும் சீன கப்பல்களால் இந்தியா பெரும் கவலையுற்றுள்ள சூழலில் எதிர்காலத்தில் இலங்கைக்குவரும் கப்பல்கள் மற்றும் போர் விமானங்களுக்கு அனுமதியை வழங்க புதிய நடைமுறையொன்றை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் கடல் எல்லைக்குள் அனுமதிக்கப்படும் கப்பல்களின் வகை பற்றிய வழிகாட்டுதல்கள் மற்றும் விவரங்களை உள்ளடக்கிய நடைமுறைகளை விரைவில் கொழும்பு அறிவிக்க உள்ளதாக இந்துஸ்தான் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் முயற்சியால் இந்த செயல்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்தில் செயற்கைக் கோள்கள் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைகளை கண்காணிக்க சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் பயன்படுத்தும் யுவான் வாங் 5 என்ற கப்பலின் வருகையால் கடந்த ஆண்டு புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையே இராஜதந்திர ரீதியிலான பல முறுகல்கள் ஏற்பட்ட பின்புலத்தில் அடுத்த மாதம் பிற்பகுதியில் யுவான் வாங் 6 என்ற கப்பல் இலங்கைக்கு வரவுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

என்றாலும், இதற்கு இன்னமும் இலங்கை அனுமதி அளிக்கவில்லையென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தமது இந்திய விஜயத்தில் கூறியிருந்தார்.

இவ்வாறான பின்புலத்தில்தான் இலங்கை முயக்கிய நகர்வாக இலங்கைக்குவரும் கப்பல்கள் மற்றும் போர் விமானங்களுக்கு அனுமதியை வழங்க புதிய நடைமுறையொன்றை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் கடல் எல்லைக்குள் அனுமதிக்கப்படும் கப்பல்களின் வகை பற்றிய வழிகாட்டுதல்கள் மற்றும் விவரங்களை உள்ளடக்கிய நடைமுறைகளின் பிரகாரம் ஒரு நாட்டின் நீரில் கப்பல்கள் எவ்வளவு காலம் இருக்க முடியும் மற்றும் அவை எந்த வகையான நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பதையும் தெரிவிக்கும்.

இலங்கைக் கடற்பரப்பில் இருக்கும் போது சீனக் கப்பல்கள் இந்திய பாதுகாப்பு வசதிகளை உற்று நோக்குவதற்கு தமது உபகரணங்களைப் பயன்படுத்த முடியும் என்பதே இந்தியத் தரப்பின் மிகப்பெரிய கவலையாக இருந்தது.

அமெரிக்க விஜயத்தில் நியூயோர்க்கில் இந்தோ - பசிபிக் தீவுகள் உரையாடலில் பங்கேற்றபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் கடல் எல்லைக்குள் அனுமதிக்கப்படும் கப்பல்களின் வகை பற்றிய வழிகாட்டுதல்கள் மற்றும் விவரங்களை உள்ளடக்கிய நடைமுறைகளைப் பற்றி குறிப்பிட்டார்.

இலங்கை கடற்படையால் அமைக்கப்பட்ட முந்தைய நடைமுறைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட புதிய நடைமுறை குறித்து இந்திய தரப்புடன் ஆலோசனைகள் இடம்பெற்று வருகின்றன.

சமீபத்தில், நாங்கள் இந்தியாவுடன் கலந்துரையாடினோம். எதிர்காலத்தில் இலங்கைக்கு வரும் எந்தவொரு ஆய்வு அல்லது போர் கப்பல்களுக்கும் இந்தியாவுடன் கலந்துரையாடியே அனுமதிகள் அளிக்கப்படும் எனவும் ஜனாதிபதி இந்த சந்திப்பில் கூறியிருந்தார் என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது. (அ)

# எம்.பியின் மெய்க்காவலர் கஞ்சாவுடன் சிக்கினார்!

கொழும்பு, ஒக். 01

கஞ்சா போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உள்ளிட்ட 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஒக்கம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

ஒக்கம்பிடிய பிரதேசத்தில் முச்சக்கரவண்டியில் மூன்று கஞ்சா போதைப்பொருள் பொதிகளை கடத்திச்சென்ற குற்றத்திலேயே குறித்த 3 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

கைதுசெய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார்.

மொனராகலை பிரதேச புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மீண்டும் சர்ச்சையை...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதும் மக்களின் கருத்துக்களை அறிவதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுமே முறையான ஜனநாயக நடவடிக்கைகளாக இருக்கும். ஆனால் இலங்கையில் அரசாங்கங்கள் அத்தகைய செயன்முறைகளில் அக்கறை காட்டுவதில்லை. இது மிகவும் கவலைக்குரியது.

சர்வதேச அரசியல் ஆய்வாளரும் பத்திரிகையாளருமான அமீன் இஸ்ஸதீன் கடந்த வெள்ளிக்கிழமை 'டெயிலி மிரர்' பத்திரிகையில் "சமூக ஊடகங்களை ஒழுங்கமைப்பதற்கு முன்னதாக பரந்தளவிலான பொதுவிவாதம் தேவை" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் இணையவெளி பாதுகாப்பு சட்டத்தை கொண்டுவருவதற்கு முன்னதாக அகல்விரிவான விவாதங்கள் முன்னெடுக்கப்பட்ட இரு சர்வதேச உதாரணங்களை சுட்டிக்காட்டியிருந்தார்.

நான்கு வருட கால பொது விவாதத் துக்கு பிறகு பிரிட்டிஷ் பாராளுமன்றம் கடந்த வாரம் இணையவெளி பாதுகாப்பு சட்டம் ஒன்றை நிறைவேற்றியது. இணையத் தளங்களும் இணையத்தை அடிப்படையாகக் கொண்ட சேவைகளும் சட்டவிரோதமானதும் மக்களுக்கு ஊறுவிளைவிக்கக் கூடியதுமான விடயதானங்கள் இல்லாதவையாக இருப்பதை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கின்ற அதேவேளை இந்த பிரிட்டிஷ் சட்டம் கருத்துவெளிப்பாட்டு சுதந்திரத்தையும் பாதுகாக்கிறது. சட்டத்தை பின்பற்றி நடக்காத சமூக ஊடகக் கம்பனிகளுக்கு பெருந்தொகைப் பணம் அபராதமாக விதிக்கப்படுகிறது.

இலங்கையின்புதிய இணையவெளி பாதுகாப்பு சட்டமூலம் சிங்கப்பூரின் சமூக ஊடகச் சட்டத்தை பின்பற்றி வரையப்பட்டதாகத் தெரிய வருகிறது. ஆனால் அரசியல் நோக்கங்களுக்காக சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கும் பேச்சுச் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலை தோற்றுவிக்கவும் கூடியதாக சர்ச்சைக்குரிய சில ஏற்பாடுகள் இலங் கையின் சட்டமூலத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒளிவுமறைவின்றி பரந்தளவிலான பொது கலந்தாலோசனைச் செயன் முறைக்கு பின்னரே சிங்கப்பூர் பாராளுமன்றத்துக்கு அந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இலங்கையில் சட்டமூலம் அரசாங்க வர்த்தமானியில் வெளியான பின்னரே பொதுவிவாதம் நடைபெறுகிறது என்று அமீன் இஸ்ஸதீன் எழுதியிருக்கிறார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தையும் இணையவெளி பாதுகாப்பு சட்ட மூலத்தையும் உடனடியாக அரசாங்கம் வாபஸ்பெறவேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேட்டிருக்கிறது.

மக்களின் சுதந்திரத்தை பாரதூரமான முறையில் பாதிக்கக் கூடியதாகவும் நாட்டில் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைந்திருப்பதால் இரு சட்டமூலங்களையும் நிறைவேற்றுவதை நோக்கிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கக்கூடாது என்று சட்டத்தரணிகள் சங்கம் சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட அறிக்கையில் வலியுறுத்தியிருக்கிறது.

சட்டத்தரணிகள் சங்கம் உட்பட அக்கறையும் ஈடுபாடும் கொண்ட தரப்புகளுடன் நியாயமான கலந்தா லோசனை இல்லாமல் சட்டமூலங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியிருக்கும் அறிக்கை பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் முன்னைய வடிவம் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் முன் வைத்த அவதானிப்புகளை அரசாங்கம் கவனத்தில் எடுக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறது. ●

# இலங்கை மீது நம்பிக்கை இழந்து தலைமறைவாக வாழும் பிரி. யுவதி!

கொழும்பு,ஒக். 01

இலங்கையில் 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற காலிமுகத் திடல் போராட்டத்தின் காணொலிகளைப் பகிர்ந்த குற்றச்சாட்டுக்கு உள்ளான பிரித்தானிய சமூக ஊடகப் பெண் தொடர்ந்தும், தாம் இலங்கையில் தலைமறைவாகவே இருப்பதாக தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய இணையம் ஒன்றுக்கு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

13 மாதங்கள் இவ்வாறு தலைமறைவாக உள்ள நிலையில் தாம் நம்பிக்கையை இழந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்

35 வயதான கெய்லீ பிரேசர், தங்கியிருந்த இடத்தில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் இலங்கை குடிவரவு அதிகாரிகளால் சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது அவர் சட்ட விரோத விஸாவில் நாட்டிற்கு வருகை தந்ததாக கூறி அவரது கடவுச்சீட்டை அதிகாரிகள் கைப்பற்றினர்.

இன்ஸ்டாகிராம் பக்கத்தில் காலிமுகத்திடல் போராட்டங்களின் காணொளிகளை பகிரத் தொடங்கியதன் பின்னரே, அதிகாரிகள் தமது வீட்டை சோதனையிட்டதாக கெய்லீ பிரேசர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் அவரை நாட்டில் இருந்து வெளியேறுமாறு அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

இலங்கையின் உயர்நீதிமன்றம், அதிகாரிகள் பிறப்பித்த நாடுகடத்துதல் உத்தரவை உறுதி செய்தது எனினும் நாட்டின் மோசமான பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்படலாம் என்ற அச்சத்தின் மத்தியில், இலங்கை அதிகாரிகளிடம் சரணடைய தாம் பயப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் பிரித்தானியாவின் வடகிழக்கு பைபா பிராந்திய பாராளுமன்ற உறுப்பினர் வெண்டி சேம்பர்லெய் இலங்கையின் வெளியுறவு அலுவலக அதிகாரிகளை சந்திப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அவர், கெய்லீ பிரேசர் இலங்கையை விட்டு வெளியேற உத்தரவாதம் அளிக்கப்படுவார் என்ற எழுத்துபூர்வ உறுதிமொழியை இலங்கை அரசாங்கத்திடம் இருந்து பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## திருமலை...

திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியின் இலுப்பைக்குளம் பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரையின் கட்டுமானப் பணிகளுக்கு அங்குள்ள மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில், குறித்த பகுதியில் கட்டுமானப் பணிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநரினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், கடந்த திங்கட்கிழமை முதல் குறித்த பகுதியில் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அதனை தடை செய்யக் கோரியுமே இன்றைய தினம் போராட்டம் நடைபெறவுள்ளது.

இலுப்பைக்குளம் மற்றும் அதனை சூழவுள்ள கிராமங்களில் முழுமையாக தமிழ் மக்களே வசிக்கின்றனர். சிங்கள மக்களின் குடியிருப்பு இல்லாத பகுதியில் விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இராணுவத்தின்...

எண்ணிக்கையை பாதிக்க குறைப்பது அரசாங்கத்தின் இலக்காக இருந்து வருகிறது.

எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் இராணுவத்தின் எண்ணிக்கையை ஒரு லட்சமாக குறைக்க அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதற்கு இணையாக கடற்படை மற்றும் விமானப்படையினரின் எண்ணிக்கை குறைக்க அரசாங்கம் எண்ணியுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

## நீதித்துறையை...

விதத்திலே நீதியை நடைமுறைப் படுத்தும் நீதித்துறைக்கு பங்கம் ஏற்படும் விதத்திலே யாராவது நடந்து கொண்டால் உடனடியாக அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர நீதிபதிக்கு தொல்லைகள் கொடுக்கக்கூடாது. ஆனால் இலங்கையில் நடைபெறுவது இவ்வாறான செயல்பாடுகள் அல்ல. எல்லாமே ஒரு சிங்கள - பௌத்த சிந்தனையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆகவே, ஒரு தமிழருக்கு சார்பாக ஒரு தமிழ் நீதிபதி தீர்ப்பு கொடுத்தால் ஒரு முஸ்லிமுக்கு சார்பாக ஒரு முஸ்லிம் நீதிபதி தீர்ப்பு கொடுத்தால் சிங்களவர்கள் ஏதோ அவர்கள் தமிழர்களாக இருப்பதால்தான் இவ்வாறு தீர்ப்பு கொடுத்திருக்கின்றார்கள் என்று கூறுகின்றார்களே தவிர, சிங்கள நீதிபதிகள் சிங்களவர்களுக்கு சார்பாக நீதி கொடுக்கின்றார்கள் என்று சிந்திப்பதில்லை.

இதில் நான் தெரிவிப்பது நீதிபதிகள் சட்டத்தின்படி நடக்கத்தான் அவர்களுக்கு நாங்கள் பயிற்சி கொடுத்திருக்கின்றோம். அவர்கள் இவ்வாறு தான் செய்கின்றார்களே தவிர, அதில் தமிழர்,சிங்களவர் என்று பாகுபாடு பார்த்து அவர்கள் இதனை செய்யவில்லை இவ்வாறு நினைப்பது பிழையான ஒரு சிந்தனையாகும். இந்த சிந்தனையில்தான் இவ்வாறு இந்த நீதிபதிக்கு நடந்திருக்கின்றது என்பதுக்கு தெரிகின்றது.

இவ்வாறான செயல்பாடுகளை கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் ஒன்றில் அவரை திரும்ப வரவழைத்து போதிய பாதுகாப்பு கொடுத்து அவரை மீண்டும் அதே பதவியை வகிக்க செய்யலாம். இது நடைமுறைக்கு சாத்தியமானதாக இருக்கின்றதா என்பது தெரியவில்லை.

ஆனால், அரசாங்கம் ஒன்றை கவனத்தில் எடுக்க வேண்டும். இவ்வாறான செயல்பாடுகளை கட்டுப்படுத்தாவிட்டால் சிங்கள மக்களிடையேயும் இது மாதிரியான நிலைமைகள் ஏற்பட்டு பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் - என்றார். (ஐ)

## நீதிபதி...

பொலிஸாருக்கு அல்லது நீதிச் சேவை ஆணைக் குழுவுக்கு நீதவான் ஒரு போதும் அறிவிக்காத காரணத்தினால் ஜனாதிபதி இந்த ஆலோசனையை வழங்கினார். (அ)

## பிளாஸ்ரிக்கை...

என அதன் தலைவர் சுபுன் எஸ்.பத்திரகே தெரிவித்தார்.

அதன்படி, இன்று முதலாம் திகதி முதல் இது தொடர்பான திடீர் சோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தலைவர் வலியுறுத்தினார். (அ)

## குடிதண்ணீர்...

மாதங்களாக யாழ். மாவட்டத்தில் அதிகளவிலான வெப்பநிலை கிடைக்கப்பெற்ற நிலையில் சில பிரதேசங்களில் ஏற்பட்ட வறட்சியால் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

யாழ். மாவட்டத்தில் சுமார் 9 ஆயிரத்து535 குடும்பங்கள் வறட்சியால் குடிதண்ணீர் பிரச்னையை எதிர்கொண்ட நிலையில் அவர்களுக்கு தேவையான குடி தண்ணீர் வழங்கப்பட்டது.

மாவட்டத்தில் நீர் தேங்கக் கூடிய குட்டைகள் மற்றும் நீரேந்து பிரதேசங்கள் பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்புடன் தூர் வாரும் மற்றும் துப்புரவு செய்யும் செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அண்மையில் யாழ் மாவட்டத்துக்கு வருகை தந்த அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளிடம் எமது பகுதிகளில் உள்ள நீர் நிலைகளை தூர்வாரி ஆழமாக்கி தருமாறு கோரிக்கை முன்வைத்துள்ளோம்.

ஆகவே, எமது கோரிக்கைகளுக்கான திட்டங்களை தருமாறு ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு மாகாண மேலதிக செயலாளர் கோரியிருக்கின்ற நிலையில் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கும் - என்றார். (ஐ)

## இலங்கை...

ஸ்டாலினிடம் கையளித்துள்ளார்.

இலங்கையிலிருந்து பல்வேறு காலகட்டங்களில் அகதிகளாக புகலிடம் தேடி வந்த தமிழர்களை பாதுகாத்து அவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை தமிழக அரசு சுமார் 40 ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால தேவைகள் மற்றும் தீர்வுகள், அவர்களது குடும்பங்களை சேர்ந்த இளைஞர்களின் கல்வி, எதிர்கால நலன் குறித்து ஆராய்ந்து அதற்கான இடைக்கால அறிக்கை முதல்வரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் வாழும் இலங்கைப் பிரஜைகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கான வழிகளை இடைக்கால அறிக்கை ஆராய்ந்து, இது தொடர்பாக சில பரிந்துரைகளையும் செய்துள்ளது.

தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளுக்கு நீடித்த தீர்வுகள் மற்றும் குடியுரிமைக்கான சட்டப் பாதைகள் குறித்த முக்கிய பரிந்துரைகள் இந்த இடைக்கால அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

“கடந்த இரண்டு ஆண்டுகளாக முகாம்களில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளை ஆய்வு செய்து, இது சம்பந்தமாக நீதித்துறையின் மதிப்பிட்டுகளுடன் இந்த பரிந்துரைகளை செய்துள்ளோம்” என ஆலோசனை குழுவின் சட்ட நிபுணர் மனுராஜ் சுண்முகசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை தமிழகத்தில் குடியுரிமையின்றி வாழும் இலங்கையில் இருந்து சென்ற 5,000 இற்கும் மேற்பட்ட மலையகத் தமிழர்களுக்கும் இந்திய குடியுரிமையை பெற்றுக்கொடுப்பதற்கான பரிந்துரைகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காணி அபிவிருத்தி சபைக்கு வழங்கிய அனுமதியை நிறுத்துக

## பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா கோரிக்கை



கொழும்பு, ஒக். 01

முத்துராஜவெல அதி உணர்திறன் சுற்றாடல் வலயத்தின் ஜா-எல பகுதியை நிரப்புவதற்காக இலங்கை காணி அபிவிருத்தி அதிகாரச் சபை வழங்கி யுள்ள அனுமதியை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு விடுத்துள் ளார்.

கம்பஹா மாவட்ட ஒழுங்கிணைப்பு கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்தார்.

மேலும்,

பிரதேச அபிவிருத்தி குழு மற்றும் மாவட்ட ஒழுங்கிணைப்பு குழு அனுமதியளிக்காத ஒரு நிலையில் இலங்கை காணி அபிவிருத்தி அதிகார சபை எவ்வாறு முத்துராஜவெல அதி உணர்திறன் சுற்றாடல் வலயத்தை நிரப்புவதற்கு அனுமதியளிக்க முடியும். ஒரு சிலரின் தன்னிச்சையான செயல்பாடுகளினால் இவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றமையை ஏற்க முடியாது.

கத்தோலிக்க சபை, மத தலைவர்கள், சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் மக்கள் எதிர்ப்புகளை வெளியிட்டுள்ள நிலையில், முத்துராஜவெல அதி உணர்திறன் சுற்றாடல் வலயத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமையை வன்மையாக கண்டிக்கின்றோம்.

அதே போன்று இந்த நடவக்கையை துறைசார்ந்த அமைச்சருக்கு கூட அறிவிக்கப்பட வில்லை. இலங்கை காணி அபிவிருத்தி அதிகாரச் சபையின் செயல்பாடுகள் சர்ச்சைகளையும் சிக்கல்களையும் தோற்விக்கின்றன.

எனவே, ஜனாதிபதி மற்றும் துறைசார் அமைச்சரான பிரசன்ன ரணதுங்க ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்று இறுதி தீர்மானம் எடுக்கும் வரை குறித்த காணியில் நிரப்பு பணிகளை முன்னெடுப்பதை தற்காலிகமாக நிறுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## ஆபாச...

எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

இந்த ஆபாச படங்களில் சிலர் தெரிந்தே நடித்திருக்கலாம். எனினும், பெரும்பான்மையான காணொலிகள் சம்பந்தப்பட்ட நபர்கள் அறியாமல் மூன்றாம் தரப்பால் பதிவேற்றப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

காணொலிகளில் தோன்றுபவர்களின் சம்மதம் இன்றி அவை பதிவு செய்யப்பட்டு வேறொரு தரப்பு ஊடாக விற்பனை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. அத்துடன், பழிவாங்கும் நோக்கங்களுடனும் காணொலிகள் பதிவேற்றப்படுகின்றன என்றும் விடயமறிந்த தரப்புகள் கூறுகின்றன.

இதேவேளை பாதிக்கப்பட்டவர்கள் ஆபாச காணொலிகள், படங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்ய வருவதில்லை. தங்களின் கௌரவம் பாதிக்கப்படலாம் என்ற அச்சமும் இதற்கு காரணம் என்றும் பொலிஸ் தரப்பு கூறுகிறது.

எனினும், பாதிக்கப்பட்டவர்கள் அச்சமின்றி முறைப்பாடுகளை அளிக்க முடியும். அவர்களின் விவரங்கள் இரகசியமாகப் பேணப்படும் என்றும் பொலிஸ் தரப்பு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

## நிபுணர்களின்...

தொழில்நுட்ப துறையினர் சிவில் சமூகத்தினர் மற்றும் பலதரப்பட்ட நிபுணர்களின் கருத்துகளை உள்வாங்குவது அவசியம். இது அடிப்படை உரிமை அது பேச்சுகளுக்கு அப்பாற்பட்ட விடயம் அதனை பாதுகாக்க வேண்டும்.

தற்போதைய பயங்கரவாத தடைச் சட்டத்தை சர்வதேச தராதரங்கள் ஏனைய ஜனநாயக நாடுகளில் உள்ள சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப மாற்றியமைப்பது குறித்த தனது வாக்குறுதியை இலங்கை அரசாங்கம் பின்பற்றவேண்டும் என நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

வலுவான சட்டமூலத்தின் சரியான சமநிலையை பேணுவது சட்டபூர்வமான ஒன்றுகூடலுக்கு அனுமதிப்பது சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் அச்சுறுத்தல்களை வலுவான விதத்தில் கையாளக்கூடிய விதத்தில் அவர்களை வலுப்படுத்துவது ஆகியவை அவசியம்- என்றும் கூறினார். (ஐ)

## புதிய...

அண்மையில், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் கொழும்பு 7 இல் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இரவு வேளை இடம்பெற்ற இந்த சந்திப்பில் சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட புதிய அரசியல் கூட்டணிக்கு ஆதரவளிக்கும் சுமார் 30 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த பேச்சு மிகவும் இரகசியமான முறையில் நடைபெற்றதுடன் புதிய அரசியல் கூட்டணியின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் விதம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

தற்போது சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து செயல்பட்டு வரும் இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இந்த பேச்சில் கலந்து கொண்டனர் என்று தெரிய வருகின்றது.

இதன் காரணமாக இந்த சந்திப்பை இரகசியமாக நடத்தவும் அங்கு பேசப்பட்ட விடயங்களை வெளியில் கூறுவதில்லை என இவர்கள் முடிவெடுத்துள்ளனர்.

தேவையான முக்கியமான சந்தர்ப்பத்தில் பொதுஜன பெரமுனவின் குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் நிபந்தனைகள் இன்றி புதிய அரசியல் கூட்டணி ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளனர். (ஐ)

## முல்லைத்தீவு...

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகலுக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கையொன்றின் மூலம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் நீதித்துறையின் நம்பகத்தன்மை குறித்து மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், நீதிபதியொருவர் நாட்டை விட்டு வெளியேறிய சம்பவம் நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை மீது ஏற்பட்ட கரும்புள்ளி எனவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கான நீதி உள்ளக விசாரணையின் மூலம் கிடைக்காது என்பதை இது உறுதி செய்துள்ளது எனவும் இனப்படுகொலைக்கான சர்வதேச நீதிக்கு இது மேலும் வலுச்சேர்க்கின்றது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# புகலிடக் கோரிக்கைக்காக இவ்வாறு நடந்தாரா நீதிபதி?

## சந்தேகம் கொள்கிறார் சரத் வீரசேகர எம்.பி.



கொழும்பு, ஒக். 01

**முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவை நான் அச்சுறுத்தவில்லை. அவர் புகலிடக் கோரிக்கைக்காக இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளாரா என்ற சந்தேகம் நிலவுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

குருந்தூர் மலை விவகாரம் மற்றும் 'தியாக தீபம்' திலீபனின் நினைவேந்தல் விவகாரம் போன்றவற்றில் மிகமுக்கிய தீர்ப்புக்களை வழங்கிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா, உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் மிகையான அழுத்தங்கள் காரணமாகத் தனது அனைத்துப் பதவிகளிலிருந்து விலகுவதாக குறிப்பிட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

இந்த நிலையில், இவரது பதவி விலகல் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு நான் அச்சுறுத்தல் விடுத்ததாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் என்னை சுட்டிக்காட்டி அறிக்கை வெளியிட்டுள்ளதை அவதானித்துள்ளேன்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நான் நீதிபதியை அச்சுறுத்தவில்லை. நீதிமன்ற நடவடிக்கையில் தலையிடவும் இல்லை.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிபதி பதவியில் இருந்து விலகி நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக குறிப்பிடுவது பாரதூரமானது.

நாட்டில் நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லையென்றால் சாதாரண மக்களின் நிலை எவ்வாறு அமையும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

சட்டம் மற்றும் பாதுகாப்பு துறை மீதான மக்களின் நம்பிக்கை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இதனை அலட்சியப்படுத்த முடியாது.

நீதிபதி குறிப்பிடுவதைப் போன்று அவருக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்திருந்தால் அவர் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம். அல்லது பொறுப்பான தரப்பினருக்கு அறிவித்திருக்கலாம்.

உயிர் அச்சுறுத்தல் தொடர்பில் அவர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தாரா என்பதை அறியவில்லை. கடந்த காலங்களில் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றுக் கொள்வதற்காக பலர் தமக்கு இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் உள்ளது என்பதையே சர்வதேசத்திடம் முன்வைத்தார்கள்.

இந்தக் குற்றச்சாட்டும் புகலிடக் கோரிக்கையை நோக்கமாகக் கொண்டுள்ளதா என்பதும் பிரச்னைக்குரியதாக உள்ளது.

எவ்வாறு இருப்பினும் நீதிபதி குறிப்பிட்ட விடயங்கள் பாரதூரமானவை. இவ்விடயம் தொடர்பில் தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் நீதியமைச்சருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவேன்-என்றார். (அ)

# முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு பாதுகாப்பு குறைக்கப்படவில்லை



கொழும்பு, ஒக். 01

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு குறைக்கப்படவில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்தூவ தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிபதி ரி.சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியுள்ளமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் காரணமாக வெளியேறியுள்ளார் என்று அவர் வெளியிட்டதாக அறிக்கையொன்று காணப்படுகின்றது.

இருப்பினும், அவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பில் எவ்விதமான குறைப்புக்களையும் பொலிஸ் தரப்பு மேற்கொள்ளவில்லை என்பதை உறுதியாக கூறிக்கொள்வதற்கு விரும்புகின்றேன் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# ரூ.20,000 சம்பள உயர்வு கோரி அரச ஊழியர்கள் போராட்டம்

கொழும்பு, ஒக். 01

இருபதாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமெனக் கோரி அரசாங்க ஊழியர்கள் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் வாரத்தில் குறித்த தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்படும் என அரசாங்க மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான தனியார் நிறுவனங்களின் தொழிற்சங்க ஒன்றிய அழைப்பாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

இந்நிலையில், மாதாந்த சம்பளம் 20,000 ரூபாவினால் உயர்த்தப்படவேண்டும் என்பதே போராட்டத்தின் பிரதான கோரிக்கை என அவர் கூறினார்.

மேலும், தொழிற்சங்கங்களை ஒடுக்குதல், பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், ஊடக ஒழுக்கவிதிகள் சட்டம் போன்றவற்றை எதிர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய இந்த விடயங்கள் தொடர்பில் அதிகாரிகளை தெளிவுபடுத்தியபோதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என அவர் கூறினார். (அ)

# கிழக்கிலும் மலையகத்திலும் இன்று சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள்!

காரைதீவு, ஒக். 01

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி மனித அபிவிருத்தி தாபனம் மலையகம் மற்றும் கிழக்கு மாகாணங்களில் பரவலாக பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளது.

"அனைத்து சிறுவர்களையும் உள்வாங்கிக்கொள்" என்ற 2023 ஆம் ஆண்டு சிறுவர்தின தொனிப் பொருளுக்கு அமைய மனித அபிவிருத்தி தாபனம் (HDO) பல்வேறு செயற்பாடுகளை கண்டி, நுவரெலியா, கேகாலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் ஏற்பாடு செய்துள்ளது.

இதன் பிரதான நிகழ்வு இன்று முதலாம் திகதி நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலை பிரதேசத்தில் நடைப்பெறவுள்ளது என தாபன இணைப்பாளர் பி.சிறிகாந்த் தெரிவித்தார்.

இது தொடர்பாக திட்டமிடல் கூட்டம் அண்மையில் மனித அபிவிருத்தி தாபனத்தின் கொட்டகலை காரியாலயத்தில் நடைபெற்றது.

இச்செயற்பாட்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பிரதேச செயலகங்கள், பொது சுகாதாரத் துறையினர், தேசிய சிறுவர் அதிகார சபை, நன்நடத்தை அலகு, பொலிஸ், தோட்ட நிர்வாகங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை இணைத்து நடத்த திட்டமிட்டுள்ளனர். (அ)

# முல்லைத்தீவு நீதிபதி பதவி விலகல் முழுமையான விசாரணை வேண்டும்

## சட்டத்தரணிகள் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஒக். 01

சுதந்திரம் மற்றும் பக்கச்சார்பின்மையை உறுதி செய்வதற்காக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தனது பதவியை இராஜினாமா செய்தமை குறித்து முழுமையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் சட்டத் தரணிகள் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

முல்லைத்தீவு நீதிபதிக்கு உயிர்அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் என வெளியான தகவல்கள் குறித்து ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளதாக சட்டத்தரணிகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நீதித்துறையின் சுதந்திரம் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றின் மீது இந்த விடயம் ஏற்படுத்தக்கூடிய கடும் தாக்கத்தை கருத்தில் கொள்ளும்போது சுதந்திரம் மற்றும் பக்கச்சார்பின்மையை உறுதி செய்வதற்காக இது குறித்து விசாரணைகளை மேற்கொள்வது அவசி யம் என சட்டத்தரணிகள் கூட்டமைப்பு கூறியுள்ளது.

வெளிப்படைத்தன்மை மிக முக்கியமானது என நாங்கள் கருதுகின்றோம் என தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் கூட்டமைப்பு, இந்த விசாரணை முடிவுகள் குறித்து பொதுமக்களுக்கு தாமதமின்றி தெரிவிக்கப்படுவது அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# சீரற்ற காலநிலையால் 164 குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, ஒக். 01

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் 164 குடும்பங்களைச் சேர்ந்த 644 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் இன்றைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் 151 குடும்பங்களைச் சேர்ந்த 594 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வெள்ளப் பெருக்கினால் 60 குடும்பங்களைச் சேர்ந்த 232 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 36 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. எனினும், இதுவரை காயங்களோ, உயிரிழப்புகளோ எதுவும் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# காவல் அரணில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் மரணம்

கொழும்பு, ஒக். 01

வெலிகந்தை - மொரகஹாகந்த பகுதியில் உள்ள காவல் அரணில் கடமையாற்றிய பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெலிகந்தை பொலிஸ் நிலையத்தில் பணி புரியும், ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நேற்று முன் தினம் இரவு குறித்த பகுதியில் உள்ள பொலிஸ் காவல் அரணில் உயிரிழந்த நிலையில் அவர் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தவிடயம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான நிஹால் தல்துவ குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தில் தடம்பதித்துத் தலைநிமிர்ந்த கலாநிலையம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை


நூற்றாண்டு கடந்த கல்விப் பாரம்பரியம்
KOPAY TEACHERS' COLLEGE
අධ්‍යාපන සම්ප්‍රදාය සියවසින් ඔබ්බට
Educational Tradition Surpassing a Century

**சிவகுருநாதன் கேசவன்**
(பழைய மாணவன்)
விரிவுரையாளர், சியன தேசிய கல்விக் கல்லூரி)




ஆசிரியர் சேவை என்பது வாண்மைத்துவத்தை வேண்டி நிற்கும் சேவை என்பதனால் ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சியும் ஆற்றுப்படுத்தலும் அவசியமாகவுள்ளது. அவ்வகையில் ஆசிரியர்களாக நியமனம் பெற்ற, பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறாத ஆசிரியர்களுக்கு உரிய வாண்மைத்துவப் பயிற்சிகளை வழங்கி பயிற்சிச் சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களாக ஆசிரியர் கலாசாலைகள் செயற்பட்டு வருகின்றன. இன்று இலங்கையில் சிங்கள மொழி மூலமான நான்கு கலாசாலைகளும் தமிழ் மொழி மூலமான நான்கு கலாசாலைகளும் என எட்டு ஆசிரியர் கலாசாலைகள் இயங்கி வருகின்றன. அவற்றுள் மூத்த கலாசாலையாக விளங்கும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டை நிறைவுசெய்து, தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் அடையாளமாகத் தலைநிமிர்ந்து நிற்கின்றது. 'உன்னதமான ஆசிரியர் வாண்மைத்துவக் கல்வி மையமாக நிலைபெறுதல்' என்னும் நோக்கத்தோடு 'வாழக் கல்மின்' என்பதனை மகுடவாக்கியமாகக் கொண்டு கலாசாலை இயங்கிவருகிறது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் கல்வியில் மிசனரிமாரின் செல்வாக்கே



ச.அருணாசலம்



இந்துபோர்ட் சு. இராசரத்தினம்

மேலோங்கியிருந்தது. மிசனரிமாரால் நடத்தப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் கிறிஸ்தவர்களையே பயிற்சிக்காக உள்வாங்கிக்கொண்டன. ச. அருணாசலம் என்பவர் 1880களில், சைவ சமயத்தவராக இருந்துகொண்டே ஆசிரிய பயிற்சியைப் பெற விரும்பி முயற்சித்தாராயினும் அது சாத்தியமாகவில்லை. ச.அருணாசலம் பின்னாளில் நாவலர் வழியில் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்துடன் கல்வி வழங்குவதற்காகப் பணியாற்றியவர். அவர் சைவ சமயத்தவர்கள் பயிற்சி பெறத்தக்க கலாசாலையை நிறுவ முயன்றார். தனது ஊரான காரைநகரில் ஒரு சைவாசிரிய கலாசாலையை நிறுவினாராயினும் அதற்கு அரச அங்கீகாரம் கிடைக்கவில்லை. தொடர்ந்து கீரிமலை ஏரம்பர் மடத்திலும் பின்னர் வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையின் ஒரு பகுதியிலும் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் நிறுவப்பட்டு சில காலம் இயங்கின என்றாலும் பல்வேறு காரணங்களினால் அவற்றாலும் அரச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. தனது முயற்சியில் தளராதவரான ச.அருணாசலம், கோப்பாயைச் சேர்ந்த சு. இராசரத்தினம் அவர்களின் (பின்னாட்களில் இந்துபோர்ட் இராசரத்தினம் என அறியப்பட்டவர்) தொடர்பினால் கோப்பாயில் சைவாசிரிய கலாசாலையை நிறுவ முயன்றார். அதன் விளைவாக, சு. இராசரத்தினம், மு.சுவாமிநாதன் (இவரே கோப்பாய் சரஸ்வதி வித்தியாசாலையின் ஸ்தாபகர்), டாக்டர் கி. சுப்பிரமணியம் ஆகியோரது உழைப்பினால் கோப்பாய் நாவலடியில் 'ஐக்கிய போதனா ஆசிரிய கலாசாலை' 1916இல் இயங்கத் தொடங்கியது. எனினும் இடவசதிப் பற்றாக்குறையைக் காரணங்காட்டி அரச அங்கீகாரம் மறுக்கப்பட்டது. பின்னர் சேர். பொன். இராமநாதன் அவர்கள் இருபாலையிலிருந்த தனது நிலத்தின் (இந்து சர்வகலா சாலை அமைக்கும் நோக்கில் வைத்திருந்த சத்தியபாமாத் தோட்டத்தின்) ஒரு பகுதியை உபகரிக்க முன்வந்தமையைத் தொடர்ந்து, இன்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை அமைந்துள்ள இடத்தில் சைவாசிரிய கலாசாலை செயற்படத் தொடங்கியது.

அருணாசலம் அவர்களின் 'சைவாசிரிய கலாசாலை' என்ற கனவு, சு. இராசரத்தினம், மு.சுவாமிநாதன், டாக்டர் கி. சுப்பிரமணியம் ஆகியோரது உழைப்பினாலும் சேர். பொன். இராமநாதன் அவர்களின் வண்மையினாலும் மெய்ப்பட்டு, உருவாகிய கலாசாலையே அரச அங்கீகாரம் பெற்று 'யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரியர் கல்லூரி' என்ற பெயரில் 01.10.1923ஆம் திகதி முதல் செயற்படத் தொடங்கியது. இது தொடர்பாக செய்தி வெளியிட்ட இந்து சாதனம் (20.09.1923), "மிஷனரிமாரும் சைவர்களும் சேர்ந்து இது காறும் நடாத்தி வந்த கோப்பாய் ஆசிரியர் வித்தியாசாலை வருகிற அக்டோபர் மாசம் 1-ந் தேதி தொடக்கம் அரசினர் பொறுப்பில் எடுக்கப்பட்டு, யாழ்ப்பாணம் அரசினர் ஆசிரியர் கல்லூரி என்னும் பெயருடன் வழங்கிவரும்" எனக்குறிப்பிட்டது. இக் கல்லூரி ஆண்களுக்கான கல்லூரியாகச் செயற்பட்டது. கல்லூரியின் முதலாவது அதிபராக திரு. அ. பொன்னையா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண் டார்கள். 1947ஆம் ஆண்டு முதல் 'கோப் பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை'யாக மாறி பெண்களுக்கு மட்டும் பயிற்சியளித்தாலும் 1977ஆம் ஆண்டு முதல் இருபாலாருக்குமான கலாசாலையாகச் செயற்பட்டு வருகின்றது. யாழ் மாவட்டத்தில் 1947இல் நிறுவப்பட்டு செயற்பட்டுவந்த பலாலி ஆசிரிய கலாசாலை 2012ஆம் ஆண்டு நிரந்தரமாக மூடப்பட்டு, கோப்பாய் ஆசிரிய கலாசாலையுடன் இணைக்கப்பட்டது. 2000ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரி ஆரம்பிக்கப்பட் டது இக்கலாசாலை வளாகத்திலேயே ஆகும். கல்விக் கல்லூரியைத் தன் குழந்தையாகத் தன் மடியில் தவழவிட்ட தாய் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை என்றால் மிகையில்லை.

பாரம்பரியமானதும் விசாலமானதுமான கட்டடத்தில் இயங்கிவரும் இக்கலாசாலை பார்வையாளர் அரங்குடன் கூடிய மைதானத்தைக் கொண்டுள்ளது. ஆசிரிய மாணவர்களின் வழிபாட்டிற்காகக் கலாசாலை வளாகத்தில் அமைந்திருந்த யோக மண்டபம் 2014ஆம் ஆண்டில் ஆலயமாக பரிமாணம்பெற்றுள்ளது. அன்னை மரியாள் சிற்றாலயமும் கலாசாலை வளாகத்தில் உள்ளது. 1971இல் அமைக்கப்பட்ட 'கிருஷ்ணை படிப்பகம்' கலாசாலையின் நூலகமாக ஏழாயிரத்திற்கும் அதிகமான நூல்களுடன் பயன்பட்டுவரு கின்றது. கலைகளை வளர்க்கும் மைய மாக இரதிலக்சுமி மண்டபம் செயற்பட்டுவரு கின்றது. பழைய விடுதிக் கட்டடம் சேதமடைந்தமையால் புதிதாக விசாலமான விடுதிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. நூற்றாண்டையொட்டி திறன் வகுப்பறையொன் றும் கலாசாலையில் அமைக்கப்பட்டுள்ளது. கலாசாலையில் காலத்திற்குக் காலம் பல்வேறு மன்றங் கள் செயற்பட்டு வந்தாலும் முத்தமிழ் மன்றம், இந்து மன்றம், உடலாளர் மன்றம், நுண்கலை மன்றம், ஆங்கில மன்றம் என்பன நீண்ட பாரம்பரியத் துடன் செயலாற்றி வருகின்றன. அருணா இல்லம், சுவர்ணா இல்லம், ராதா இல்லம், காவேரி இல்லம் ஆகிய இல்லங் களாக ஆசிரிய மாணவர்கள் பிரிந்து பல்வேறு போட்டிகளிலும் பங்கேற்று வருகிறார்கள். ஆண்டுதோறும் வெளிவரும் 'கலைமலர்' கலாசாலை மாணவர்களது எழுத்தாற்றலை வெளிப்படுத்துகிறது.

கலாசாலையின் அதிபர்களாக திரு.அ.பொன்னையா, திரு.ஆ.இ.ஷண்முகரத்தினம், செல்வி.ஞானம் முருகேசு, திருமதி.இரதிலக்சுமி ஆனந்தக்குமாரசாமி, செல்வி.சத்தியமலர் சின்னப்பு, திரு.வை.கா.சிவப்பிரகாசம், திருமதி. சிவயோகநாயகி இராமநாதன், கலாநிதி காரை.செ.சுந்தரம்பிள்ளை, திரு.மு.பரஞ்சோதி, திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, செல்வி. மலர் சின்னையா, திரு.கைத்தன் பேர்னாட், திரு.வே.கா.கணபதிப் பிள்ளை, திரு.வீ.கருணலிங்கம் ஆகியோர் பதவி வகித்து, கலாசாலையின் வளர்ச்சியில் பங்களித்துள்ளனர். நூற்றாண்டு நிறைக்கும் தருணத்தில் கலாசாலையின் அதிபராக சைவத்தமிழறிஞர் செந்தமிழச் சொல்லருவி திரு.ச.லலீசன் அவர்கள் சிறப்புடன் செயலாற்றிவரு கிறார். இவ்வாண்டில் கலாசாலையில்



ச லலீசன் (கலாசாலை அதிபர்)

ஏற்பட்டுள்ள மாற்றங்களும் விருத்திகளும் அதிபரின் ஆளுமைக்குச் சான்று பகர்வன. இந்த நூறு ஆண்டு களில் ஆற்றலும் ஆளுமையும் சமூக மதிப்புமுடைய பல கல்வியாளர்கள் விரிவுரையாளர்களாகக் கடமை யாற்றியுள்ளார்கள். கடமையாற்றிவருகிறார்கள்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை தனது நூறாண்டுப் பயணத்தில், பல நூற்றுக்கணக்கான ஆற்றல்மிகு ஆசிரியர்களை உருவாக்கியுள்ளது. பல்துறை ஆற்றலாளர்களைக் கல்விச் சமூகத்துடன் இணைத்துள்ளது. அவர்கள் ஆசிரியர்களாக மட்டுமன்றி அதிபர்களாக, கல்வியதிகாரிகளாக, விரிவுரையாளர்களாக, நிர்வாகசேவை அதிகாரிகளாக என உயர்ந்து பல நிலைகளிலும் பணியாற்றியுள்ளார்கள். பணியாற்றிவருகிறார்கள். இலங்கையின் தமிழ் மொழி மூலக் கல்வி வளர்ச்சியில் கோப்பாய் ஆசிரியர் கலாசலையின் பங்கு நிராகரிக்க முடியாதது. அதுமட்டுமன்றி இசைக்கலைஞர்களாக, நடனக்கலைஞர்களாக, பேச்சாளர்களாக, எழுத்தாளர்களாக எனப் பல்வேறு தளங்களிலும் கலாசாலையின் குழந்தைகள் முத்திரை பதித்துள்ளார்கள்.

இலங்கையின் கல்வி வரலாற்றில் குறிப்பாக தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தில் தடம்பதித்த கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, நூற்றாண்டைக் கடந்து தலைநிமிர்ந்துள்ளது. இனிவருங் காலங்களிலும் கலாசாலை தனது நிகரற்ற பணியினால் எமது கல்வி வளர்ச்சியில் பணியாற்றும் என நம்பலாம். ●



# லியோ இசை வெளியீடு நிறுத்தம்

லியோ படத்தின் இசை வெளியீட்டு விழா நடத்த வில்லை என தயாரிப்பு நிறுவனமான செவன் ஸ்க்ரீன் ஸ்டுடியோ அறிவித்துள்ளது.

விஜய் நடிப்பில் லோகேஷ் கனகராஜ் இயக்கியுள்ள படம் 'லியோ' இந்தப் படத்தில் த்ரிஷா, சஞ்சய் தத், அர்ஜுன், பிரியா ஆனந்த், மிஷ்கின், கவுதம் வாசுதேவ் மேனன், மன்சூர் அலி கான் ஆகியோர் நடித்துள்ளனர். இந்தப் படத்தை செவன் ஸ்க்ரீன் ஸ்டுடியோ தயாரிக்கிறது. எதிர்வரும் 19ஆம் திகதி இந்தப் படம் வெளியாகிறது.

விஜய்யின் பிறந்த நாளான கடந்த ஜூன் 22 ஆம் தேதி லியோ படத்தின் முதல் சிங்கிளான 'நான் ரெடி' பாடலை படக் குழு வெளியிட்டது. இந்தப் பாடலை அநிருத் இசையில் நடிகர் விஜய், அனிருத், அசல் கோலார் ஆகியோர் பாடியுள்ளனர். பாடல் வரிகளை விஷ்ணு எடவன் எழுதியுள்ளார். இப்பாடல் நல்ல வரவேற்பை பெற்றது.

இதனிடையே, 'லியோ' படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து அதன் போஸ்ட் புரொடக்‌ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வரும் நிலையில், அதன் இசை வெளியீட்டு விழா குறித்து ரசிகர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்து வருகின்றனர்.

# முருகதாஸ் - சிவா கூட்டணி

சிவகார்த்திகேயன் நடிக்கவுள்ள 23ஆவது படத்தை ஏ.ஆர்.முருகதாஸ் இயக்க இருப்பதாக அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

நடிகர் சிவகார்த்திகேயன், ராஜ்குமார் பெரியசாமி இயக்கும் படத்தில் இப்போது நடித்து வருகிறார். இப் படத்தை கமல்ஹாசனின் ராஜ்கமல் நிறுவனம் தயாரிக்கிறது. இதில் சிவகார்த்திகேயன் இராணுவ மேஜராக நடிப்பதாகக் கூறப்படுகிறது. சாய்பல்லவி நாயகியாக நடிக்கிறார். இப்படத்துக்கு முன்னதாக ரவிகுமார் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'அயலான்' படம் பொங்கலுக்கு திரைக்கு வருகிறது.

இப்படங்களுக்குப் பிறகு சிவகார்த்திகேயன் நடிக்க வுள்ள 23வது படத்தை ஏ.ஆர்.முருகதாஸ் இயக்க இருப்பதாக அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.



# அஜித்-விஜய் புதிய தொடக்கம்!



'விஜய் 68' மற்றும் அஜித்தின் 'விடாமுயற்சி' இரண்டு திரைப்படங்களின் படப்பிடிப்புகள் இந்த மாதம் தொடங்கவுள்ளன.

இந்த ஆண்டு தொடக்கத்தில் விஜய் 'வாரிசு', அஜித் 'துணிவு' என இருவரும் ஒரே பந்தயத்தில் தத்தம் படங்களை வெளியிட்டனர். அடுத்தடுத்த படங்களுக்கு நகரும் விஜய் லோகேஷ் கனகராஜ் இயக்கும் 'லியோ' படத்தை முடித்து அடுத்த படத்துக்கு தயாராகிவிட்டார். 'லியோ' எதிர்வரும் 19ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகிறது.

ஆனால், அஜித்தை பொறுத்தவரை 'துணிவு' படத்துக்குப் பிறகு அவரது அடுத்த படத்துக்கான நகர்வு நிதானமாகவே இருக்கிறது. தனது மோட்டார் சைக்கிள் பயணத்தை முடித்து வந்த அஜித் தற்போது 'விடாமுயற்சி' படத்துக்கு தயாராகியுள்ளார்.


இந்நிலையில், வெங்கட்பிரபு இயக்கத்தில் விஜய் நடிக்கும் புதிய படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் ஒக்ரோபர் முதல் வாரம் தொடங்கும் என தகவல் வெளியாகியுள்ளது. இதேபோல மகிழ்திருமேனி இயக்கத்தில் அஜித் நடிக்கும் 'விடாமுயற்சி' படத்தின் படப்பிடிப்பு துபாயில் ஒக்ரோபர் 4ஆம் திகதி தொடங்கவுள்ளன. இருவரின் படப்பிடிப்புகளுமே ஒரே நேரத்தில் தொடங்க உள்ளதால், பட வெளியீடும் ஒரேநேரத்தில் நிகழுமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**திரைப்படம் - சந்திரமுகி 2**
**இயக்கம் - பி.வாசு**
**இசை - கீரவாணி**
**நடிப்பு - ராகவா லாரன்ஸ், கங்கனா ரணவத், மகிமா நம்பியார், வடிவேலு**

பி. வாசு இயக்கத்தில், ரஜினிகாந்த், ஜோதிகா, பிரபு, நயன்தாரா, வடிவேலு மற்றும் பலர் நடித்து 2005இல் வெளிவந்த 'சந்திரமுகி' படத்தின் இரண்டாம் பாகமாக இப்படம் வெளிவந்துள்ளது. அந்தப் படத்தில் நடித்த வடிவேலு மட்டுமே இந்த இரண்டாம் பாகத்திலும் நடித்திருக்கும் ஒரே நடிகர்.

முதல் பாகத்தைப் போல இருக்கக் கூடாது என இரண்டாம் பாகத்தில் சில பல புதுக் கதைகளைச் சொல்லியிருக்கிறார் இயக்குநர் பி. வாசு. முதல் பாகத்தில் இருந்த அதே போன்றதொரு பங்களா இந்தப் படத்திலும் வருகிறது. ஆனால், எந்த பயத்தையும் ஏற்படுத்தவில்லை. அதே சமயம், பின்னணி கதையில் வரும் சந்திரமுகி பற்றிய கதையும் அதில் கங்கனாவின் அழகான நடிப்பும் இந்தப் படத்தைக் காப்பாற்றியிருக்கிறது.

கோடீஸ்வரியான ராதிகா அவரின் அண்ணன் குடும்பத்தினருடனும் தனது மகள் லட்சுமி மேனனுடன் ஒரே வீட்டில் இருக்கிறார்கள். குடும்ப குருஜி சொன்னதற்காக அவர்களது குலதெய்வம் இருக்கும் ஊருக்கு செல்கிறார்கள். ராதிகாவின் மூத்த மகள் காதலனுடன் வீட்டை விட்டு ஓடிப் போனவர். அவருக்கு இரண்டு குழந்தைகள். விபத்தில் ராதிகாவின் மகளும் மருமகனும் இறந்து போக அந்தக் குழந்தைகளுக்கு பாதுகாவலராக இருக்கும் ராகவா லாரன்ஸ் அந்த குழந்தைகளையும் ஊருக்குக் கூட்டிப் போகிறார். அவர்கள் தங்கும் பங்களா வடிவேலுவுக்கு சொந்தமானது. அங்கு சந்திரமுகி ஆவி லட்சுமி மேனன் உடம்பில் புகுந்து கொள்கிறது. யாரையோ கொல்லத் துடிக்கிறது. சந்திரமுகி யார்?, யாரை கொல்ல நினைக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.




முதல் பாகம் போல இந்த இரண்டாம் பாகத்திலும் நகைச்சுவை தோரணங்கள் இருக்கும் என எதிர்பார்த்தால் கொஞ்சம் ஏமாற்றமே. அதே சமயம் யாரும் எதிர்பார்க்காத வண்ணம் சரித்திர கதையை சுவாரசியமாகக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் பி.வாசு. பின்னணி கதையாக வரும் அந்தக் கதைதான் இந்தப் படத்தை முழுவதுமாக தாங்கிப் பிடிக்கிறது. அதில் செங்கோட்டையன் கதாபாத்திரத்தில் ராகவா லாரன்ஸ், சந்திரமுகி கதாபாத்திரத்தில் கங்கனா ரணவத் இருவரும் போட்டி போட்டு நடித்திருக்கிறார்கள். அக்காட்சிகளில் கங்கனா தமிழில் பேசாமல் தெலுங்கில் பேசுவது வருத்தம். இருந்தாலும் அவரது அழகும்




நடிப்பும் அதைக் கடந்து போக வைக்கிறது.

இடைவேளை வரை படம் முழுவதும் சந்திரமுகி பேய் இருக்கும் அந்த பங்களாவில்தான் நடக்கிறது. ராகவா லாரன்ஸ், வடிவேலு, ராதிகா, மகிமா நம்பியார், லட்சுமி மேனன், சிருஷ்டி டாங்கே, சுபிக்‌ஷா, சுரேஷ் மேனன், ரவி மரியா, விக் னேஷ் என பலருக்கும் அந்த பங்களா காட்சிகளில் முடிந்தவரையில் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். இடைவேளையின் போது வரும் திருப்பம் மட்டும்தான் அதில் சுவாரசியமாக இருக்கிறது. கீரவாணி இசையில் கங்கனா பாடி, ஆடும் தெலுங்கு பாடல் ரசிக்க வைக்கிறது. மற்ற பாடல்கள் படத்துக்கு வேகத் தடை. பின்னணி இசை யில் அதிரடி காட்டியிருக்கிறார். ஆர். டி. ராஜசேகர் ஒளிப்பதிவு, தோட்டா தரணி அரங்க அமைப்பு இந்தப் படத்தின் இரண்டு கண்கள். அந்த சந்திரமுகி பங்களாவை முதல் பாகத்தில் இருந்ததைப் போன்றே வடிவமைத்திருக்கிறார்கள். கிராபிக்ஸ் காட்சிகள் மிகச் சுமார் ரகம்.

இடைவேளை வரை இன்னும் அதிகமான நகைச்சுவை காட்சிகளை சேர்த்து படத்தைக் கொடுத்திருந்தால் முதல் பாகத்துக்கு கொஞ்சம் பக்கமாகப் படம் சென்றிருக்கும்.

# அரண்மனை 4

சுந்தர்.சி இயக்கத்தில் உருவாகியுள்ள 'அரண்மனை 4' படத்தின் முதல் தோற்றத்தை படக்குழு வெளியிட்டுள்ளது. மேலும், படம் அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகையையொட்டி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு சுந்தர்.சி இயக்கத்தில் ஹன்சிகா, ஆன்ட்ரியா, வினய் உள்ளிட்டோர் நடிப்பில் வெளியானது 'அரண்மனை'. 2016ஆம் ஆண்டு வெளியான இப்படத்தின் இரண்டாம் பாகத்தில் சித்தார்த் நடித்திருந்தார். 2021ஆம் ஆண்டு இப்படத்தின் மூன்றாம் பாகம் வெளியானது. ஆர்யா, ராஷிகண்ணா, சாக்ஷி அகர்வால் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர்.

ஹாரர் - நகைச்சுவை கலந்து வெளியாகும் இப்படத்தின் நான்காவது பாகத்துக்கான அறிவிப்பை படக்குழு தற்போது வெளியிட்டுள்ளது. இந்தப்படத்தையும் சுந்தர்.சியே இயக்குகிறார். இப்படத்தில் சுந்தர் சி, தமன்னா, ராஷி கண்ணா, யோகி பாபு, கோவை சரளா, சிங்கம்புலி, வி. ரி. வி. கணேஷ், டில்லி கணேஷ், ஜே பி, விச்சு, கே ஜி எஸ்ப் ராம், சேசு, சந்தோஷ் பிரதாப், மொட்டை ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். ஹிப்ஹாப் ஆதி படத்துக்கு இசையமைக்கிறார். இந்நிலையில் இப்படத்தின் முதல் தோற்றத்தை படக்குழு வெளியிட்டுள்ளது.



# அஷ்வினின் மீள் வருகை

உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணியில் தமிழக வீரரான அஷ்வினும் சேர்க்கப்பட்டுள்ளார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டு சபை அறிவித்துள்ளது.

வரும் 5ஆம் திகதி தொடங்க விருக்கும் உலகக்கிண்ணத்துக்கான இந்திய அணி பல நாள்களுக்கு முன்பாகவே அறிவிக்கப்பட்டுவிட் டது. அந்த அணியில் அஷ்வின் உட்பட எந்தத் தமிழக வீரருமே இடம்பிடித்திருக்கவில்லை. உலகக் கிண்ணத்துக்காக அறிவிக்கப்பட்ட அதே அணியோடுதான் இந்திய அணி ஆசியக் கிண்ணத்திலும் ஆடி யிருந்தது. அப்படி ஆசிய கிண்ணத் தில் ஆடியபோது அதன் இறுதிப் போட்டிக்கு முன்பு அக்சர் பட் டேல் காயமடைந்தார். உடனடி யாக ஆசியக் கிண்ணத்திலிருந்தும் விலகினார். அவருக்கு பதிலாக உட னடியாக தமிழக வீரரான வாஷிங்டன் சுந்தரை ஆசியக் கிண் ணத்துக்கான அணியில் எடுத்தார் கள். அவரும் ஆசியக் கிண்ணத்தின் இறுதிப்போட்டியில் இந்திய அணி யின் ஆடும் பதினொருவரில் இருந் தார்.



அக்சர் பட்டேலுக்கு ஏற்பட்ட காயம் 7-8 நாள்களுக்குள் சரியாகிவிடும், அவுஸ்திரேலியா விற்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியிலேயே அவர் களமிறங் கக்கூடும் என்றும் அனுமானிக்கப் பட்டது. ஆனாலும் உலகக் கிண்ண அணியிலும் அக்சர் இருந்ததால் இந்திய அணி முயற்சி எடுக்க விரும்பவில்லை. ஒருவேளை அக்சர் குணமடையவில்லை என்றால் என்ன செய்யலாம் என்கிற கேள் விக்கு விடையாக அஷ்வினையும் வாஷிங்டன் சுந்தரையும் அவுஸ்தி ரேலியா தொடருக்கான அணியில் எடுத்தது இந்திய கிரிக்கெட் சபை.

இருவருமே இந்தத் தொடரின் போட்டிகளில் ஆடினர். அஷ்வின் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் வோர்ணர், லபுஷான், இங்லிஸ் என மூன்று முக்கியமான வீரர்களின் விக்கெட்களை எடுத்து அசத்தியி ருந்தார். மூன்றாவது போட்டியில் வாஷிங்டன் சுந்தரும் பதினொரு வரில் இடம்பிடித்தி ருந்தார்.

செப்ரெம்பர் 28இற்குள் ஒவ்வொரு அணியும் தங்களின் இறுதியான உலகக் கிண்ண அணியை அறிவித்தாக வேண்டும் என ஐ.சி.சி கெடு விதித்திருந்தது. எதிர்பார்த்தபடி அவுஸ்திரேலியா வுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டிக்குள் அக்சர் பட்டேல் குணமடையவில்லை. அணியில் மாற்றம் செய்வதற்கான இறுதி தேதியும் வந்துவிட்டதால் ஏற்கெனவே தயாராக வைக்கப் பட்டிருந்த அஷ்வினை இப்போது உலகக் கிண்ணத்துக்கான அணியில் சேர்த்திருக்கிறது இந்தியா.

அஷ்வின் 2011 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் நடந்த ஒருநாள் உலகக் கிண்ணத்தில் இந்திய அணியில் இடம்பிடித்திருந்தார். ஆனால், 2019ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த உலகக் கிண்ணத்துக்கான அணியில் அவர் இடம்பெறவில்லை. இந்தச் சமயத்தில் அஷ்வினை அப்படியே முழுமையாக டெஸ்ட் ஸ்பெச லிஸ்ட்டாகவே இந்தியா பார்த்து வந்தது.

இந்நிலையில் இப்போது உலகக்கிண்ணத்துக்கான இந்திய அணியில் மீண்டும் இடம்பிடித்து மீள் வருகை கொடுத்துள்ளார் அஷ்வின்!



## நான் இன்னும் ஆடுவேன்...!

சர்வதேச உதைபந்தாட்டத்தில் முன்னணி வீரராக வலம்வருபவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ.

ரொனால்டோவை தவிர்த்துவிட்டு சமகால உதை பந்தாட்ட வரலாற்றை எழுதிட முடியாது. அந்த அள வுக்கு தனக்கென தனித்துவமிக்க ஆட்டத்தையும் திர ளான ரசிகர் கூட்டத்தையும் வைத்திருக்கிறார். 37 வயதான இவர் உதைபந்தாட்ட போட்டிகளில் பல வேறு சாதனைகளைப் படைத்துள்ளார். சிறந்த வீரர் களுக்கென வருடாவருடம் வழங்கப்படும் "தங்க காலணி" விருதை 5 முறை வென்றுள்ளார்.

வருடத்துக்கு 177 மில்லியன் யூரோ (இலங்கை மதிப் பில் ரூ.7,965 கோடி) சம்பளத்துக்கு ரொனால்டோ அல் நஸர் கழகத்தில் இணைந்து உதைபந்தாட்டப் போட்டி களில் விளையாடி வருகிறார். இந்த நிலையில் ரொனால்டோ உதைபந்தாட்ட விளையாட்டில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக இணையதளத்தில் வதந்திகள் பரவின. இதுகுறித்து தற்போது ரொனால்டோ விளக்கம் அளித்திருக்கிறார்.

"இதுபோன்ற வதந்திகள் உண்மையல்ல. என் கால் கள் சொல்லும் வரை நான் உதைபந்து விளையாடுவேன். இன்னும் அதிக கோல்கள் அடிக்க நான் விரும்புகிறேன். இன்னும் பல வெற்றிகளை விரும்புகிறேன். ஆனால், நான் விளையாடி முடித்துவிட்டேன் என்று கூறுகிறார் கள். அது உண்மையல்ல என்பதை போட்டிகளின் மூலம் நிரூபித்து வருகிறேன் என்று தெரிவித்துள்ளார்." ரொனால்டோவின் இந்த விளக்கம் அவரது ரசிகர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

# 90 மீற்றருக்கு 8 ஓட்டம் வேண்டும்!

அனைவரும் எதிர்பார்த்துகொண்டி ருக்கும் உலகக் கிண்ணம் வரும் ஒக்ரோபர் 5 ஆம் திகதி இந்தியாவில் தொடங்க விருக்கிறது. இந்தத் தொடருக் கான பயிற்சி ஆட்டங்கள் தொடங்கி இருக்கின்றன. பயிற்சி ஆட்டத்தில் இந் திய அணி முதலில் இங்கிலாந்தை எதிர் கொள்ள இருக்கிறது. இந்நிலையில் இந் திய அணியின் கேப்டன் ரோஹித் சர்மா யூரியூப் காணொ லியில் பேசியவை தற்போது சமூக வலை தளங்களில் வைர லாகி வருகிறது .

அதில் ஐ.சி.சியின் ஏதாவது ஒரு விதியை மாற்ற வேண்டுமென்றால் எதை மாற்றுவீர்கள் எனக் கேட்கப்பட்டது. அதற்கு "துடுப்பாட்ட வீரர்கள் 90 மீற் றருக்கு சிக்ஸ் அடித்தால் 8 ஓட்டங்கள், 100 மீற்றருக்கு சிக்ஸ் அடித் தால் 10 ஓட்டங் கள் என நிர்ணயித்தால் கிரிக்கெட் மேலும் சுவாரஸ்யமாக இருக்கும். ஆனால் தற்போது இருக்கும் விதிப்படி எல்லைக் கோட்டை தாண்டினாலே அதற்கு சிக்ஸர் வழங்கப்படுகிறது. அது எவ்வளவு தூர மாக இருந்தாலும் சரி அதுக்கு வெறும் ஆறு ரன்கள்தான் கொடுக்கப்படுகிறது.

எல்லாரும் 100 மீற்றர் தூரத்துக்கும் அதிகமாக கஷ்டப்பட்டு சிக்ஸர் அடிக்கி றார்கள். அதற்கும் 6 ஓட்டங்கள்தான் கிடைக்கிறது. சிக்ஸர் போகும் தூரம் வைத்து ஓட்டங்கள் வழங்க வேண்டும். அதுவே சரியானதாக இருக்கும் என ரோஹித் சர்மா கூறியிருக்கிறார். ரோஹித் தின் இந்த கருத்து சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவி வருகிறது.



# இலங்கை மின்சார சபை கோரும் கட்டண திருத்தம் நியாயமற்றது!

## ஜனக ரத்நாயக்க

கொழும்பு, செப். 01

இலங்கை மின்சார சபை கோரும் கட்டணத் திருத்தம் சட்டவிரோதமானதென பொது பயன்பாடுகள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

22 வீதம் அல்லது அனைத்து அலகுகளுக்கும் 8 ரூபாய் அதிகரிப்பு கோரப்பட்டுள்ளதாக ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபை கோரியுள்ள புதிய கட்டணத் திருத்தத்திற்கு அமைவாக, 0-30 அலகுகளுக்கு நுகர்வோர் செலுத்த வேண்டிய கட்டணம் 80 வீதத்தால் அதிகரிக்கப்படும். எவ்வாறாயினும், பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவானது இவ்வருடத்தில் மூன்றாவது தடவையாக மின்சார கட்டணத் திருத்தம் தொடர்பில் பொதுமக்களிடம் கருத்துகளை கேட்டறியும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதுடன், எதிர்வரும் 18 ஆம் திகதி வரை அவற்றை முன்வைக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார உற்பத்திக்காக செலவிடப்படும் தொகையை ஈடு செய்யும் வகையில் கட்டண திருத்தத்திற்கு அனுமதியளிக்குமாறு பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவு நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமற் போனதால், மின் உற்பத்திக்கு கூடுதல் செலவு ஏற்படும் என மின்சார சபை கூறியுள்ளது. இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் நீர் மின் திறன்4500 ஜிகாவாட் ஆகும்.

இலங்கை மின்சார சபையின் நிலைப்பாட்டின் அடிப்படையில், 3750 ஜிகாவாட் நீர் மின் உற்பத்தியை மாத்திரமே பெற முடியுமென தெரிவிக் கப்பட்டுள்ளது.


அனல் மின் நிலையங்களிலிருந்து பற்றாக்குறையாகவுள்ள 750 ஜிகாவாட் நீர் மின் உற்பத்தியை பெறுவதற்கான கூடுதல் செலவை மீட்டெடுப்பதே மின் கட்டணத்தை அதிகரிப்பதன் நோக்கம் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக்க ரத்நாயக்க இது தொடர்பில் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்.

“2022 ஆம் அண்டு ஆகஸ்ட் மாதத்தில் இருந்து மின்சாரக் கட்டணம் 250 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை மின்சார சபையின் முகாமைத்துவ பிழையால் இறுதியில் மின்சார கட்டணத்தை அதிகரிக்கின்றனர். இது தவறான விடயமாகும். பூச்சியம் அலகில் இருந்து 30 அலகு வரை 80 வீதம் அதிகரிக் கப்போகிறார்கள். 31 முதல் 60 வரையான அலகிற்கு 31 ரூபாவாக உள்ள அலகை 33 ரூபாவாக அதிகரித்து, 32 வீத அதிகரிப்பையும் கோரியுள்ளனர். அதற்கு மேலான அலகுகளுக்கு 25%, 22% மற்றும் 16 வீதமாக அதிகரிக்கவே யோசனை முன்வைத்துள்ளனர் - என்றார்.

# இலங்கையில் நிபா வைரஸ் பரவும் ஆபத்து குறைவானதே!

## சுகாதார மேம்பாட்டு பணியகம்




கொழும்பு, ஒக். 01

அயல் நாடான இந்தியாவில் பரவிய நிபா வைரஸ் தொடர்பில் இலங்கை குறைந்த ஆபத்தை எதிர்கொண்டுள்ளதாக இலங்கையின் சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தியாவில் கேரளா மாநிலத்தில் இதுவரை 6 பேருக்கு மாத்திரமே நிபா வைரஸ் பாதிப்பு உறுதியாகியுள்ளது.

கேரளாவில் நிபா வைரஸ் பரவல் ஆகஸ்ட் மாதத்தின் பிற்பகுதியில் வெளிப்பட்டது. இதுவரை 6 பேர் பாதிக்கப்பட் டுள்ள நிலையில் 2 பேர் உயிரி ழந்தனர். .

பாதிக்கப்பட்ட நோயாளிகளுடன் தொடர்பில் இருந்த 700இற்கும் மேற்பட்ட நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, பரிசோதனை செய்யப்பட்டனர். அவர்களில், கடந்த செப்ரெம்பர் 22 ஆம் திகதி வரை தொற்று உறுதியாகவில்லை.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நோய் பரவுவதைத் தடுக்க , மாநில அதிகாரிகள் நோயின் பிறப்பிடமான பகுதியில் பொது இடங்களை முடக்கினர். கடந்த 5 ஆண்டுகளில் கேரளாவை தாக்கும் நான்காவது நிபா வைரஸ் தொற்றாகும். ஒவ்வொரு முறையும், நோய் நன்கு கட்டுப்படுத்தப்பட்டு, சரியான நேரத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பிறப்பிடத்துக்கு அப்பால் பரவாமல் இருப்பது உறுதி செய்யப்படுகிறது- எனத் தெரிவித்துள்ளது.

(ஐ)

# பெரஹராவில் பங்கேற்க சென்ற யானையின் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, ஒக். 01

மஹியங்கனை ரஜமஹா விகாரையின் வருடாந்த ரந்தோலி பெரஹெராவில் பங்கேற்க வந்த யானை மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற குறித்த துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட யானைக்கு வனவிலங்கு பாதுகாப்புத் துறை கால்நடை மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

“சீதா“ என்று அழைக்கப்படும் 48 வயதுடைய யானையை, காட்டு யானை என்று தவறாக நினைத்து துப் பாக்கி பிரயோகம் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மாபாகடவெவ வனவிலங்கு பிராந்திய அலுவலகத்தின் சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரி ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)





